தேரையர் நோயின் சாரம்

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

டாக்டர் **மோ. மல்லிகா, B.Sc., B.S.M.S.**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

மே - 1991

தேரையர் நோயின் சாரம்

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

டாக்டர் **மோ. மல்லிகா, B.Sc., B.S.M.S.**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

மே - 1991

டாக்டர் மோ. மல்லிகா,
சுவடியியல் பகுதி நேர மாணவி,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

உறுதிமொழி

"தேரையர் நோயின் சாரம்" என்னும் இப்பதிப்பாய்வேடு சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக அளிக்கப் பெறுகிறது. இப்பதிப்பாய்வேடு என் முயற்சியில் உருவானதே யாகும். இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிக்கும் இப்பதிப்பாய்வேடு அளிக்கப் பெறவில்லை என உறுதி அளிக்கின்றேன்.

சென்னை: 600 113
நாள்: 20.05.'91.

மோ. மல்லிகா
20/5/91
(மோ. மல்லிகா)

டாக்டர் பு. சுப்பிரமணியம்.
சுவடி இயல் துறை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

சான்றிதழ்

"தேரையர் நோயின் சாரம்" என்னும் இப்பதிப்பாய்வேடு இந்நிறுவனச் சுவடியியல் மாணவர் டாக்டர் திருமதி. மோ. மல்லிகா, பிஎஸ். ஸி., பி.ஐ.எம்.எஸ்., அவர்களால் 1989 - 91 ஆம் ஆண்டில் சுவடி இயல் பட்டயத்திற்காக உருவாக்கப் பெற்றது எனவும், இந்த ஆய்வேட்டின் பொருட்டு இதுவரை இவருக்கு வேறு பட்டம் எதுவும் அளிக்கப் பெறவில்லை எனவும் சான்று வழங்குகிறேன்.

சென்னை: 600 113
நாள்: 20.05.'91.

(பு சுப்பிரமணியம்)
டாக்டர் பு. சுப்பிரமணியம்,
சுவடி இயல் துறை,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

நன்றியுரை

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தி வரும் சுவடி இயல் பட்டய வகுப்பில் சேர, சேரும் தகுதியுடையவளாக என்னைத் தேர்ந்தெடுத்து, இப்பயிற்சி முடிய எல்லா வகையிலும் எனக்கு உறுதுணையாக இருந்த இந்நிறுவன இயக்குநர் வணக்கத்திற்குரிய முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கும், பயிற்சியின் இறுதியாண்டில் தேர்வு முதலிய நிலைகளில் உதவி புரிந்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும் நன்றியுடையவளாவேன்.

சுவடியியல் பயிற்சி, மொழி வரலாறு, செய்யுளியல், பாட்டியல் போன்ற பாடங்களில் எனக்குப் பாடம் கற்பித்துத் தேர்ச்சி பெற வழி வகுத்துத் தந்த பேராசிரியப் பெருந்தகைகளான என் வணக்கத்திற்குரிய முனைவர் பூ. சுப்பிரமணியம், முனைவர் ச. சிவகாமி, முனைவர் சி. சசிவல்லி, முனைவர் டி. மகாலட்சுமி ஆகியோருக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இவ்வாய்வேட்டிற்கு அடிப்படையான சுவடியையும் துணையாக பல சுவடிகளையும், படியெடுத்துக் கொள்ளவும், ஒப்பு நோக்கவும், அனுமதி அளித்து உதவிய சென்னை அரசினர் சுவடி நூலகக் காப்பாட்சியர் அவர்களுக்கும் நூலக நண்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

இப்பதிப்பாய்வேடு உருவாக உதவிய என்னுடன் சுவடியியல் பயிற்சி பெற்ற என் உற்ற தோழி செல்வி அ. வாசுகி தேவி அவர்களுக்கும் மற்றும் உடன் பயிற்சியாளர்களான திரு. சு. செல்வரங்கம், திரு. வே. நெடுஞ்செழியன், திரு. மொ. மருதமுத்து ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் தட்டச்சு செய்ய ஏற்பாடு செய்து உதவிய திரு. கி.மு. கந்தசாமி அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

மோ. மல்லிகா

மோ. மல்லிகா.

அடக்கம்

வரிசை எண்	பொருள்	பக்கங்கள்
1	உறுதி மொழி	
2	சான்றிதழ்	
3	நன்றியுரை	
4	நோயும் மருந்தும்	1 - 6
5	நுழைவு - பதிப்புரை	7 - 15
	நூலாசிரியர்	16 - 26
6	ஆய்வு -	
	ஆய்வுரை பொது நிலை	27 - 46
	ஆய்வுரை சிறப்பு நிலை	47 - 80
7	நூல்	81 - 107
8	செய்தி	108 - 162
9	துணை -	
	துணை நூல்கள்	163
	பாட்டு முதற் குறிப்பு	164 - 169
	சொல்லடைவு	170 - 184
	மூலிகைப் படங்கள்	185 - 204

நோயும் மருந்தும்

நோயும் மருந்தும்

அசீரணம் தீர	...	10, 19,38
அண்ட வாதம் தீர	...	17
அத்தி சுரம்	...	35
அதிசாரந் தீர	...	82
அய்யம் - 20 தீர	...	825
அரிகரப்பான் தீர	...	37
அஜபானம்	...	28
அஷ்ட குன்மம் தீர	...	16
அஸ்தி சுரம் தீர	...	91
இரத்த பித்தம் தீர	...	24
இரத்த பிரமேகந் தீர	....	122
இரத்த மூலம் தீர	...	89
இருமல் தீர	...	2, 27, 43
ஈளை தீர	...	29, 30, 33
ஈளை யிருமல் தீர	...	23
உட்காய்ச்சல் தீர	...	22
உதரவாயு தீர	...	7
உப்புசம் தீர	...	27
எரிகுன்மம் தீர	...	18,123
எரிவாதம் தீர	...	6
எருவாணம் தீர	...	42
ஐயம் தீர	...	35

ஒரு குன்மம் தீர ... 88

கணபதி துதி ... 1

கர்ப்பவிப்புருதி தீர ... 77, 95

கர்ப்பான் தீர ... 48, 49

கல்லடைப்பு தீர ... 83, 85, 104, 116, 129, 133

காசந்தீர ... 23

காதெழுச்சி தீர ... 80

காமாலை தீர ... 71, 72, 94

கிரந்தி தீர ... 42, 55, 60

கிருமி தீர ... 12, 19

கிருணி தீர ... 10, 63, 64, 66, 69, 72, 89

குளிர் சுரம் தீர ... 37

குற்றிருமல் தீர ... 96

குன்மவலி தீர ... 12

சகல சுரம் தீர ... 131

சகல தோஷம் தீர ... 19

சத்தி தீர ... 6, 14

சனி தீர ... 2

சன்னி தீர ... 81, 131

சிரங்கு தீர ... 117

சிலேட்டும சுரம் தீர ... 5

சிலேட்டுமத்தால் வந்த

நோய் தீர ... 32

சிலேட்டுமம் தீர ... 42

சுரம் தீர ... 19

சுவாச காசந்தீர ... 30, 33

சுவாசந் தீர .. 34

சூலை தீர ... 19, 55, 117

செங்கரப்பான் தீர ... 44, 45

சொறி தீர ... 117

தசமூலம் தீர ... 72

தாகச் சுரம் தீர ... 35

தாகம் தீர ... 41

தாப சுரம் தீர ... 37

துன்மாமிசம் தீர ... 129

தோஷ கரப்பான் தீர ... 46

நீர்க்கட்டு தீர ... 8

நீர்க் கடுப்பு தீர ... 97, 110

நீர்க் கழிச்சல் தீர ... 74

நீர்ச் செறிப்புத் தீர ... 129

நீரடைப்பு தீர ... 84, 85, 105

பஞ்ச காசம் தீர ... 30

பஞ்ச சுவாச காசந் தீர ... 31

பட்சி தோஷம் தீர ... 71

பல்வலி தீர ... 132

பல கரப்பன் தீர ... 50

பாண்டு தீர ... 72

பித்த சுரம் தீர ... 4

பித்தம் தீர ... 11, 15, 35, 42, 72

பிரமியம் தீர ... 22

பிரமை தீர ... 41

பிள்ளை பெற்ற வயிற்றில்
சோவைத் தீர ... 93

பீனிகை தீர ... 13

பீனிசம் தீர ... 2

புண் தீர ... 47

பெரும்பாடு தீர ... 75, 87, 98, 100, 102

பேய்த்தும்மட்டிக்காய்
எண்ணெய் ... 70

பேய்நாய்க்கடி தீர ... 99

மகோதரம் தீர ... 62

மந்தம் தீர ... 39

மலக்கட்டால் வீக்கியதை
தீர ... 54

மலகட்டு தீர ... 58

மலசலங்கட்டி விம்மி வீங்கிய
கரப்பான் தீர ... 53

மலம் ... 52

மூத்திரப் பெருக்கு தீர ... 130

மூலப்பிரமேயம் தீர	...	106
மேகம் தீர	...	22, 131
மேல் பூச	...	52
வயிற்றுவலி தீர	...	55
வலி குன்மம் தீர	...	92
வறட்சியால் உடம்பு உலரல் தீர	...	107
வறட்சியிருமல் தீர	...	90
வாத கரப்பான் தீர	...	43
வாத குன்மம் தீர	...	70
வாத குஷ்டந் தீர	...	55
வாத சுரம் தீர	...	3
வாத சுரோணிதந் தீர	...	115
வாதம் தீர	...	35, 42, 61
வாயு கரப்பான் தீர	...	21
வாயுக் குணம் தீர	...	65, 68
வாயுத்தம்பன நோய் தீர	...	113
விக்கல் தீர	...	14, 30
விச்சுரம் சந்நி தீர	...	126
விச்சுழி யிருமல் தீர	...	41
விப்புருதி தீர	...	76
விம்மி வீங்கி கரப்பான் தீர	...	53

வைரவாதம் தீர	...	9
விஷந்தீர	...	40
வீக்கந்தீர	...	51, 52, 73
வெப்பு வாயு தீர	...	58

இயல் ஒன்று

நுழைவு

பதிப்புரை

சுவடி இயல் மாணவர்

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தி வரும் சுவடி இயல்பட்டய வகுப்பில் பகுதி நேர மாணவராகப் பயிலும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 1989 ஆகஸ்டு மாதம் முதல் வகுப்பில் சேர்ந்து பயிலத் தொடங்கினேன்.

சுவடி இயல் கல்வி

இப்பயிற்சியில் சுவடி இயல் பற்றிய பொதுச் செய்திகளையும் சிறப்புச் செய்திகளையும் அறிய முடிந்தது. இதில் சுவடி பற்றிய செய்திகள், ஆய்வு பற்றிய செய்திகள், பதிப்பும் அச்சும் பற்றிய செய்திகள் என்ற மூன்று பெருந்தலைப்புகளில் பல செய்திகள் கிடைத்தன. இவற்றிற்குத் துணையாகத் தமிழ் மொழி எழுத்து வரலாறு, யாப்பியல், பாட்டியல் என்பன பற்றிய செய்திகளையும் பெற முடிந்தது.

செய்முறைப் பயிற்சி

இந்தக் கல்விமுறையினைத் தவிர நல்ல தொரு சுவடியினைத் தேர்ந்தெடுத்து அதனை நூல்வடிவில் பதிப்பித்துக் கொடுக்கவேண்டும் என்பதும் பாடத் திட்டத்தில் ஒரு பகுதியான செய்முறைப் பயிற்சிப் பாடமாகும். இவ்வாறு சுவடியைப் பதிப்பிப்பதற்குத் துணையாகப் பலவகைச் சுவடிகளைப் பார்த்து எழுதும் பயிற்சி நாள்தோறும் நடைபெறும். அப்பயிற்சியால் சுவடி எழுத்துமுறைகள், பல வகையான எழுத்துக் குறியீடுகள், பல கையெழுத்து வகைகள், கிரந்தம் முதலான பல எழுத்துகள் கலந்து அமையும் சுவடி அமைப்பு போன்ற பல செய்திகளில்

பழக்கம் வழக்கம் ஏற்பட்டது. பாடல்களை அடி, சீர் முதலியன பிரித்து முறையாக எழுத வேண்டிய பயிற்சியில் அனுபவம் கிடைத்தது. இப்பயிற்சிகளால் தனியே, ஒருமுழுமையான சுவடியை முறையாகப் பாடல் அமைப்பில் எடுத்து எழுதிக் காட்டும் தன்னம்பிக்கை தோன்றியது. இந்த நிலையில் தான் ஒரு சுவடியை ஆய்வேட்டிற்காகத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தது.

சுவடித் தேர்வு

நூறு பாடல்களுக்குக் குறையாத சுவடியாக எடுத்தால்தான் பதிப்பு ஆய்வேட்டை நூறு பக்க அளவில் உருவாக்க முடியும். நானூறு, ஐந்நூறு பாடல்களைக் கொண்ட சுவடியாக இருப்பின் குறித்த காலத்தில் முடிக்க இயலாது; பொருட்செலவும் மிகுதியாகும். இந்த நிலையில் ஒரு அளவான சுவடியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது சுவடியியல் மாணவர் எல்லோருக்குமே உரியது.

பலநாள் பல சுவடிகளைத் துருவித்துருவிப் பார்த்து முடிவில் ஒரு சுவடியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையில் அநேக நாட்களைச் செலவிட நேர்ந்தது. நல்லதொரு சுவடியின் பெயரைப் பட்டியலில் காணும்போது, நம் நினைவிற்கு எட்டிய வரை இது பெயர்கூடக் கேள்விப்பட்டது இல்லை என்று முடிவு செய்கிறோம்; அச்சான நூல் பட்டியல்களை உற்று நோக்குகிறோம். அந்த நூல் பெயர் காணப் பெறவில்லை. பிறகு ஒரு நாள் எங்கோ ஒரு நூலகத்தில் அந்த

அந்த நூலைக் காண முடிகிறது. ஒப்பிட்டுப் பார்த்தால் அதே சுவடி நூல் என்பது தெரிகிறது. மீண்டும் வேறு சுவடி தேட வேண்டிய நிலை.

அச்சாகாத நூல்கள் பெயர் என்று முடிவு செய்த சுவடியை நோக்கும் போது, மிகக் குறைவான பாடல்களைக் கொண்டதாக அல்லது மிக அதிகமான பாடல்களோடு கூடிய நூலாக இருந்து விடும். அளவான விடுபாடல் என்று காணும் சுவடி முதலும் முடிவும் இல்லாத குறையான சுவடியாகக் காணப்படும். அல்லது சுவடி இடையிடையே பழுதுபட்டும் முறிந்தும் இருக்கும். இவ்வாறு பல வகைக் குறைபாடுகளைக் கடந்து ஒரு சுவடியைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. அதுவே சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் ஆர். 3412 என்னும் எண்ணில் பாதுகாக்கப்பெற்று வரும் "தேரையர் அருளிச் செய்த நோயின் சாரம்" என்னும் சுவடியாகும்.

சுவடியின் தன்மை

சுவடி 33 , 2.5 செ.மீ. அளவில் 30 ஏடுகளைக் கொண்டது. 133 வெண்பாக்களால் இயன்றது. பல ஏடுகள் முறிந்துள்ளன.

சுவடி ஒப்பீடு

தேரையர் அருளிச் செய்த நோயின் சாரம் என்ற சுவடியில் இருந்த தலைப்பு இப்பதிப்பாய்வேட்டில் 'தேரையர் நோயின் சாரம் என்று சுருக்கமாக எடுத்துக் கொள்ளப்பெறுகிறது. இந்நூல் 133 வெண்பாக்களால் இயன்றது. பாடல்களை முழுமையாகப் படி எடுத்துக்

கொண்டபின், சுவடி பழுதடைந்து, சிதைவுற்று இருந்த இடங்களில் விடுபட்ட இடங்களை முழுமையாக்க முனைந்தோம். அதற்காகப் பல சுவடிகளையும் நூல்களையும் ஆய்வு செய்தோம். அதே நூலகத்தில் ஆர். 2496 என்னும் எண்ணில் உள்ள அகத்தியர் ஞான வாகட வெண்பா என்னும் சுவடி கிடைத்தது. இச்சுவடி 1983 இல் இந்த நிறுவனத்தில் சுவடிஇயல் பட்டயத்திற்காகத் திரு. ஆ. விநாயகம் என்பவரால் ஆய்வு செய்யப்பெற்றுள்ளது. வெண்பா என்றதனால் ஒப்பிட்டுக் காணும் போது பல பாடல்கள் ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கின்றன. என்பதை அறிய முடிந்தது. அவற்றின் துணை கொண்டு சில திருத்தங்களும் மேற் கொள்ளப்பெற்றன.

பாடல் ஒற்றுமை

தேரையர் நோயின் சாரம், அகத்தியர் ஞான வாகடம் என்பன ஆசிரியர் பெயராலும் நூல் பெயராலும் முழுக்க முழுக்க வேறுபடுவன. ஆனால் பாடல்கள் பல ஒன்றாகவே உள்ளன என்பது வியக்கத்தக்க செய்தியே என்றாலும் சுவடி இயல் கல்வியில் இத்தகு சான்றுகள் பல ஆசிரியரால் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. பூசமுனி வாகடம் என்ற சுவடி ஒன்று; அகத்தியர் வாகடம் என்ற சுவடி வேறு ஒன்று. இரண்டும் அதே நூலகத்தில் உள்ளவைதான். பாட்டைக்காண அனைத்துப் பாடல்களும் ஒரே மாதிரியாக உள்ளவை என்பது அக்கல்வியால் உணர்ந்த செய்தியாகும். இத்தகைய நிலையே இச் சுவடிகளிடையே ஏற்பட்டது.

வெண்பாவிற் குறை

இருவேறு பெயர்களில் ஒரே வகைப்பாடல்கள் பல கிடைத்த நிலையிலும் சில வெண்பாக்களில் உள்ள சீர், தளைச் சிதைவுகளும், விடுபட்ட இடங்களும் தூய்மையும் முழுமையும் பெற இயலாத நிலையே ஏற்பட்டு விட்டது. அத்தகு குறைபாடுகளில் சிலவற்றை எடுத்துக் காட்டலாம்.

'சிற்றாமணக் கெண்ணெய் சேர்த்து விடில்வாய்வு
... மலக்கழுவும் புண்' (பா. 70)

'அகல நனாச்சாற்றி லானதயிர் நீர் ...
முக்கடு கிந்தப் பொருளிடையம் ...' (68)

என்பன போன்ற பல பாடல்களில் ஏடுகளின் முறிவால் ஏற்பட்ட விடுபாடுகளை முழுமையாக்க முடியாத நிலையே ஏற்பட்டது.

'மிரண்ட பொடிகழஞ்சு தேனிற்கொள் - முருங்கிதனில்'
(31)

'இஞ்சித் தினங்கழஞ்சு இலேட்டுமத்தால் வந்தபிணி (32)

சேர்த்துமந்தச் செங்கரப்பன் தின்னும்' (44-ஈற்றடி)

போலும் சீர்தளைச் சிதைவுகள் பலப்பல. எவ்வளவாலும் திருத்தியமைக்க இயலாத நிலையே ஏற்பட்டு விட்டது.

திருத்தங்கள் சில

பதிப்பாசிரியர் சுவடிச் செய்திகளை எந்த விதத்திலும் திருத்தவோ மாற்றி அமைக்கவோ கூடாது என்பது பழம்பெரும் பதிப்பாசிரியர்கள் கொண்ட பதிப்புமுறையாகும். ஆனால் கிடைக்கும் சுவடிகள் பலவும் பலவாறான நிலையில் மாறுபடக் கிடப்பதை ஆய்வில் அறியமுடிகிறது. இந்த அடிப்படையில் நோக்கினால் சுவடிகளில் வேறுபடும் இடங்களை மூன்று வகைகளில் நுணுகிக் காணமுடிகிறது. அவை முறையே பாடவேறு பாடு வடிவ வேறுபாடு பிழை என்ற தன்மையில் அமையும். பாடவேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதும், வடிவவேறுபாடுகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பதும் பதிப்பு நெறிகளாகும். சுவடி எழுதியோரால் ஏற்பட்டவையே பிழைகள் என்று அறியும் பொழுது அப்பிழைகள் சுவடியில் உள்ளவை என்பதனால் திருத்தக் கூடாது என்ற கொள்கை தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். எழுதியோர் பிழை என்று தெரிந்தும் அப்படியே பதிப்பிப்பது. தூயபதிப்பு ஆகாது என்பதற்கும் பதிப்பு முன்னோடிகள் வழி காட்டியுள்ளனர். அவர் தம் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, ஏடு எழுதியோர் பிழைகளே என்று அறிந்தவற்றைத் திருத்திப் பதிப்பிக்கும் முயற்சி இப்பதிப்பாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சான்றுகள்

நூலின் தலைப்பு 'தேரையர் அருளிச் செய்த நோயின் சாரம்' என்று உள்ளது. மேலும்

வாதசுரம் தீற அவாழம் (60)

எரும்புகன்ற சிறகயும் (15)

துப்பியும் வெங்காறம் (20)

சொம்புகிரு மண்டூரம் (16)

என்பன போன்றவைகளில் கோடிட்ட சொற்கள் பிழைகளாக எழுதப் பெற்றவை என்பது தெளிவாகிறது. இவற்றை முறையே,

தேரையர், நீர, சீரகமும், வெங்காரம், சிறுமண்டூரம் என்னும் சொற்களாகத் திருத்திப் பதிப்பித்துள்ளோம். இவற்றைப் போலவே,

அசிரணம்	-	அசீரணம்
காச்சல்	-	காய்ச்சல்
திரிபெலை	-	திரிபலை
பரித்தி	-	பருத்தி
பிளிகை	-	பீளிகை
புரசு	-	பூவரசு
முளகு	-	மிளகு

போன்ற திருத்த அமைப்புகள் பல மேற் கொள்ளப் பெற்றுள்ளன.

சுவடியின் தொடக்கமும் முடிவும்

"ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை ஆராய்ந்து
சீரியதாய்ச் செந்தமிழில் செப்பவே" என்று தொடங்கும்

இந்த நூலுக்கு வடமொழி மருத்துவ நூல் ஒன்று முதல் நூலாக அமைந்துள்ளது வெளிப்படை. இப்பாடல் இடைச்செருகலாக அமைந்தது என்று கொண்டால் இந்த நூலாசிரியரான தேரையர் பிற்கால மருத்துவ நூலாசிரியர்களில் ஒருவர் என்று கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மேலும் இந்த முதல் வெண்பா விநாயகர் வணக்கப்பாடலாகவும் அமைகிறது.

சுவடியின் முடிவில் உள்ள குறிப்பால் இச்சுவடி பிலவங்க ஆண்டு மார்கழி இருபதாம் நாள் எழுதி முடிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இச் சுவடியை எழுதியவர் வ.போ. சுப்புராய வாத்தியார் என்பவராவர் என்பதும் தெரிகிறது.

ஆய்வேட்டின் அமைப்பு

இந்த ஆய்வேடு சான்றிதழ், நன்றி ஆகியவற்றை அடுத்து நோயும் மருந்தும் என்ற தலைப்பில் நூலில் உள்ள பாடல்களுக்கான பொருளடக்கத்தைக் கொண்டு தொடங்குகிறது.

நுழைவு, ஆய்வு, நூல் செய்தி, இணை என்ற ஐந்து இயல்களாக அமைகிறது. நுழைவு இயலில் நூலின் பதிப்புரையும், நூலாசிரியர் வரலாறும் சுருக்கமாக அமைகின்றது.

ஆய்வு இயலில் பொது நிலை ஆய்வு உரை என்ற முதற் பகுதி மருந்துப் பொருள்கள், மருத்துவம், தமிழ் மருத்துவத்தின் தோற்றம் இயற்கையும் சித்தரும், சித்தர் தம் திறன்கள். சித்த மருத்துவ வகைப்பாடு, சித்த மருத்துவ மருந்துகளின் வகைப்பாடு, சித்த மருத்துவத்தின் பயன், என்ற பொருள்களில் அமைகிறது.

சிறப்பு நிலை ஆய்வு என்னும் இரண்டாம் பகுதி இது முதல் நூலா? என்றுத் தொடங்கி, இந்த நூலின் பயன், நூலின் மருந்து முறைகளாகிய அகமருந்து முறைகள், புறமருந்து முறைகள், மருந்து உண்ணும் முறையும் அளவும் நூலின் இலக்கிய நயம் ஆகிய பகுதிகள் கொண்டுள்ளன.

தொடர்ந்து நூலில் கூறப்படும் மூலிகைகள் தாதுப் பொருள்கள், சீவ வகுப்பு என்ற மூன்று நிலைகளில் நூலின் சிறப்பு எடுத்துக் காட்டப்படுகிறது.

நூல் இயல் என்னும் பகுதி 133 வெண்பாக்களைக் கொண்டது.

செய்தி என்னும் இயல்நூலில் காணும் செய்திகளைத் தொகுப்பாக முறையாகப் பகுத்துக் காட்டுகிறது. தொடர்ந்து துணை நூல் பட்டியலும் அமைகிறது.

துணை என்னும் இறுதி இயலில் பாட்டு முதற் குறிப்பு அகராதி, சொல்லடைவு, மூலிகைப்படங்கள் ஆகியவற்றைக் கொண்டதாய் முடிவு பெறுகிறது.

இவ்வாய்வேடு "தேரையர் நோயின் சாரம்" என்ற தலைப்பைக் கொண்டிருந்தாலும் இது. நோயின் குறிகுணங்களைப் பற்றி விரித்துக் கூறாமல், அதை தீர்க்கும் மருத்துவத்தையே சிறப்பாகக் கூறுகிறது. இதுவே இவ்வாய்வேட்டின் சிறப்பாகும்.

நூலாசிரியர்

நூலாசிரியர் (தேரையர்)

சித்த மருத்துவம் பெயர்க் காரணம்

இது சித்த - மருத்துவம் எனப் பிரிபடும் சித்த என்பது சித்தம் என்றும் வழங்கப்படும். மனிதர்களின் உடல் தொண்ணூற்றாறு தத்துவங்களால் ஆகியுள்ளது. அவற்றில் மூன்றுதான் அந்தக்கரணங்கள். அந்தக் கரணங்களின் பிரிவுகள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகும்.

இந்த மனத்தை உடையவன்தான் மனிதன். இம்மனிதனின் மனதில் எண்ண அலைகள் எழுந்துக் கொண்டே இருக்கும்.

அந்த கோடிக்கணக்கான எண்ணங்களில் நல்லவை, தீயவை என்று பகுத்துணர உதவுவதே புத்தியாகும். அதை செயல்படத் தொடங்க உதவுவது சித்தமாகும்.

நல்ல எண்ணத்தை நினைத்து, பகுத்துணர்ந்து, அதில் சித்தத்தைச் செலுத்தி நாம் அடையும் வெற்றியே 'சித்தி' ஆகும். அவ்வாறு வெற்றி பெற்றவர்களே சித்தர்கள். அவர்களால் வளர்க்கப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவம் அந்த அமருத்துவம் சித்தர்களைப் போலவே மிகவும் தொன்மையானது. "சித்தர்களுக்கு அழிவில்லை" என்று சொல்வதற்கேற்ப இம்மருத்துவமும் அழியாமல் இன்றும் பீடு நடைபோட்டு உலா வருகிறது.

சித்தர்கள் பலராவர் இவர்களைப் பற்றிய செய்திகளைத் தாயுமானவர் "சித்தக சித்தர் கணம்" என்னும் பகுதியில் கூறியுள்ளார்.

கணம், கணம் என்ற சொல் கூட்டம் என்று பொருள்பட்டாலும் "சித்தர் கணம்" என்ற சொல் பதினென் சித்தர்களையே குறிக்கிறது என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

பதினென் சித்தர்கள் என்ற தொகுப்பில் பலரின் கருத்துப்படி வேறுபல பதினெட்டு சித்தர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

இந்தப் பதினென் சித்தர்களில் கணம் மட்டுமின்றி நவநாத சித்தர், நவகோடி சித்தர்; நவ சித்தர் என்ற பிரிவுகளும் காணப்படுகின்றன.

பதினென் சித்தர்களின் முதன்மை

இப்பதினென் சித்தர்களில் முதன்மையானவர்கள் என்று சொல்லப் படுபவர்களைப் பற்றியும் அவர்களின் 'சமாதித்தலங்கள்' பற்றியும் மருத்துவ "வாதயோக ஞான சத்திரம்" என்னும் நூலில் நான்காம் தந்திரத்தில் அறியலாம் அப்பாடல் வருமாறு.

ஆதிகாத லத்திலே தில்லையில் திருமூலர்
அழகர்மலை இராம தேவர்
அனந்த சயனம் கும்பமுனி திருப்பதி
கொங்கணவர் கமலமுனி யாரு
சோதிரங்கத் சட்டமுனி கருவை கருவூரனார்
சுந்தரா னந்தர் கூடல்
சொல்லுமெட் டுக்குடியில் வான்மீக ரோடுநற்
றொல்காசியில் நந்தி தேவர்
பாதியரிச் சங்கரன் கோவில்பாம் பாட்டி
பழநிமலை போகி நாதர்

பரங்குன்ற மதில்மச்ச முனைபொதுர் கோரர்க்கல்
பதஞ்சலி இராமேச் சுவரம்
சோதிலைத் தீச்வரன் கோயிலில் தன்வந்திரி
திகழ்ம யூரகி குதம்பை
சித்தருள்ளை யோரிடைக் காடர் சமாதியிற்
சேர்ந்தன ரெண்மக்காக்கவே

இதைப் போலவே தமிழ் மருத்துவனால் எதை எடுத்தாலும் "மகாமகத்துவம் பொருந்திய பதினென் சித்தர்களில் ஒருவராகிய" என்று தலைப்பிட்டுப் பதிப்பித்துள்ளார்கள். இந்த முதன்மையான பதினென் சித்தர்களைப் பற்றி பலவித கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேரையர் வரலாறு சித்தர் கணத்தில் தேரையரின் இடம்

பதினென் சித்தர்களைப் பற்றி பல வித கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும். எந்தக் கருத்திலும் எந்தக் தொகுப்பிலும் தேரையர் பெயர் காணப்படவில்லை.

மேலும், இவர் இயற்றிய நூல்களின் காப்புச் செய்யுட்களில் பதினென் சித்தர்களுக்கு வணக்கம் செய்துள்ளமை இவர் பதினென் சித்தர்களில் ஒருவரில்லை என்பதை நிருபணம் செய்கிறது.

(உ.ம்)

பயப்படு பிரச முன் பழகு மைச்சுரம்
பயப்படு மாறெனப் பதினென் சித்தர்காள்
செய்ப்படு பொருளுறச் சேர்க்கு முன்னமே
செயப்படு மிதற்கொரு திருவுள் ளாமரோ

இருவரும் நவ. சித்தர்களில் ஒருவர் என்று தேரையர் வேண்டுமானால் கருதலாம்.

தேரையர் வரலாறு

தேரையர் - தொண்டை வள நாட்டில் பாலியாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் நம்பி பூபதி என்பவர்.

இவர் பெயரைப் பற்றிப் பல விதமான கருத்துகள் அறிஞர்களிடையே காணப்படுகின்றன.

இவர் நூலில் தாம் தரும சௌமியரின் சீடரென்று தன்னைக் கூறிக் கொள்ளுகிறார். இவரும் இவருடைய குருவைப் போல, ஒரு சமணத் துறவியென்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

டாக்டர் க. உத்தமராயன் எச்.பி.ஐ.எம் அவர்கள் தாம் எழுதிய தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறு என்ற நூலில் சித்தர்களின் பெயர்களையும் அவர்கள் சமாதியான இடங்களைப் பற்றியும் விளக்கும் பொழுது தேரையர் "பிராமணக்" மரபைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார்.

இவர் மருத்துவக் கலையிலும், பல மொழிகளிலும் கற்றுத் தேர்ந்தவர் என்பதால் தேரர் என்றப் பெயர் பெற்றார் எனவும், பாலி மொழியில் "தேர்" என்ற சொல் பௌத்த துறவிகளைக் குறிக்கும். அதனால் இவர் பௌத்த துறவி என்றும் சிலர் கருதுகின்றனர்.

தேரையரின் சிறப்பு

"ஓயாத மண்டையிடி உடைய ஒருவனின் மண்டை ஓட்டைத் தகர்த்து உள்ளேயிருந்த தேரையை நீக்கினதால் தேரையர் என்ற பெயர் பெற்றார் என்று கூறுவர். இப்பெயரை வடமொழியில் "மண்டூக மகாிஷி என்று மிக்க உயர்வாக கருதி வழங்கி வந்தார்கள். இதில் மண்டூகம் என்ற சொல்லுக்குத் 'தேரை' என்று பொருள்

இதன்படி இப்பொழுது நவீன மருத்துவத்தில் நடைபெறும் "கபால அறுவைச் சிகிச்சை முறை"க்கு அன்றே தேரையர் வித்திட்டு நடத்தி வெற்றி பெற்றார் என்பதும் இவரால் சித்த மருத்துவம் சிறப்பெய்துகிறது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகின்றன.

தேரையரின் நூல்கள்

தேரையர் எழுதிய நூல்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

ஒரு வகை

தேரையர் கரிசல், தேரையர் காப்பியம், தேரையர் யமகம், சிகாமணி வெண்பா போன்ற நூல்கள் உயர்ந்த இலக்கிய, இலக்கண நயம் பொருந்தியவை.

அதற்கு மாறான மற்றொருவகை நூல்கள் - தேரையர் வைத்திய காவியம் 100/, தேரையர் வாகடம் என்பவை இலக்கண வரம்பில்லாத பாடல்களைப் போல் காணப்படுகின்றன. எனவே ஒருவரே இருவகைகளில் பாடல் எழுதியிருப்பாரா என்ற ஐயம் ஏற்படுகிறது என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

தேரையர் இயற்றிய வையாகக் கூறப்படுவன நூல்கள்

1. சிகாமணி வெண்பா, 2. நிகண்டு, 3. சேகரப்பா, 4. காப்பியம் 5. தரு 6. நாடகம், 7. மிகாவண்ணம், 8. அந்தாதி, 9. நான் மாலை, 10. யமக வெண்பா, 11. எதுகைப்பா, 12. மகா கரிசல் என்ற பன்னிரண்டு நூல்கள்

ஆலாலம், நீர் நிறக்குறி நெய்க்குறி, 2. தைல வர்க்கச் சுருக்கம், 3. திணைக்கிர மாலங்களும், 4. சிகிச்சைக் கிரமம், 5. நோய் மருந்தளவை, 6. பிரதான குணமுளித் தரு, 7. வைத்தியப் பங்கு, 8. மருத்துப் பாரதம், 9. குணப்பாட வெண்பா என்னும் ஒன்பது நூல்கள் இவைகளனைத்தையும் சேர்த்து 21 நூல்கள் செய்துள்ளார் என்பார் ஒரு சிலர். இவற்றைக் குறிக்கும் தொகைப் பாடல் இல்லை.

மேலே கூறப்பட்டவை தவிர இவரியற்றியதாக தேரையர் ஐந்நூறு தேரையர் வைத்திய காவியம் 100, தேரையர் 1500 என்னும் சில நூல்கள் வெளிவந்துள்ளன.

இவற்றுள் தேரையர் வெண்பா, தேரையர் யமக வெண்பா, தேரையர் மகாகரிசல், தேரையர் மருத்துப் பாரதம் போன்ற நூல்கள் பல அச்சிடப்பட்டுள்ளன.

பிற சிறப்புகள்

இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆரியம், வடசொல் ஆகிய மொழிப்புலமையும், சோதிடம், ஐம்புள் சாத்திரம், கன்ம காண்டம் அளவை, சாங்கியம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய

அறிவியல் நூல்களில் மிகத் தேர்ச்சிப் பெற்றவர் என்பது அவர்
~~நூல்களில் மிகத் தேர்ச்சிப் பெற்றவர் என்பது அவர்~~ நூல்களின் மூலம் அறியப்படும்.

இவர் இதிகாசங்கள் இரண்டில் மிக்க ஈடுபாடுடையவர் என்பது இவரியற்றிய மருத்துவப் பாரதத்தால் அறியலாம்.

மருத்துவத்தில் நால்வகை அமைப்பாகிய யோகம், ஞானம், வாதம், வைத்தியம் என்னும் நான்கினும் உள்ள உட்பிரிவுகளில் நல்ல ஆய்வுத் திறனுடன் விளங்கியமை அவரின் நூல்களின் வாயிலாக வெளிப்படுகின்றன.

மேலும் தேரையர், "நோயணுகாவிதி" என்ற தலைப்பில் ஒருவன் நூறு ஆண்டுகாலம் உயிர்வாழக் கடைபிடிக்க வேண்டியவைகளைக் கூறி மனிதன் வாழ் நாள் நீட்டிக்க வழிக்காட்டுகிறார்.

இவர் இயற்றியதாகக் கூறப்படும் நூல்களில் நிகண்டு, நான்மாலை சிகிச்சைக் கிரமம், நோய் மருந்தளவை போன்ற முக்கியமான நூல்கள் கிடைக்கவில்லை. அவை கிடைத்து விட்டால் சித்த மருத்துவம் யாதொரு குறையுமின்றி நிறைவு பெறும். என்று டாக்டர் கா.சு. உத்தமராயன் அவர்கள் தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் என்ற நூலில் எழுதியிருப்பதிலிருந்து தேரையரின் சிறப்பு புலனாகிறது."

தேரையரின் பிணி அணுகா விதிகள்

திண்ணமிரண்டுள்ளே சிக்க அடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல் - உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

இதுவுமது

பாலுண்போம் எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம், பகற்றுயிலோம்; பயோதரமு மூத்த
ஏலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போம்
இரண்டடக்கோம் ஒன்றை விடோம், இடதுகையில் படுப்போம்
மூலஞ்சேர் கறிநுகரோம், மூத்த தயிர் உண்போம்
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே;

உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்;
உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்;
பெண்கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்து நீரருந்தோம்,
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்
நண்புபெற வுண்டபின்பு குறுநடையுங் கொள்வோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந்த நயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம்
தேறுமதி யொன்றரைக்கோர் நசியம் பெறுவோம்;
திங்களரைக் கிரண்டுதரஞ் சவளிருப் புறுவோம்;
விறுசலர் நாட்கொருகால் நெய் யழுக்கைத் தவிரோம்;
வரிசுருக்கஞ் சவுஞ்சு நாட்கொருகா லிடுவோம்;
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம்;
நமனார்க்கிங் கேதுகவை நாமெதுக்கு மடுத்தே

பகற்றொழுக்கு மாதரசங்க கரந்துடைப்ப மிவைநட்
படநெருங்கோம் தீபமைந்தர் மரநிழலில் வசியோம்
அகப்புணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோம்;
அஞ்சனமு மிருமலஞ்சை யோக மழுக்ககாடை
வருப்பெருக்கிற் சிந்துகச மிவைமாலை யரும்போம்;
வற்சலந்தெய் வம்பிதர்சற் குருவைவிட மாட்டோம்;
நகச்சலமு முலைச்சலமுந் தெறிக்குமிட மருவகோம
நமனார்க்கிங் கேதுகவை நாமெதுக்கு மடுத்தே

பொழிப்புரை

இரவில் பகலில் பாலையே உண்போம்; (மத்தந்தரும் வேறு பாலேதும் உண்ணோம்) எண்ணெயிட்டுத் தலை முழுகும் போதெல்லாம் வெந்நீரிலேயே குளிப்போம்; பகற்பொழுதில் புணர்ச்சியும் துயிலும் கொள்ள மாட்டோம். வயதிற்கு மூத்த மாதரையும், உடலிற் படும்படி இளம்வெயிலையும் விரும்போம்; மலசலங்களையடக்கோம் இடக்கையைக் கீழமைத்தே உறங்குவோம். மூல நோயை உண்டாக்கும் கறிகளை உண்ணோம். புளித்த தயிரையே பெருக்கியுண்போம். முதல் நாள் சமைத்த கறி அமுதுக்கு ஒப்பெனினும் அருந்தோம். பசித்தாலொழிய உணவருந்தோம்.

2. நாள் ஒன்றுக்கு இருமுறையின்றி மும்முறை உணவு கொள்ளோம் இராக்காலந் தவிரப் பகற்பொழுது உறங்கோம் பெண்களைத் திங்களொரு முறையன்றி மற்றக் காலங்களில் சேரோம், பெருந்தாகங் கொண்டாலும் உணவின் கடையிலன்றி மற்றக் காலங்களில் நீரையருந்தோம், கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கையே புசிப்போம். வாழைக்கச் சலன்றிக் கனியை அருந்தோம். உண்டபின் சிறிது நேரம் குறுநடை கொள்வோம்.

3. ஆறு திங்கட்கொரு முறை வாந்தி மருந்தையும், நான்கு திங்கட்கொருமுறை பேதி மருந்தையும் கொள்வோம், ஒன்றரை மாதத்திற்கொரு தரம் நசியம் செய்து கொள்வோம், வாரத்திற்கொரு முறை சவரம் செய்து கொள்வோம். நான்கு நாட்கொரு முறை

எண்ணெயிட்டுத் தலை முழுகுவோம், மூன்று நாட்கொரு தரம் கண்களுக்கு மையிடுவோம், வாசனைப் பொருள்களையும் பூக்களையும் நடு இரவில் முகரோம்.

மூப்படைந்த மாதர்களிடமிருந்து உண்டாகும் மணம், ஆடு, கழுதை துடைப்பம் இவைகளிலிருந்து எழும் தூசு மேற்படும்படி நெருங்கோம் இரவில் விளக்கு மனிதர், மரம் இவைகளின் நிழலில் தங்கோம், உணவு பக்குவமாகும் சமயத்தில் புணர்ச்சி கொள்ளோம், உறக்கம், உணவு மல நீர்க்கழிவு, புணர்ச்சி, அழுக்காடை, சிப்பிட்டுச் சீவும் போது சிந்து கின்ற மயிர் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் விலக்குவோம். கன்றுகள் கூடிய பசுவையும், தெய்வத்தையும், பிதிர்க்களையும், குருவையும் வணங்காதிருக்க மாட்டோம், நகத்தினின்றும், மயிரினின்றும் தெறிக்கும் நீர் உடம்பில் படும்படி அணுகோம் இத்தகைய நியதிகளைக் கைக்கொண்ட எம்மிடத்தில் யமனுக்கு என்ன வேலை? (இறவாது நெடுநாள் இருப்போமென்பதாம்)

இப்பாடல்கள் தற்காலத்தில் மருத்துவ உலகம் கூறும் அறிவுரைகளை அக்காலத்திலேயே கூறியமையே நூலாசிரியரின் சிறப்பாகும்.

இயல் இரண்டு

ஆய்வு

பொது நிலை ஆய்வு

ஆய்வுரை

பொதுநிலை ஆய்வு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள். இந்த உண்மையை வாழ்க்கையில் நிலைநிறுத்தி இன்பமடைதற்காகத் தமிழர்கண்ட வழிமுறைகளில் ஒன்று தமிழ் மருத்துவ முறை.

மருந்தும் மருத்துவமும்

இயற்கையும் செயற்கையுமாகிய சூழ்நிலைகளோடு போராடி வருபவன் மனிதன். அப்போராட்டத்தின் தோல்வியே நோயாக முடிகிறது; போராட்டத்தின் தோல்வியால் ஏற்பட்ட நோயை மனிதன் அப்படியே விட்டுவிடுவதில்லை. நோயைப்போக்க அவன் கண்ட பொருள்களே 'மருந்து' எனப்பட்டன. அந்த மருந்தைக் கொடுத்து நோயைப்போக்க முயற்சி செய்யும் பணியே 'மருத்துவம்' எனப்படுகிறது. மருந்து என்ற சொல்லோடு தொழிற்பெயர் விகுதி யாக அம் சேர்க்கப்பட்டு 'மருத்துவம்' என்ற சொல் உருவாகப் பெறுகிறது. அதுவே வலித்தல் விகாரம் பெற்று 'மருத்துவம்' என்ற பெயர்பெறுகிறது.

மருந்துப் பொருள்கள்:

நோயைப் போக்கப் பயன்படுத்தப்பெறும் மருந்துகள் அனைத்தும் நோயைப் போக்குவன மட்டுமல்ல. அவை:

1. நோயை நீக்கப் பயன்படுவன
2. நோயை மேலும் வளராமல் தடுக்கப் பயன்படுவன
3. நோயைக் குறைக்கப் பயன்படுவன
4. நோயை உண்டாக்கும் கிருமிகளை அழிக்கப் பயன்படுவன
5. நோயுள்ள உடலின் செயல்கள் சிலவற்றை ஊக்குவிக்கப் பயன்படுவன.
6. நோயின் காரணத்தை அறிக்காமல் நோயிக் குறைகளை மட்டும் நீக்குவன.

எனப் பல திறத்தில் பயன்படுத்தப் பெறுவது. மருத்துவ முறைகளின் அடிப்படையாகும். இம்மருந்துகள்,

1. இயற்கைப் பொருள்களாக மட்டுமே உள்ளவை
2. இயற்கைப் பொருள்களால் செய்யப் பெற்றவை
3. செயற்கைப் பொருள்களாகவே உருவாக்கப் பெற்றவை

என்ற வகைப்பாடுகளில் அடங்கும்.

மருத்துவம்

"ஆதி எகிப்திய நாகரிக நாள் முதல் ஹிப்பாக்கிரட்டீஸ் (Hippocrates - கி.மு. 460 - 357) நாள் வரை மாந்திரிகம், சமய வழிபாடு இவைகளோடு மருத்துவம் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது."[2] தொடர்ந்து கிரேக்க மருத்துவம், சுமேரியரின் இரண சிகிச்சை மருத்துவம், சமய சித்தாந்தங்களோடு தொடர்புடையதாகிய யூதர் மருத்துவம் ஆகியவை மருத்துவ வரலாற்றில் இடம் பெற்றவையாகும்.

கி.மு. 384 - 322இல் வகுக்கப் பெற்ற அரிஸ்டாட்டில் மருத்துவம் உயிரியலின் அடிப்படையில் தோன்றியுள்ளது. அடுத்து

ரோமானிய மருத்துவமும், ரோமானிய அரசின் முடிவு நாள் முதல் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரை, கி.பி. 130 - 200 இல் வகுக்கப்பெற்ற காலன் என்பாரின் மருத்துவக் கொள்கைகளும் நடைமுறையில் இருந்தன. காலன் (Galen) என்பாரின் கொள்கையை ஐரோப்பிய மருத்துவத்துறையில் நிலையான இடத்தைப் பெற்றிருந்தது. ஐரோப்பாவில் ரோமானிய ஆட்சிக்குப் பிறகு ஏற்பட்ட முஸ்லிம் ஆட்சியில் உடற்கூறு, உடலியல், மருந்தியல், சிகிச்சையியல், மருத்துவ இல்ல நிறுவனம் முதலான பலவற்றைப் பயன்பாட்டு நெறிகளடங்கிய முஸ்லிம் பண்பாட்டு மருத்துவம் முன்னேறியது. தொடர்ந்து கிரேக்க மருத்துவ நூல்கள் முதலானவை மொழிபெயர்க்கப்பெற்ற நிலையில் பல மருத்துவ நூல்களும், மருத்துவக் கல்லூரிகளும் தோன்றின. பல வகை மருத்துவக் கருவிகள் கண்டுபிடிக்கப்பெற்றன; இரசாயனப் பொருள்கள் பல காணப்பெற்றன; சுகாதாரச் சீர்திருத்தச் சட்டங்கள் பல தோன்றின; சீர்திருத்தச் சங்கங்கள் தோன்றின.

தமிழ் மருத்துவ முறைகள்:-

உலகளாவிய மருத்துவ வரலாற்றைப் போலவே தமிழ் மருத்துவ முறையிலும் மிகப் பழங்காலந் தொடங்கிய வரலாறு காணப்படுகிறது. காலம் முதலியன அறுதியிட்டுக் கூற இயலாவிடினும் மிகப் பழங்காலந் தொட்டது தமிழ் மருத்துவ முறை; இது தனித் தன்மைகள் பலவற்றை உள்ளடக்கியது. அகத்தியர், தேரையர், போகர், புலிப்பாணி, கொங்கணவர், உரோமர்,

இராமதேவர், கருவூரார் போன்ற பல சித்தர்கள் கண்ட மருத்துவ முறைகள் தமிழில், சிறப்பாகப் பாட்டு நடையில், ஆயிரக்கணக்கான பாடல்களடங்கிய நூல் வடிவில் உருவாகியுள்ளன.

இவ்வகைச் சித்தர்களால் உருவாக்கப்பெற்றவையாதலின் சித்த மருத்துவம் எனவும், தமிழில் உருவாகி வளர்ந்தவையாதலின் தமிழ் மருத்துவம் எனவும் பெயர் பெற்றன.

ஆயுர்வேத மருத்துவமும் சித்த மருத்துவமும்

"ஆயுர் வேத மருத்துவத்தைப் போலவே சித்த மருத்துவத்திலும் மூலிகை முறை என்றும், இரசவர்க்க உலோகவர்க்க முறை என்றும் இரண்டு வகைகள் உண்டு. ஆயினும் உலோக வகைகள், இரசவகைகளைப் பயன்படுத்தும் தாந்திரிக முறையானது வட மொழியிலுள்ள ஆயுர்வேத நூல்களில் காணும் தாந்திரிக முறைக்கு வேறுபட்டதாகவே காணப்படுகிறது. மற்றும் சித்த வைத்திய நூல்களில் உள்ள பரிபாஷைச் சொற்களில் பல, ஆயுர்வேத நூல்களில் காணப்படாமலிருப்பதும் போதிய சான்றாகும்." என்று ஆயுர் வேத வைத்திய ரத்தினம் பண்டித டி. கோபாலாச்சாரியார் கூறுகின்றார்.[3]

தமிழ் முறைப்படி உலோகங்களையும் இரசவர்க்கங்களையும் நீற்றிப் பஸ்மங்களாகவும், சிந்தூரங்களாகவும் செய்வது எளிமையானது. அப்பிரகபஸ்மம் செய்ய ஆயுர்வேத முறையைக் கையாளுவதனால் அப்பிரகத்தை நூற்றுக்கணக்கான புடங்கள் எரிக்க வேண்டும். அப்போதும் அதிலுள்ள சந்திரிகை என்னும் மினுமினுப்புப் போவதில்லை. ஆனால் தமிழ் மருத்துவர் அப்பிரகத்தை நாய்ப் புகையிலையின் சாற்றினால் பத்து முறை அரைத்துப் புடமிட்டு மினுமினுப்பில்லாத அப்பிரகப் பஸ்மமாகச் செய்து விடுவார்கள். அவர்கள் செய்யும் பஸ்மம் அதிக வீரியமுடையதாகவும் இருக்கிறது.[3]

இதுபோலவே சித்த மருத்துவர்கள் மயில்துத்தம் என்னும் துருசைப் பல மூலிகைகளைக் கொண்டு செய்யும் வெண்மையான பஸ்மமும் மருந்து ஆற்றலுடையது. இது குருபஸ்மம் என்றும், கட்டு மருந்து என்றும் கூறப்படும். சாரங்கள், உப்பு வகைகளைக் கொண்டு செய்யும் செயநீர் போன்ற நூற்றுக் கணக்கான முறைகள் சித்த மருத்துவத்திற்கே உரியவை.[3] என்பன போன்ற கூற்றுகள் ஆயுர் வேதம் வேறு சித்த மருத்துவம் வேறு என்பதைப் புலப்படுத்துவனவாகும். மேலும் ஆயுர் வேதத்திலிருந்தே தமிழ் மருத்துவம் தோன்றியது. என்பார் கூற்றும் வலுவிழக்கிறது. மேலும்,

ஆயுர் வேதத்தில் நோயாளியைப் பார்த்து, தொட்டு, கேட்டு நோயறியும் முறையிருக்கச் சித்த மருத்துவத்தில் நாடி பார்த்தேயறியும் முறை சிறப்புற விளங்குகிறது. உலோகம், உப்பு, இரசம், பாஷாணங்களை மருந்தாக்கும் சித்த மருத்துவ முறை ஆயுர்வேதத்தின் முதல் நூலாகக் குறிப்பிடப் பெறும் ஐத்திரேயர் எழுதிய ஐத்திரேய சம்ஹிதையில் குறிப்பிடப் பெறவில்லை. இறப்பு உண்டு என்று கூறும் ஆயுர் வேதத்திற்கு மாறாகக் காய கல்பம் கண்டது; மரணத்தை வெல்ல வழி கண்டது சித்த முறை என்பன குறிப்பிடத்த வேறுபாடுகளாகும்.

சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழ் மருத்துவம்

சிந்தி நீர்க் கண்டம் தெறிக்குத் தேனாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில் - சாந்தி
மலைக்குத்தும் மால் யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு[4]

அறியாமையின் நிகழ்ச்சிகளை நீடுநினைந்து தமக்குள் வருந்தியதால் சாத்தனாருக்கு நீங்காத தலைவலி ஏற்பட்டிருந்தது. திருவள்ளுவரின் முப்பாலை ஓதியுணர்ந்த பின்பு தீராத்தலைவலி

தீர்ந்தது என்னும் கருத்தால் திருக்குறளின் சிறப்பை உணர்த்த நினைக்கிறார் தாமோதரனார். அத்தலை வலி தீர்ந்த செயலுக்கு ஒரு உவமையை எடுத்துக் கூறுகிறார். சிந்தில் கொடியின் சாறும் சாதிலிங்கமும் சுக்கும் தேனிற்கலந்து நசுர எந்த விதமான தலைவலியும் யாருக்கும் நீங்கிவிடுவது போலச் சாத்தால் தலைவலி நீங்கியது என்று கூறுகிறார். திருக்குறள் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா வகைச் செயல்களுக்கும் உறுதுணையாய் வழிகாட்டும் என்ற சிறப்பு ஒருபுறமிருக்க, எடுத்துக்காட்டப் பெற்ற உவமை சங்க காலத்திற்கு முன்பே அரிய தமிழ் மருத்துவ முறைகள் கையாளப் பெற்றன என்றஉண்மைக்கு ஒரு சான்றாக அமைகிறது. மேலும் இப்பாட்லைப் பாடிய தாமோதரனார் என்ற புலவரும், மருத்துவன் தாமோதரனார் என்று அடையுடன் கூடிய சிறப்புப் பெயரையும் பெற்றிருக்கிறார். உறையூரைச் சார்ந்த இவர் உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்று பெயர் பெறுகிறார். மேலும்

இரும்புச்சுவை கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்றி வடிந்த யாக்கையன் " (புறம் - 180)

போன்ற பல பாடல்களும், மருத்துவன் நல்லச்சுதனார் போன்ற, புலவர்களின் பெயர்களும் அக்கால மருத்துவ முறையின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

தமிழ் மருத்துவத்தின் தோற்றம் பற்றிய செய்திகள்

தமிழ் மொழியின் தோற்றத்தைப் பற்றிய செய்திகளைப் போலவே தமிழ் மருத்துவத்தின் தோற்றம் பற்றிய செய்திகளும் மிகைப்படுத்திக் கூறப்பெறுகின்றன. தமிழ் மொழி சிவபெருமானின் உடுக்கையாகிய தமருகத்தின் ஒலியினின்றும் பிறந்தது; அத் தமிழைச் சிவபெருமான் கயிலாயத்தில் குமரக் கடவுளுக்கு உபதேசித்தார்; குமரக்கடவுள் அகத்தியருக்குக் கூறியருளினார்; அகத்தியரே தம் மாணாக்கருக்குக் கற்பித்துத் தமிழ் மொழியை வளர்த்தார் என்று புராணச் செய்திகள் பல கூறுகின்றன.[1] மக்களிடத்திலுள்ள இயற்கையாற்றல்களில் தலை சிறந்த ஒரு ஆற்றல் பேசும் ஆற்றல். இந்த இயற்கையாற்றலால் உருவாக்கப் பெற்றதே மொழி. எனவே இயற்கையாற்றலாகவே விளங்கும் இறைவனால் தோற்றுவிக்கப் பெற்றது மொழி என்று மிகைப் படுத்திக் கூறப் பெறுகிறது. இத்தன்மை போலவே தமிழ் மருத்துவத்தின் தோற்றம் பற்றிய செய்திகளும் காணப் பெறுகின்றன.

தமிழ் மருத்துவ முறைகளைச் சிவபெருமான் உமாதேவியருக்கு ஓதினார்; உமையம்மையார் நந்திதேவருக்கு உபதேசித்தார்; நந்தி தேவர் தந்வந்திரியாருக்குக் கூறியருளினார்; தன் வந்திரியார் அசுவினிதேவர்களுக்குச் சொன்னார்; அசுவினி தேவர்கள் அகத்தியருக்கு உரைத்தனர்; அகத்தியரே புலத்தியர் முதலான முனிபுங்கவர்களுக்குக் கற்பித்து இம்மருத்துவ முறைகளைப் பரவச் செய்தார் என்பனபோன்ற கருத்துகளால் தமிழ் மருத்துவத்தின் சிறப்பினை மிகைபடுத்திக் கூறும் தமிழ் மரபு, அகத்தியர் சௌமிய சாகரம் என்னும் நூல் போன்ற பல நூல்களில் பரந்து கிடக்கிறது.

இயற்கையும் உடலும்

இயற்கையோடு போராடிவருபவன் மனிதன். ஆதியில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கையோடு போராடி வந்தான். இன்று தன் அறிவால் இயற்கையை வெல்லப் போராடிக்கொண்டிருக்கிறான். இந்த நிலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். நாம் வாழும் சூழ்நிலையை உருவாக்குவன அந்த இயற்கைப் பொருள்களே. அவை நிலமும் நீரும் நெருப்பும் காற்றும் ஆகாயமும் என்னும் ஐம்பெரும் பொருட்களாகும். அவை ஐம்பெரும் மெய்ம்மைப் பொருட்களாகும். அவை பொய்யானவை அல்ல; நிலையானவை; ஆக்கும் திறன் படைத்தவை; அழிக்கும் வல்லமையும் அவற்றிற்கு உண்டு. இந்த ஐம்பெரும் உண்மைப் பொருள்களின் சேர்க்கையால் ஆனதே உடல். எனவே தான் இது 'மெய்' எனப்பட்டது.

மெய்ம்மைவாதிகள்

'காயமேயிது பொய்யடா - வெறும் - காற்றடைத்த பையடா' என்பதும் ஒரு சித்தர் கூற்றே. நிலையில்லாத இந்த உடலுக்குத் தமிழர் கண்ட பெயர் 'மெய்' என்பது. பொய்யான உடலை 'மெய்' என்று கூறிய வல்லமை படைத்தவர்களும் சித்தர்களே. எனவே தான் சித்தர்களை மெய்ம்மைவாதிகள் என்பர். இந்த வாதத்தின் தெளிவால் சித்தர்களின் சித்தத்தில் தோன்றிய கருத்துகளே சித்த மருத்துவம் எனப்படுகிறது.

இயற்கையும் சித்தரும்

சித்தர்கள் தம் தெளிந்த அறிவால் சாதாரண, தூய உலோகத்தையும் உயர்ந்த உலோகமாக்கி நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தினர். இரசவாதம் பல கண்டவர்கள் சித்தர்கள்; சித்துக்கள் பலவற்றைச் செய்தனர்; இயற்கையின் மாற்றத்தாலும், இயற்கையை மீறிய நமது செயல்களாலும் உடலில் ஏற்படும் மாற்றமான நோய்களை அகற்ற முனைந்தனர்; அந்த இயற்கையின் துணை கொண்டு, இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி நோய் தீர்க்கும் முறைகள் பலவற்றைக் கண்டனர். அம்முறையே சித்த மருத்துவம் எனப் பெறுகிறது.

சித்தர்

சித்துகள் பலவற்றிலும் வல்லவர்கள் சித்தர் எனப் பெற்றனர் அறிவும் பலவகை ஆற்றலும் பெற்றிருந்தவர் ஆதலாலும் அப்பெயர் நிலைபெற்றது. சித்தர் மந்திர தந்திரங்களில் நிறைந்திருந்தனர். மன் - திறம் என்பதே மந்திரம் எனத் திரிந்தது. மன் - மனம்; திறம் - உறுதி. மனத்தை உறுதியாக நிறுத்தும் ஆற்றலே மந்திரம் எனப்பட்டது. தன் - திறம் என்பது தந்திரமாயிற்று. தன்னை உறுதியாக நிறுத்தும் ஆற்றலே தந்திரம் எனப்பட்டது. எனவே மந்திர, தந்திரங்கள் நிறைந்தவர் சித்தர் என்பது மனத்தை உறுதியாக நிலைநிறுத்தும் திறமும் தன்னை உறுதியாக நிறுத்தும் ஆற்றலும் நிறைந்தவர்களே சித்தர்கள் என்னும் பொருளைத் தருவதாகும்.

எதைக் கண்டும் அஞ்சாத நெஞ்சமும், உள்ளத்தை எதிலும் அலைய விடாத திறமும், மனத்தை ஒரு நிலை நிறுத்தும் ஆற்றலும் பெற்றவர்கள்.

சித்தர் திறம்

ஒலி வடிவமாகிய மந்திரத்தைப் பல முறை கூறிக் கூறி உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுவதே மந்திரத்தின் அடிப்படை. இதுவே உருவேற்றம் எனவும் கூறப்படும். உருவேற்ற ஏற்ற உள்ளம் உறுதிபெறும். எதற்கும் உலையாத பக்குவம் ஏற்படுகிறது. இந்தப் பக்குவம் பெற்றவர்களே நினைத்ததை நினைத்தவாறு முடிக்கும் சக்தியைப் பெறுகிறார்கள்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" (குறள் - 666)

என்பதும் இந்த நினைத்ததை முடிக்கும் ஆற்றலையே குறித்ததாகும்.

சித்தர் தம் தனித்திறன்

கூடுவிட்டுக் கூடுபாயும் திறன்; வான்வழி செல்லும் தனித்திறன்; முக்காலம் பற்றிய தெளிவு; அற்புத நிகழ்ச்சிகள் பல்வற்றில் அனுபவம் ஆகியவை சித்தர்களின் தனித்திறன் களாக வெளிப்படுபவை. யோக மார்க்கத்தில் வெற்றிகண்ட சித்தர்கள் அட்டமாசித்திகண்ட பெருமைக்கும் உரியவராவர். அட்டமாசித்தித் திறன்கள்:

1. அணிமா - அணுவைப் போல உருவெடுத்து உலவும் ஆற்றல்
2. மகிமா - மலையைப் போன்ற பெருவடிவில் நிற்கும் ஆற்றல்
3. இலகிமா - உடலை இலேசாக்கிக் காற்றைப் போல விரைந்து செல்லும் ஆற்றல்
4. பிராத்தி - நினைத்ததை அடையும் ஆற்றல்
5. பிராகாமியம் - நினைத்தபடி எல்லாவற்றையும் உருவாக்கும் ஆற்றல்
6. ஈசத்துவம் - யாவரும் தன்னை வணங்கும் தெய்வத் தன்மை பெறுதல்
7. வசித்துவம் - தன்வயப்படுத்தும் ஆற்றல்
8. கரிமா - ஐம்புல நுகர்ச்சியில் பற்றின்மை ஆகிய எட்டு வகை 'சித்திக'ளையும் கண்ட பெருமைக் குரியவர்கள் சித்தர்கள்

<u>சித்தரும் மருத்துவமும்</u>

சித்தர் கண்ட மருத்துவம் சித்த மருத்துவம் எனப் பெறுகிறது. அந்தச் சித்த மருத்துவம் போற்றப்பெறுவதற்குக் காரணம் அதன் பழமைமட்டுமன்றி, ஆராயப் பெறும் நோய்கள், அந்த நோயின் குணங்கள், நோய்க்கு ஏற்ற, நோயின் குணத்துக்கு ஏற்ற மருந்துகள்,

அந்த மருந்து செய்முறைகள், மருந்து கொடுக்கும் முறைகள், துணை மருந்துகள் ஆகிய பலவற்றில் திறன்களைச்சீரீன க்கியே சித்த மருத்துவம் போற்றப் பெறுகிறது.

சித்த மருத்துவப் பொருள்கள்

சித்த மருத்துவத்தில் உலோகவகை, உப்புவகை, பாஉஷாண வகை, இரச வகை போன்ற கடினமான நச்சுத்தன்மை பொருந்திய பொருள்கள் உள்ளுக்குத் தரும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டன. இவை சித்தர்களின் ஆழ்ந்த ஆய்வை வெளிப்படுத்திப் பெருமைப் படுத்தின.

மக்கள் வாழும் சூழ்நிலையில் கிடைக்கக் கூடியனவும் மிகவும் எளிமையானவையுமாகிய இலை, சுக்கு, கிழங்கு, கொழுந்து, பட்டை பூ, விதை, வேர் போன்ற தாவரப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. இவை அனைவருக்கும் பயனளிக்கக் கூடியனவாய்ச் சித்த மருத்துவத்தின் எளிமையைப் புலப்படுத்தின.

முத்து, பவழம் போன்ற பல்வகைக் கடல் படுபொருள்கள் பயன்படுத்தப்பட்டு சித்த மருத்துவத்தின் உயர்வை வெளிப்படுத்தின.

பிராணிகளின் உடம்பில் உற்பத்தியாகும் மலசலம் ஆகியவையும் கஸ்தூரி, கோரோசனை போன்றவையும் உடல்படு நோய்களைப் போக்குவனவாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் பயன் மிகவும் அடிப்படையானது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் - 948)

என்பதற்கேற்பவே சித்த மருத்துவ நிலைகள் வகுக்கப்படுகின்றன.
நோய் நாடுங்கால்,

1. நிலத்தால் ஏற்படும் நோய்கள்
2. நீரால் உண்டாகும் நோய்கள்
3. காற்றால் தோன்றிப் பரவும் நோய்கள்
4. தீயால் தோன்றி வளரும் நோய்கள்
5. பருவங்களுக்கு ஏற்பத் தோன்றும் நோய்கள்.

என்ற ஐம்பெரும் பூதங்களின் அடிப்படையில் காணுவதல் சித்த மருத்துவத்தின் சிறப்பு அடிப்படையாகிறது.

ஐம்பெரும் பூதங்களின் அடிப்படையில் தோன்றுவனவாகக் காணப்பெற்ற நோய்களின் தோற்றத்திற்கு மேலும் தனிய அடிப்படைக் காரணங்கள் சித்த மருத்துவத்தில் கூறப் பெற்றுள்ளன.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று" (குறள் - 941)

என்னும் வாக்கு சித்த மருத்துவத்தை அடியொற்றி எழுந்ததெனலாம். நூலோர் எண்ணிய மூன்று என்பது மேலும் வளிமுதலாய மூன்று என்று அடியெடுத்தும் கொடுக்கப்பெற்றுள்ளது. அது மருத்துவ நூலார் எண்ணியன்றானவை வாதம், பித்தம், ஐயம் என்பனவாகும். இவை மூன்றுமே உடலின் அடிப்படைத் தாதுக்கள் எனப்படும். இவை உடல் நலம் பேறுவன. இத்தாதுக்களில் கோளாறு ஏற்படும் நிலையைத்

தோஷம் என்று குறிப்பிடுவதன்று. நோய்களின் தோற்றத்திற்கு முதன்மையான காரணம் இம் மூவகைத் தாதுக்களிலும் ஏற்படும் மூவகைத் தோஷங்களேயாகும். இவற்றைத் 'திரிதோஷம்' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது சித்த மருத்துவம்.

இந்த முத்தோஷங்களும் ஏற்படுவதன் அடிப்படைக்காரணமாகச் சித்த மருத்துவம் குறிப்பிடுவதையே வள்ளுவர் மிகினும் குறையினும் நோய் செய்யும் என்று குறிப்பிடுகிறார். மிகுதலும் குறைதலுமாகிய செயல்கள் பலதிறத்தாலும் உடலுக்கு உரியன ஆயினும் சித்த மருத்துவம் குறிப்பிடுவன ஒரு சில. உணவும் உழைப்பும் மிகினும் குறையினும் நோய் செய்யும் என்பது முதல் வகை.

"அற்றல் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு" (குறள் - 943)

என்பது உணவு பற்றிய அளவினை எடுத்துக் கூறுவதாகும். நெடிது நாள் வாழ, நோயின்றி வாழ வழி உணவு உண்ணும் முறையாலேயே ஏற்படுகிறது என்று கூறுகிறது. முன்உண்ட உணவு சீரணமான பின்பே உண்க; அதையும் உண்ண வேண்டிய அளவு அறிந்து உண்க என்கிறது. அளவு மிக அசீரணம் முதலான நோயுண்டாகும்; அளவு குறைய பல உறீனத்தால் எந்த நோயும் விரைவாகத் தாக்கப்படும். இதே அடிப்படையில் உழைப்புமிகுவதாலும், உழைப்பே இல்லாது சோம்பல் மிகுவதாலும் நோய்கள் உண்டாகும் என்பன சித்த மருத்துவத்தில் கண்ட நுண்ணிய காரணங்களாகும். இதே அடிப்படையில் உறக்கம், உள்ளத்து உணர்வுகளாகிய இன்ப, துன்ப உணர்வுகள், உடலுறவு ஆகியவற்றின் மிகுதியாலும் நோய்கள் தோன்றுகின்றன என்பது சித்த மருத்துவத்தில் நோய்களின் வகைகளோடு விளக்கம் பெறுகிறது.

இயல்பாகவே மக்கள் வாழ்க்கையில் உழைக்கும் அளவிற்கு ஓய்வெடுக்க முடியாத நிலை; ஓய்வு பெற்ற அளவிற்கு உழைக்க முடியாத சூழல்; உழைத்த அளவுக்கு உண்ண இயலாத நிலை போல்வன அமைந்து விடுகின்றன. இந்த இயல்புத் தன்மைகளே நோயைத் தோற்றுவிக்கின்றன என்பது கண் கூடு. உணவும் ஓய்வும் உழைப்பு மாகிய மூன்றும் ஒன்றையொன்று மிஞ்சும் போது வாதம், பித்தம் ஐயம் ஆகியவற்றின் முறை மீறுகின்றன. இவை மூன்றும் ஒழுங்காயிருந்தால் வாத, பித்த, ஐயம் ஆகிய மூன்றும் கூடாது; குறையாது. இந்த நிலையே நோயற்ற நிலையாகும்.

சித்த மருத்துவ மருந்துகளின் வகைப்பாடு

சித்த மருத்துவத்தில் ஒரு நோய்க்கு ஒரே மருந்து என்ற நிலை எந்த நோய்க்கும் கிடையாது என்பது ஒரு குறிப்பிடத்தக்கது சிறப்பாகும். ஒரு நோய்க்குப் பல மருந்துகள் கூறப் பெறுவதே சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும். அதே சமயம் ஒரு மருந்து பல நோய்களைக் குணப்படுத்தும் திறம் வாய்ந்தது என்பதும் கருதத்தக்கது.

ஒரு நோய்க்குப் பல மருந்து கண்டதற்குச் சிறப்பான காரணங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒரே நோய்க்குப் பருவத்திற் கேற்ற மருந்துகளைக் கொடுக்க வேண்டும் என்னும் அடிப்படையே முதற் காரணமாகும். பருவத்திற்கேற்ற மருந்து; அதுவும் பருவத்திற் கேற்ப - மாத்திரை, சூரணம், தயிலம், கிருதம், கியாழம், லேகியம், என்னும் பல வகை வடிவங்களில் மருந்து என்ற அமையும் சிறப்பு சித்த மருத்துவம் ஒன்றுக்கு மட்டுமே உண்டு என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் ஒரு சில நோய்களுக்கு உள்ளுக்குக் கொடுக்கும்

அகமருந்துகளும், சில நோய்களுக்கு வெளியில் பூசும் புற மருந்துகளும் சிலவற்றிற்கு இருவகை மருந்துகளும் என்று அமைவதும் சித்த மருத்துவ முறையில் உண்டு.

சித்த மருத்துவத்தின் வகைபாடுகளை மூன்று முறைகளில் அடக்கிக் கூறலாம். மணி, மந்திரம், மருந்து என்பன அந்த மூன்று முறைகளாகும். அவற்றுள் மணி மருத்துவ முறை என்பது அடிப்படையாகக் குறிப்பிடத்தக்கது. அதாவது வானத்தைப் பார்த்துக் காலத்தைக் கணித்துப் பருவ நிலைகளை நுட்பமாய் அறியும் முறையே மணிமுறை எனப் பெறுகிறது. இம்முறையே கால நிலைக்கு ஏற்ற மருந்துகளைத் திரட்டுதலும் தயாரித்தலும் பயன்படுத்துவதுமாகிய முறைகள் மேற்கொள்ளப்பெற்றன.

முதலில் அந்தந்தப் பருவ காலங்களில் எளிமையாகவும் மிகுதியாகவும் கிடைக்கும் இலை, ஈர்க்கு, காய், கிழங்கு, விதை, வேர் முதலிய மூலப் பொருள்களைத் திரட்ட இந்த மணி முறை பயன்படுத்தப் பெற்றது. இதே போல பருவத்திற்கேற்ற மருந்துகளைப் பக்குவமாய்த் தயாரிக்கவும் இக் காலமுறை மிகவும் பயன்பாடுடைய தாயிற்று. புடமிடுதல் முதலான சில தயாரிப்பு முறைகளுக்கு உரிய காலங்கள் உதவியாயமைந்தன. அதேபோல மருந்து கொடுக்கவும் பருவங்கள் கண்டது சித்த மருத்துவ முறை.

மந்திரம் என்பது பொருள் மறைந்த மொழி எனப்படும். "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்" என்பது குறள் மொழி (28). இங்கு நிறைமொழி மாந்தர்

என்பது அருளிக் கூறியும், வெகுண்டு கூறியும் அதற்குரிய பயனைப் பயந்து நிற்கும் மொழிகளைப் பேசும் முனிவர்களை – எல்லாம் துறந்து, எல்லாம் நிறைந்த உள்ளமுடைய முனிவர்களைக் குறித்து நின்றது. அவர்களின் கட்டளையாகிய மொழியே மந்திர மொழியாயிற்று. குருவணக்கத்தை முதலாவதாகப் பெற்றிருக்கும் சித்த மருத்துவத்தில் இம்மந்திர மொழியாகிய குருவின் கட்டளை மொழி மிகவும் பணிவோடு கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எந்தெந்தப் பருவங்களில் ஒரு மருந்தைத் தயாரிக்க வேண்டும் என்று அந்த நூல் எழுதிய குரு நியமிக்கிறாரோ அந்தந்தப் பருவங்களே அம்மருந்து தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத் தக்க முறையாகும். இதே போல நூலாசிரியராகிய குரு கூறும் இறைவழிபாடுகளாகிய பூசை முறைகள் தவிர்தல் இன்றி மேற் கொள்ளப் பெறுகின்றன. 'இந்த நாள் இந்த நட்சத்திரம் கூடிய சூரிய உதயத்திற்கு முன் ஆன இந்த நேரத்தில் இந்த மந்திரத்தை இத்தனை முறை செபித்து இன்னின்ன பொருள்களை நைவேத்தியம் செய்து கற்பூரத் தீபங்காட்டி இந்தத் திசையில் செல்லும் வேரை நறுக்கி எடுக்க' என்பது போன்ற குருவின் கட்டளைகள் அவ்வாறே பின் பற்றப்படுகின்றன.

மூன்றாவதாக மருந்து செய்முறையிலும் தீயின் அளவு, எரிக்கும் நேரம், இறக்கும் பதம் ஆகியவையும் குருவின் ஆணையின் படியே பின் பற்றப் படுகின்றன.

நோயறி முறை

நோயுற்றாரை நேரில் கண்டும், அவர்தம் நோயின் நிலையைக் கண்டும், தொட்டும் கேட்டும் அறிந்தும் நோயின் தன்மைகளை

அறியவே பிற மருத்துவ முறைகளில் நோயறி முறைகளாகக் காணப் பெறுகின்றன. ஆனால் சித்த மருத்துவத்தில் நாடி பார்த்து நோயறியும் முறையே கையாளப்பெறுவது இம்மருத்துவ முறையின் தனிச் சிறப்பாகும். நாடி வகைகளைப் பற்றிச் சித்த மருத்துவ நூல்கள் பலப் படப் பேசுகின்றன என்றாலும் வாத நாடி, பித்தநாடி, சிலேத்தும நாடி என்ற மூன்றுமே அடிப்படை நாடிகளாகப் பேசப் பெறுகின்றன. அவற்றின் இயல்புத் துடிப்பு நிலை, பல திறப்பட்ட வேறுபாட்டுத் துடிப்பு நிலைகள் ஆகியவற்றால் நோயறியும் முறை சித்த மருத்துவத்துக்கே உரிய நோயறி முறையாகும்.

சித்த மருத்துவத்தின் பயன்

பிற மருத்துவ முறைகளைப் போல நோயைப் போக்குவது சித்த மருத்துவத்தின் பயன் என்றாலும் சிறப்பாக அப்பயனை மூ வகைப்படுத்திக் கூறலாம்.

1. நோயைப் போக்குவது
2. மீண்டும் அந்நோய் வராமல் தடுப்பது
3. நோயைத் தணித்து உடல் நலத்தைக் காப்பது

ஆகிய மூவகைப்பயன்கள் சித்த மருத்துவத்திற்கு உண்டு.

சித்த மருத்துவக் காலம்

சித்த மருத்துவமே மிகப் பழமை வாய்ந்தது என்பதற்குப் பல வரலாற்றுப் பேரறிஞர்கள் சில வரன்முறைகளை வகுத்துக் காட்டுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி மருத்துவ முறைகளையும் அவற்றின் கால காலங்களையும் முறைப்படுத்துவதனால் சித்த மருத்துவம் இரண்டாமிடம்

பெறுகிறது.

ஆயுர் வேதம் முதலான சில மருத்துவ முறைகளைக் காலம் கடந்தவை எனவும், சிலர் பிற்காலத்தவை என்றும் கூறுவர். ஆயினும் ஆயுர்வேதம் சித்த மருத்துவக் காலத்தை ஒட்டியதாகவே அறிய முடிகிறது. ஆனால் அட்டாங்க சாரங்கதர சங்கீதம் ஆகிய நூல்கள் ஆயுர் வேதத்தைச் சார்ந்தவையாதலின் அந்த நூல்களின் கால வரையறை ஆயுர் வேதத்திற்குப் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியதே.

அடிக்குறிப்புகள்

கலைக் களஞ்சியம், தொகுதி 8, ப. 135

கலைக் களஞ்சியம், தொகுதி 4, ப. 642

திருவள்ளுவ மாலை, 11, ப. 5

காஞ்சிபுராணம், கட. வாழ்த்து. 9

அமைப்பு நிலை ஆய்வு

சிறப்பு நிலை ஆய்வு

'தேரையர் நோயின் சாரம்' என்னும் இந்த நூல் தேரையரால் இயற்றப்பெற்றது; நோயைப் பற்றியும், நோயுக்காம் மருந்தைப் பற்றியும் சுருக்கமாகக் கூறுவது என்ற பொருளையுடையது.

முதல் நூலா?

சித்தர்களில் அகத்தியரை அடுத்த நிலையில் குறிப்பிடப்பெறுபவர் தேரையரேயாவர்.

"சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
 தேரையர் காப்பியந்தரு நாகட மந்தாதி
முகாவண்ணம் நான்மாலை யமக வெண்பா
 வீண்கெதுகைப் பாவினைவெல் லொரு மெச்சம்
மகாமணிமைக் கரைசலை முறைவி ராதும்
 வேதாந்த சித்தாந்த வைத்ய வாத
முகாதியிற மசையாத விரிவுள் வேத
 முத்தமுமாய் விள்ளுமஃ துண்மை தானே[1]

என்னும் பாடல் சிகாமணி வெண்பா முதல் மகாகரிசல் ஈறாகப் பன்னிரண்டு நூல்களும் தேரையரால் இயற்றப் பெற்றவை என்பதை உணர்த்துகிறது. மேலும், நீர்க்குறி நெய்க்குறி, தைலவர்க்கம், சிகிச்சைக் கிரமம்,

இவை தேரையரின் பெருநூல்களாக இருக்கின்றன. இவற்றின் சுருக்க நூல்கள் பல வாகடம் என்னும் பெயரைப் பெறுகின்றன. இவற்றினும் சுருங்கிய நூல்கள் பல சாரம் என்னும் பெயரைப் பெறுகின்றன. இவற்றுள் பெருநூல்கள் என்பன, நோய்க்குணம், நோய்க்குரிய மருந்து, அம் மருந்துசெய்முறை, அநுபானமுறை, பத்தியம் முதலான அனைத்தைச்

செய்திகளையும் விரிவாகப் பேசுவனவாகும். நோய்க்குரிய குணங்களும் அவற்றுக்காம் மருந்துகளும் என்னும் செய்திகளை மட்டும் த[illegible]ன வாகடம் என்னும் பெயர் பெறுவன. நோய்பெயரும் அதற்கான மருந்தும் என்ற நிலையில் மிக எளிய, அடிக்கடி பாதிக்கக் கூடியதும் நோய்களுக்குரியவற்றை மட்டுமே சுருக்கமாகத் தருவதே சாரம் என்று பெயர் பெறுகிறது. இந்நூல்க்கு பெருநூல் பாடல்களில் சில அப்படியே எடுத்துக் கொள்ளப் பெற்றவையாகுலும் பல பெருநூல் செய்திகளைச் சுருக்கி எழுதப்பெற்ற வேறு பாடல்களால் ஆனவையாகவும் அமைகின்றன.

இந்த அடிப்படைக் கருத்துகளை மனத்திற்கொண்டு தேரையர் "நோயின் சாரம்" என்னும் இச் சுவடியைக் காணுகின்றபோது தேரையர் பெருநூலின் வழி நூலாகுமோ என்று கருதத் தோன்றுகிறது. தேரையரின் மடுக்கு நடையும், சொற்செறிவு பொருட்செறிவுகளும் திறம்பட அமைய வில்லை மேலும்,

"ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை ஆராய்ந்து
சீரியதாம் செந்தமிழிற் செப்பவே" (நூல்-1)

என்னும் அகச் சான்று தேரையர் சாரம் என்னும் இந்த நூல் வடமொழி நூலைப் பின்பற்றி எழுதப்பெறுவதாகவும் எடுத்துக் காட்டுகிறது. இவற்றால் தேரையனார் பெருநூலை ஒட்டிய வழிநூலே நோயின் சாரம் என்னும் இந்நூலாகும் என்றே கூறமுடிகிறது.

நூலின் பயன்

நோயின் சாரம் ஆதலின் அடிக்கடி தோன்றுகின்ற, எளிய மருத்துவத்திற்குரிய நோய்களே இந்நூலின் கூறப்பெறுவதால் அவற்றிற்கான மருத்துவமுறை மிக எளிமையாக அனைவராலும் மேற்கொள்ளக் கூடியதாக

அமைகிறது. மருந்துப் பொருள்கள் பெரும்பான்மையும் உணவுப் பொருள்களாகவே அமைகின்றன. அவற்றால் வேறுவகை மாற்றமோ தீங்கோ பின் விளைவுகளோ ஏற்படா என்பதை உறுதியாகக் கூறலாம். இவ்வாறான நோய் வகைகளாக நூலுள் கூறுவனவற்றை இரு வகையாகப் பிரித்துக் கூறலாம். அவை 1. வகைப்பாடுகள் உள்ள நோய்கள் 2. வகைப்பாடற்ற நோய்கள் என்ற இரு வகைகளில் பிரித்துக் காட்டலாம்.

1. வகைப்பாடுடையவை:

1. அடைப்பு 2. இருமல் 3. கரப்பான்
4. காசம் 5. கிரந்தி 6. கிராணி
7. குன்மம் 8. சுரம் 9. தோடம் (தோஷம்)
10. பித்தம் 11. வாதம்

என்பன ஒவ்வொன்றும் பல உட்பிரிவுகளை உடையவை. ஒவ்வொன்றிற்கும் பல வகையான மருந்து முறைகள் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள், அடைப்பு என்பது

கல்லடைப்பு நீரடைப்பு, நீர்க்கட்டு என்ற வகைகளை உடையவை இருமல் என்னும் நோய் ஈளை இருமல், குத்திருமல், வறட்சிஇருமல் வச்சுர இருமல் என்று வகைப்படுத்தப் பெற்றுப் பல வகை மருத்துவ முறைகளையுடையதாக விரித்துக் கூறப் பெறுகிறது.

கரப்பான் என்னும் நோய், அரிகரப்பான், செங்கரப்பான், தோஷகரப்பான், பல கரப்பான், வாதக்கரப்பான், வாய்க்கரப்பான் என்னும் வகைகளில் உரிய மருத்துவ முறைகளைப் பெறுகின்றன.

சுவாசகாசம், பஞ்சகாசம் என்னும் இருவகையில் அமைகிறது காசம் என்னும் நோய், கிரந்தி, கிரந்தி கட்டு என்பன கிரந்திவகைகள்.

கிராணி என்பது இரத்த மூலக்கிராணி, வாயுக்கிராணி என்ற இரு வகையினும் குன்மம் என்பது அட்டகுன்மம், ஓருகுன்மம், வலிகுன்மம், வாதகுன்மம் எனவும் வகைப்படுத்தப் பெறுகின்றன.

சுரம் என்னும் நோய் அறுபத்து நான்கு வகைப்படுகிறது. ஆயினும் பெருவாரியாகப் பாதிக்கக் கூடியவையாகிய அத்திசுரம், உட்காய்ச்சல் சுரம், குளிர்சுரம், சகலசுரம், சிலேட்டும சுரம், தாகசுரம், தாபசுரம், பித்த சுரம், வாத சுரம், விடசுரம் என்னும் பத்து வகைகளுக்கான மருந்துகள் மட்டுமே இந்த நூலில் கூறப்பெறுகின்றன.

இருபத்தைந்து வகைத் தோடங்களில் சகலதோடம், தேரைதோடம், பட்சிதோடம் என்னும் மூன்றுமே நூலில் அடங்கியுள்ளன. இரத்த பித்தம் வாதபித்தம் என இரு வகையில் பித்த நோயும், அண்ட வாதம், எரிவாதம், வரைவாதம் என்னும் மூன்று வகையில் வாத நோயும் நூலில் இடம் பெறுகின்றன.

அசீரணம், அதிகாசம், அரையாப்பு, ஈளை, உடல் உலரல், உப்புசம், எக்கடி, எழுவாளம், ஐயம், காதெழுச்சி, சத்தி, சன்னி, சூலை, தசமூலம், பல்வலி, பாண்டு, பிரமியம், பிரமேகம், புண், பெரும்பாடு, மகோதரம், மந்தம், மலர்க்கட்டு, மாந்தம், மூலம், மேகம், வயிற்றுவலி, விக்கல், விப்புருதி, விடம், வீக்கம் ஆகிய தனிநிலை ஒவ்வொன்றுக்கும் நோயின்நிலை, காலம், நோயாளியின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப பல வகை மருந்துகள் சொல்லப்படுகின்றன.

மருந்துப் பொருள்கள்

சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்பெறும் மருந்துப் பொருள்களைப்

பெருவாரியான வகைகளாக மூவகைப் படுத்தினர். அவை முறையே தாவரவர்க்கம், பிராணி வர்க்கம், தாதுவர்க்கம் என்பனவாகும்.

1. செடிகொடி, மரம் புல்பூண்டு ஆகியவற்றின் இலை, ஈர்க்கு, காய், கிழங்கு, குச்சி, பட்டை, பழம், பூ, வித்து, வேர் ஆகியவை அடங்கிய மருந்துப் பொருட்களைத் தாவரவர்க்கம் என்பர்.

2. மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன போன்ற பிராணிகளில் உடலிருந்து கிடைக்கும் மலம், மூத்திரம், கஸ்தூரி கோரோசனை புனுகு போன்ற மருந்துப் பொருள்கள் பிராணி வர்க்கப் பொருள்களாகும்.

3. இரசம், உலோகங்கள், நவரத்தினங்கள், பாஷாணம் போன்றவற்றைத் தாதுவர்க்க மருந்துப் பொருள்களை பயன்படுத்தப் படுவதுண்டு.

மருந்து முறைகள் - அகமருந்துகள்

நூலில் கூறப்படுகின்ற மருந்துகளை அகமருந்து, புறமருந்து என இருவகையாக்கிக் காணமுடிகின்றது. அவற்றுள் அகமருந்துகள் உள்ளுக்குக் கொடுக்கப் பெறுபவை. அவை பிற மருந்துகளாகிய துணை மருந்துகளோடு (அனுபானம்) கொடுக்கப் பெறுபவையும் உண்டு. அனுபானம் இன்றிக் கொடுக்கப் பெறுவையும் உள்ளன. சிலவற்றிற்குப் பத்தியம் கூறப்படுகிறது. பத்தியம் இல்லாத மருந்துகள் பல. இந்த அகமருந்துகள் நோயின் தொடக்கநிலை, வளர்ச்சியுற்ற நிலை ஆகியவற்றிற்கு ஏற்பவும், நோயுற்ற பருவ காலத்திற்கு ஏற்பவும், நோயாளியின் வயதுக்கு ஏற்பவும் மருந்தும்,

மருந்தின் அளவும் வேறுபடுவது குறிப்பிடத்தக்கது. பருவகாலத்திற்கு ஏற்ற அனுபானங்கள் கையாளப்பெறும். அகமருந்துகள் தயாரிக்கப் பெற்ற காலத்திலிருந்து சில கால அளவு வரையிலேயே வன்மை உண்டு. ஆதலின் அந்த நாட்களுக்கு மேல் பயன்படுத்துவதனால் நோய் நீக்கும் தன்மை குறைந்து பயனில்லாது போகும்.

இவ்வாறு கொடுக்கப்பெறும் அகமருந்துகள் நூலுள் பதினொரு வகைகளாகக் காணப்பெறுகின்றன. அவை முறையே, எண்ணெய், கியாழம், கிருதம், குடிநீர், சாறு, சூரணம், தைலம், நெய், பானம், பொடி, லேகியம் என்பனவாகும்.

புற மருந்துகள்

கண், காது ஆகிய உறுப்புகளில் விடும் மருந்துகளும் கைகால் முதலான உறுப்புகளில் பூசும் மருந்துகளும் புற மருந்துகள் எனப்படுகின்றன. கட்டி, கரப்பான், காயம், சொறி, சிரங்கு, பரு, புண், வேர்க்குரு போன்ற உடலில் தோன்றும் நோய்களுக்குப் பூசும் மருந்துகளாகவும், வைத்துக் கட்டும் மருந்துகளாகவும் புறமருந்துகள் பயன்படுத்தப் பெறுகின்றன. புறமருந்துகளுக்கும், பருவகாலமும் வயதும் பார்க்கப்படும். ~~புறமருந்துகளுக்கும் பருவகாலமும் வயதும் பார்க்கப்படும்.~~ புற மருந்துகளுக்குப் பத்தியம் முதலான கட்டுப்பாடுகள் இல்லை. இந்நூலுள் புறமருந்துகளாக சிலவகை எண்ணெய், பூசமருந்து, பொடி போன்ற குறிப்பிடப்பெறுகின்றன. புறமருந்துகளும் தயாரித்த பின் குறிப்பிட்ட காலம் வரையிலேயே நோய் தீர்க்கும் வன்மையுடையதாயிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருந்து செய் முறைகள்

மருந்துகளைப் பக்குவம் செய்யும் முறைகள் மிக எளிய முறையிலேயே அமைகின்றன. அவை யாவராலும் மேற்கொள்ளக் கூடிய முறைகளாகும். எளிமுறையுடையனவாக நூலில் அமையும் செய்முறைகளாவன:
மருந்துப் பொருட்களை,

1. அரைத்து மருந்தாக்குதல் 2. சூரணமாய்ச்செய்தல் 3. தட்டிப்போட்டுக் காய்ச்சுதல் 4. திரித்புடமிடுதல் 5. நிழலில் உலர்த்திச் சூரணமாக்குதல் 6. பிட்டாவியாகச் செய்தல் 7. பொடி செய்தல் 8. மத்தித்துக் கடைந்து மருந்தாக்குதல் 9. வெந்நீரில் கரைத்து மருந்தாக்குதல் 10. வேகவைத்தல் ஆகிய முறைகள் கூறப்பெறுகின்றன.

அரைத்தல்

அரத்தை, சதகுப்பி... இவற்றை நொச்சியிலைச்சாற்றில் இழை அரைத்துக் காய்ச்சிக் கியாழமாக்கி (பா. 3); அசைத்ததை வெள்ளாட்டின் பாலில் பெட்டொன்றாய் வேகவைக்க (பா. 114) என்னும் முறைகள் அரைக்கும் முறைக்கும், அரைக்க உதவும் துணைப் பொருள்களுக்கும் சான்று களாகின்றன. அரைத்தவற்றை வேகவிட்டுக் கியாழமாக, குடி நீராகப் பயன்படுத்தும் முறைகளும் இவற்றில் அடங்குகின்றன.

சூரணம் செய்தல்

"நீருநிழலதனில் நீபுலர்த்திக் - கூடவே
சூரணமாய்ச் செய்ததனைச் சூட்டவெருகடியாய்"... (109)

என்பது நிழலில் உலத்திப் பின் சூரணமாக்க வேண்டுமென்பதனால் மருந்துப் பொருள்களை நேரில் வெயிலில் உலர்த்தினால் அவற்றின் வீரியம் குறைந்து போகுமாதலின் நிழலுலர்த்தலே கூறப்பெறுகிறது.

தட்டியிட்டுக் காய்ச்சுதல்

கரிவேப்பிலை ஈர்க்கு, ஒதியன் ஈர்க்கு, சுக்கு... முதலான வற்றைத் தட்டியிட்டுக் காய்ச்சி, அவ்வாறு காய்ந்த நீரைக் குடிக்க (பா. 10) என்பதாகக் கூறுவது ஒரு தயாரிப்பு முறையாகும். இவ்வாறு காய்ச்சப் பெற்றது கியாழம் எனவும் குடிநீர் எனவும் பெயர் பெறுகிறது. இவ்வாறு கியாழம் தயாரிக்க மண்பாண்டமே

ற்றது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். (பா. 8)

புடமிடுதல்

முக்கிரட்டை வேரின் மீது சுண்ணத்தைப் பூசி மூடிப் போதுமான அளவான தீயில் புடமிட்டு (சுட்டு)ப்பின் மேலே உள்ள சுண்ணாம்புத் தூளை நீக்கி விட்டுப் பயன்படுத்தவேண்டும். இது புத்தூளை நீக்கிவிட்டுப் பயன்படுத்த வேண்டும். இது மருந்து சுத்தி முறையாகவும் கொள்ளப்பெறும்.

மத்திட்டுக் கடைதல்

"... காடியுடன் கரைத்து-

மத்திட்டுத் தான் கடைந்து வந்த நுரை பூசுக்க" (6)

என்பது மத்திட்டுக் கடைந்து மருந்து செய்யும் முறையைக் கூறுகிறது. இம்மருந்து புறமருந்தாக மேனுக்குப் பூசப் பயன்படுவதாகும்.

"... ஒன்றாய் வருதயிரால்

மத்திட்டுத் தான் கடைந்து வந்த வெண்ணெய்

கொண்டு விட" (920)

மருந்துக் கலவையைக் கடைந்து அதில் கிடைக்கும் வெண்ணெயையுள்ளுக்குக் கொடுக்கலாம் என்னும் வகையில் இது அகமருந்தாகும்.

பிற முறைகள்

அரைத்து வெந்நீரில் கரைத்து அருந்தும் முறையும், பிட்டாவியாக அவித்து அதன் நீரைக் கொண்டு செய்யும் மருந்து முறையுமாகப் பிற மருந்து வகைகளும் அமைகின்றன.

துணை மருந்துகள்

நோய்க்குரிய மருந்துகளைத் தயாரிப்பதில் மிக எளிமுறைகளே கூறப்பெறுவது இந்நூல். இதில் சித்த மருத்துவ முறைப்படி சில துணை மருந்துகளும் கூறப்படுகின்றன. மருந்துகளுக்கு மேலும் நோய் நீக்கும் திறனைப் பெருக்குவிப்பனவே துணை மருந்துகளாகும். துணை மருந்துகளைக் கலப்பதில் மருந்துகளை எளிமையாக உண்ண முடிகிறது. பருவக் காலத்திற் கேற்ற பல துணை மருந்துகள் சொல்லப் பெறுகின்றன. அவற்றால் மருந்தின் திறன் அதிகரிப்பதோடு பிறவாகிய எதிர் விளைவுகள் எதும் தோன்றாதவாறு தடுக்கப் பெறுகின்றன. இவ்வகைப் பலன்களைத் தருகின்ற துணை மருந்துகளாக நூலுள்,

அவல், ஆவின் கோமயம், ஆவின்பால், இஞ்சிச்சாறு, எருமைமோர், சர்க்கரை, தேன், நெய் வெள்ளாட்டின் பால், வெண்ணெய் போன்ற பொருள்கள் கூறப்பெறுகின்றன.

"அரைத்த மருந்ததனை அவலில் பிசறியுண்ண" (99)

"... பிட்டிட்டுக்
குல ஆவின் கோமயத்தில் கூட்டி அருந்திடவே" (53)

"ஆவின்பா விற்கொள்ள அகலும் பதினெட்டும்" (82)

"... மென்பொடியாய்
ஈரவுள்ளி இஞ்சிச்சா றதனிலிடில்" (52)

என்னும் சான்றுகள் முறையே அவல், ஆவின் கோமயம், ஆவின்பால், இஞ்சிச்சாறு ஆகியவை தனை மருந்துகளாகப் பயன்படுத்துமாறு கூறப் பெறுவதற்கான சான்றுகளாகும் இவற்றைப் போலவே.

"வசம்புடனே கூட்டி வருமெஞ்சை போரில்
பசம்பவே பாய்ச்சு" (112)

"இரண்டுகாசு அதனையெடுத்துக்
காலையில் தேனிலுண்ண" (61)

"ஆவின் நெய்யில் அரைத்ததனைத்
தேனிற் குழைத்துண்ண" (96)

"அரைத்ததனைத்தான் வெள்ளாட்டின் பாலில்" (114)

"உழக்காகக் காய்ச்சியதில் உற்றவெண்ணெய் தேசப்
பழத்தளவு விட்டருந்த" (107)

என்பன முறையே எருமைமோர், தேன், நெய், வெள்ளாட்டின்பால் வெண்ணெய் ஆகிய தனை மருந்துகளைக் கூறும் சான்றுகளாகின்றன.

மருந்து உண்ணும் முறையும் அளவும்

கூறப்பெறும் அனைத்து மருந்துகளுக்கும் உண்ணவேண்டிய அளவும், உண்ணும் நேரம், நாள்கணக்கு ஆகியவை ஆங்காங்கு தெளிவாகவே கூறப்பெறுகின்றன. இம்மருந்துகளைச் சமனாகச் சேர்த்தரைத்து (117) பனியில் வைத்து உண்ணீர் (97);

"... துய்ய பொடி
இரண்டுகா சதனையெடுத்துக்
காலையில் தேனிலுண்ண" (61)
"உதிர வெண்ணெய் தேசிப்பழத்தளவு விட்டருந்து" (107)

"மூன்று நாள் இக்குடிநீர் கொள்" (93)

என்பன மருந்து உண்ணும் முறைகளையும், உண்ண வேண்டிய அளவு முறைகளையும் கூறுவனவாகும். 'நன்னுபொடி செய்து, சர்க்கரையும் தேனும் தளரக் குழைத்து உண்ண" (14, 15) என்பது துணை மருந்துகள் சேர்க்க வேண்டிய பக்குவத்தைக் குறிப்பதாகும்.

மருத்துவப் பாடலில் இலக்கிய நயம்

நூலாசிரியர் செய்திகளை மகடூஉ முன்னிலைப் படுத்திக் கூறும் வழக்கினை ஆங்காங்கு கையாண்டிருக்கிறார். இம் முன்னிலை

முறையே கேள்! எனவும், செப்பு, இயம்பு எனவும் இரு வகைகளில் கையாளுகிறார். உலகத்தவருக்குப் பயன்படும் நூலே ஆயினும் ஒரு பெண்ணை விளித்து அவளிடத்திலே கூறுவதுபோல உலகிற்குச் செய்திகளைக் கூறும் இம்முறை இலக்கிய முறையைச் சிறப்பாக நீதி இலக்கிய முறையைப் பின்பற்றிய நடையாகும்.

"... நிறை பங்கய மாதின்
எழிலுருவத்தாளே இயம்பு" (42)

இம்முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பெறும் பெண் அழகிய தாமரையில் வீற்றிருக்கும் திருமகளின் உருவத்தை உடையவள் என்பதாகச் சிறப்பிக்கப் பெறுகிறாள். இதேபோல்,

"செந்தாமரை முகத்தாய் செப்பு' (43)

என அவள் முகம் உவமையால் சிறப்பிக்கப்படுகிறது.

'கெண்டை விழியாள் இதனைக் கேள்' (45)

'சேல் விழியாய் காய்ச்சிடு சேர்த்து' (77)

என்பன மகடூஉ முன்னிலையாகிய பெண்ணின் விழிகளை உவமித்துக் கூறும் சிறப்புத் தொடர்களாகும்.

'அளிசேர் குழல்மாதே! (110); தேன்மொழியாய்! (74)

போல்வனவும் முன்னிலைத் தொடர்களாகும்.

சொல்லாமரபின் - செய்யாமரபின்

கேட்குந் திறனும் சொல்லுந் திறனும், செய்யுந்திறனும் செல்லுந் திறனுமற்ற அஃறிணைப் பொருள்களைக் கேட்குந போலவும் சொல்லுந போலவும், செய்யுந போலவும் செல்லுந போலவும் அவற்றிடம் எடுத்துக் கூறும் முறை இலக்கியங்களில் அமைவன இம் முறைக்கு இலக்கணமும் உண்டு.[1] இந்த முறையைப் இங்கு பல இடங்களில் கையாளுகின்றார் நூலாசிரியர்.

'... சிலேட்டுமத்தால் வந்தபிணி
சொன்னபோதே ஓடும் நூ" (32)

இந்த மருந்தைத் திணங்கழஞ்சு உண்ண, சிலேட்டுமத்தநோய் போ என்று சொன்ன உடனே ஓடிவிடுமாம். அந்த நோய் நாம் சொன்னதைக் கேட்பதாகவும், கேட்டுமேலே நிகழவிருப்பது என்ன என்பதை உணருவதாகவும், உணர்ந்து உடனே ஓடிப்போவதாகவும் கற்பனை செய்கிறார் ஆசிரியர். ஓடிய அந்த நோய் தூர சென்றதாகவும் கற்பிக்கிறார். தூரதாக மற்றொரு நோயிடம் சென்று, நீ அவனை அணுகாதே என்று தடுப்பதாகவும் கற்பனை செய்து தூரதாக ஓடும் என்றே கூறுவார். இதனைப் போலவே,

"சுவாசகாசங் கெட்டேன் கெட்டேன் என்றுங்
கேள்" (31)

என்பதில் நோயாளி மருந்தை உண்டவுடனே 'நான் கெட்டேன் கெட்டேன்' என்று கூறி அலறி அழியுமாம் என்கிறார். அழியும் அழிவு காரணமாக

அதன் அலறல் மொழியை அடுக்குத் தொடராக அடுக்கியும் கூறுகிறார்.

"உண்டக்கால் போகாதோ உட்காய்ச்சல்! பிரமியமும்
கண்டக்கால் போகாதோ காண்" (22)

என்பன மருந்துண்டவுடன் உட்காய்ச்சல் போகும்; மருந்து உண்டவரைக் கண்டாலே பிரமியம் போகும் என்பனவும் நல்ல இலக்கிய நடை உடையன வாகும்.

"அசீரணம் - புகுமே சமுத்திரத்தில்' (38)

'ஓடுமே மந்தம் ஒழியுமே நாட்டைவிட்டு
வாடுமே கேட்டு மனம்' (39)

என்பவற்றுள்ளும் நல்ல இலக்கிய நயங்கள் அமைகின்றன. அசீரணம் கடலில் புகுந்து அழியும்; மந்தம் நாட்டை விட்டே ஓடும்; அது ஓடுவதைக் கேட்டு உள்ளமே வருந்தும் என்பவற்றுள். நோய் ஒடுவதைக் குறிப்பிடுவதோடு அதற்காக வருந்தும் நல்ல உள்ளத்தையும் காட்டுகிறார்.

முடியார் கூந்தல்

'பிரிந்தஇள வெந்நீரில் பின்முடியார் கூந்தல்
அரிந்துமதன் வேரை யரைத்துப் - பரிந்துண்ண (37)

முடியார் கூந்தலை அரிந்து அதன் வேரையரைத்து உண்க' என்று கூறும் இப் பாடலடிகளில் மேற்போக்கான பொருள் இழிபொருளாகவே

அமைகிறது. ஆனால் முதியார் கூந்தல் என்பது 'குதிரை வாலி' என்னும் மூலிகையைக் குறிப்பதாக அறியும் பொழுது தான் இது உண்மையான மருத்துவ முறையாகும் என்பது புலப்படும். இவ்வாறு மறை பொருள் பட பேசுமிடங்கள் பல அமைகின்றன.

அடிக்குறிப்பு

1. தொல். பொருள். பொருளியல் - 2, செய்யுளியல் - 201

நூலின் மருந்துப் பொருள்களுள் சில

மூலிகைகள் 1 64

அரத்தை

இது சிற்றரத்தைப் பேரரத்தை என இரு பிரிவுகளாக உள்ளது.

அரத்தை கோழையகற்றி, வெப்பகற்றி, பசித்தீத் தூண்டி முதலிய செய்கைகளையுடையது.

இது நெஞ்சுக் கோழை, ஈளை, இருமல், நாட்பட்ட ஐயம், சீச்சுரத்தாற் பிறந்த ஐயம் முதலிய பிணிகளை நீக்கும் ஐய நோய்களினால் மந்தப்படும் பசியைத் தூண்டும் அரத்தையைப் பொடி செய்து 2 முதல் 4 கிராமம் தேனுடன் கலந்துக் கொடுத்து வந்தால் மேலேயுள்ள கப நோய்கள் அனைத்தும் நீங்கும்.

சிற்றரத்தை

வளி, ஐயக்குற்றங்கள், சீதளம், இருமல், பல சுரம் ஆகிய இவைகள் போகும்.

ஒரு துண்டு சிற்றரத்தையை வாயிலிட்டுச் சுவைக்க தொண்டைக் கட்டு, கோழை, இருமல் போகும்.

அழுவோடு உண்டாகும் கோழைக்கட்டுக்கு இதை ஒரு துண்டு கற்கண்டுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும்

பேரரத்தை

இது உடல்வலி, புறவலி (பின்னிசிவு), முப்பிணி, ஐய சுரம், தலையின் நீரேற்றம், குதவலி, நச்சுகள் போன்ற நோய்களை போக்கும்

ஆடாதோடை

இது வாசை என்ற வேறு பெயரால் அழைக்கப்படுகிறது. ஆடுதொடா இலை என்றும் கூறப்படுகிறது. கால்நடை (ஆடு - ஆ) தொடாததால் (உண்ணாததால்) இப்பெயர் உண்டாயிற்று. கோழைய கற்றி, இசிவகற்றி, செய்கையையுடையது. அதனால் இருமல், இளைப்பு என்ற நோய்களைக் குணப் படுத்தும்.

ஆடாதோடையின் குணத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது.

"ஆடாதோடைக்கும் அறு மூளைக்கும்
பாடாத நாவும் பாடும்"

என்ற தொடர் பயன்படுத்தப்பெறுகிறது.

இதனை இலைரசம், குடிநீர், மணப்பாகு, பொடி முதலிய பலவகைகளிலும் பயன்படுத்தலாம்.

இதன் இலையை உலர்த்தி சுருட்டுப் போல் பிடிக்க இரைப்பு (Asthma) நோய் போகும்.

இலை, வேர், பூ, பட்டை போன்ற தாவரத்தின் பல பாகங்களும் பயன்படுகிறது.

இதன் பூவை வதக்கி இரு கண்களின் மீதும் வைத்துக் கட்ட கண்களில் உண்டாகும் நோய்கள் போகும்.

இதிலிருந்து ஆடாதோடைக் குடிநீர், நெய், மணப்பாகு போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

இரத்தப் பித்த நோயின் (Hyper tension) வகைகளான மேல் நோக்குக் கால், கீழ் நோக்கு கால் நோய்களை நீக்கப் பயன்படும் மருந்துகளைத் தயாரிக்க இது மிகவும் பயன்படுகிறது.

சிற்றாமுட்டி

இது சிறுந்தொட்டி, சிறு குருந்தொட்டி என வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இது வறட்சியகற்றி செய்கையையுடையது. இது எலும்புசுரம் அழல் ஐயம் முதலிய நோய்களை நீக்கும். கண்ணுக்கு ஒளி கொடுக்கும் தைலங்களில் சேரும். இதன் வேரை குடி நீரிட்டுக் கொடுக்க அத்தி சுரம் போகும். சுர தாகத்தைப் போக்கும்.

சிற்றாமுட்டி, பச்சைப் பயறு, பர்ப்படகம், வில்வம், கொத்து மல்லி ஆகியவற்றை சம எடை எடுத்து. அதற்குத் தகுந்த நீர் விட்டு. எட்டில் ஒன்றாகக் காய்ச்சி, பழைய அரிசிக் கஞ்சியுடன் சேர்த்துப் பருகினால் தோஷசுரம் நீங்கும்.

சிற்றாமுட்டி வேர்ப்பொடியைத் தண்ணீரில் கலந்து. குடிநீராக்கி, சுக்கு, மிளகு, ஏலம், வெட்டிவேர் முதலியவற்றை சிற்றாமுட்டி வேர்ப் பொடியில் 1/20ல் ஒரு பங்குக்கு எடுத்துக் கொண்டு அதை அரைத்து மேலேயுள்ள குடிநீரில் சேர்த்து அத்துடன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சித் தலை முழுகி வர கண் நோய்கள், வளி நோய்கள் போகும்.

சுக்கு

சுக்கு மிகவும் முக்கியமான ஒரு மூலிகையாகும் எனவே தமிழ் நாட்டில்

"சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை
சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை"

என்ற பழமொழி வழங்கப்படுகிறது.

உலர்ந்த இஞ்சியே சுக்கு எனப்படும். இது கிழங்கு வகையைச் சேர்ந்தது.

சுக்கு வெப்பமுண்டாக்கி, பசியைத் தீத்தூண்டி, அகட்டு

வாயகற்றி முதலிய குணங்களையுடையது.

இது செரியாமை, மார்பெரிச்சல், புளியேப்பம், இரைப்பு இருமல், தலைநோய் நச்சுக்காய்ச்சல், வயிற்று வலி முதலிய நோய்களைப் போக்கும்.

சுக்கைப் பற்றாகவும், குடிநீர், பொடி, லேகியம் போலச் செய்தும் பயன்படுத்தலாம். வாயுவை நீக்கக் கூடிய "சௌபாக்ய சுண்டி" லேகியம் என்ற சிறந்த வகை லேகியத்தில் பொருளாகவும் பயன்படுகிறது.

சுக்கை வாயிலிட்டு மெல்லப் பல்வலி போகும். ஒரு சிறு துண்டு சுக்கைக் காதினுள் செலுத்த தூதடைப்பு, களைப்பு, ஐயம் நீங்கும். சுக்கையரைத்து மூட்டு வீக்கங்களுக்குப் பூச வீக்கம் நாளுக்கு நாள் குறையும்.

திப்பிலி

இது திரிகடுகான 'சுக்கு, மிளகு, திப்பிலி'யில் ஒன்று. திரிகடுகின் மேன்மையை உணர்த்த தமிழ் இலக்கியங்களில் 'திரிகடுகம்' என்ற இலக்கியம் உள்ளது. இதற்கு காமன், குடாரி, கோழையறுக்கி, வைதேகி, உதி, மாகதி, எனப் பலப் பெயர்கள் உள்ளது.

இது மிளகை விட காரம் உடையது. இது அரிசித் திப்பிலி, யானைத் திப்பிலி என இரு வகைகளையுடையது. இதன் காயும், அரிசியும் மிகவும் பயனுடைய உறுப்புகளாகும்.

இதற்கு வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி முதலிய செய்கைகளுள்ளன.

பச்சைத் திப்பிலி ஐயத்தை உண்டாக்கும். அழலைப் போக்கும்.

உலர்ந்த திப்பிலி இருமல், இரைப்பு, பொருமல், தலைவலி மயக்கம், ஈரல் கட்டி, மூக்கு, காது, கண்நோய், மேகக் கட்டி, கழிச்சல் முதலியவற்றைப் போக்கும்.

திப்பிலிச் சூரணம் கால் பலத்தை 350 மி.லி. பசுவின் பாலில் விட்டுக் காய்ச்சிச் சாப்பிட இருமல், மூப்பிணி முதலிய நோய்கள் போகும்.

திப்பிலி அரிசி விந்துவைப் பெருக்கும்

இதை பொடித்துச் சர்க்கரையுடன் சேர்த்து வேளைக்கு 8 - 15 குன்றியளவு உண்ண வயிற்றுப் புசம், மேகம், சுரம் இளைப்பு நோய் போகும் ஆண்மை பெருகும்.

<u>தேற்றான் விதை</u>

இல்லம், கதகம், சில்லம், தேறு முதலிய வேறு பெயர்களை உடையது.

இது உடற்றேற்றி, உரமாக்கி, பசித்தீத் தூண்டி, உள்ளழலாற்றி முதலிய செய்கைகளையுடையது.

இது இருமல், இரைப்பு மூப்பிணி முதலிய நோய்களைத் தீர்க்கக் கூடிய வல்லமையுடையது.

தேற்றான் பழத்தோலை எவ்விதமாக உண்டாலும் ரத்தபிரவாயு நீங்கும்.

தேத்தான் வேர், விரை, பட்டை, இலை, கனி, காய், ஈர்க்கு, காய், கனி வற்றல் இவைகளையும் கற்ப முறைப்படா ஊறுகாய் துவையல், குடிநீர், முதலியவைகள் போல் செய்து தக்க பத்தியத்துடன் உண்டால் பாண்டு, பெருவயிறு, பெரும்பாடு, சோகை முதலிய நோய்களை நீக்கும்.

விதை வெள்ளை, வெட்டை, உட்சூடு, சிறுநீர் எரிச்சல் ஆகியவற்றை நீக்கும் கண்ணுக்கு நல்ல மருந்து.

இதைத் தண்ணீரில் உரைத்துக் கரைத்தால், அத் தண்ணீர் தெளிந்து நிற்கும்.

சிறிய அளவில் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். இதை

"தேற்றாங் கொட்டையிட்டுத் தேற்றுமைந்தரை" என்னும் மேற்கோளாலறியலாம்.

இதைப் பொடித்து பாலில் கலந்து கொடுக்க நீர்க் கருக்கு, நீர்ழிவு போகும்.

இந்தப்பைச் சேர்த்தரைத்துக் கண்ணிலிட கண் சிவத்தல் நீங்கும்.

நொச்சி

இது இந்திர சுரியம், நீர்க்குண்டி, நெர்க்குண்டி என பல வேறுப் பெயர்களையுடையது.

இது கருநொச்சி, நீர் நொச்சி, வெண் நெர்ச்சி எனப் பலப் பிரிவுகள் உடையது.

இது புழுக்கொல்லி, வாந்தியுண்டாக்கி, கோழையகற்றிஎன்ற செய்கைகளையுடையது.

இது சுரத்தல், வீக்கம், குடைச்சல், வலி, நடுக்கம், கோழைக் கட்டல் முதலிய நோய்களைப் போக்கும் குணமுடையது.

இந்த இலையின் குடிநீரை மூன்று உச்சிக் கரண்டி அளவு அல்லது ஒரு சங்களவு குழந்தைகட்குப் புகட்ட வயிற்றிலுள்ள புழு வெளிப்படும்.

இதன் சாற்றை ஓர் உச்சிக் கரண்டி வீதம் சுவாச காசத்துக்குக் கொடுக்கலாம்.

உத்தாமணியினால் கருக்கு, பொடி, எண்ணெய் முதலியவைகள் செய்யப்படுகிறது.

இதன் கருக்கு குழந்தைகட்கு வரும் பல வகைமாந்த நோய்களைப் போக்கும்.

இதன் எண்ணெய் குதக நோகங்கள்,கீல்வாதம் முதலிய நோய்களைப் போக்கும்.

மிளகு

ஈது குறு மிளகு, மலையாளி, மரிசம், கறி, மிரியல் என்ற வேறு பெயர்களைக் கொண்டது.

இது மலையாளம், குடகு முதலிய மலைநாடுகளில் பயிராகும் ஒரு கொடி. இது மரங்களைச் சுற்றி ஏறி அடர்த்தியாய் வளரும். இதன் பழத்துக்கு "மிளகு" என்றுப் பெயர். இதன் பழம் பழுத்த தோல் உதிர்ந்தால் அதை வெள்ளை மிளகு என்று கூறுவர்.

இது கார்ப்பு சுவையையுடையது. வெப்பத் தன்மையையுடையது.

இது அகட்டுவாயுகற்றி, வீக்கங்கரைச்சி, வாதமடக்கி, முறை வெப்பகற்றி, வெப்பமுண்டாக்கி என்ற செய்கைகளையுடையது.

இது குளிர்சுரம், பாண்டு, கோழை, வெறி வாயு, செரியாமை இருமல் முதலிய பல நோய்களைப் போக்கக் கூடியது.

மிளகு நச்சை நீக்கக் கூடிய குணமுடையது இதை.

"பத்து மிளகு கையிலிருந்தால்
பகைவன் வீட்டிலும் உண்ணலாம்"

என்ற தொடரால் அறியலாம்.

இதன் தூளை துவையலோடு சேர்த்துக் கொடுக்க முறைச்சுரம் நீங்கும்.

மிளகைத் தைலம் செய்து, தலைமுழுக இருமல், நீர்க்கோவை, தோஷம், பாண்டு, இருமல், பல வகைத் திரிவு சுரம் முதலிய நோய்கள் நீங்கும்.

மிளகுத் தூள், வெங்காயம், உப்பு இவைகளைச் சேர்த்தரைத்துத் தலையில் காணும் புழுவெட்டுக்குப் பூச மயிர் முளைக்கும்.

இது முக்கடுகில் ஒன்று. பற்பொடி செய்வதற்கு முக்கியமானது.

இது அரிட்டம், நிம்பம், பாரிபத்திரம் என்ற வேறு பெயர்களையுடையது.

இஃது, ஒருவித மகிழ்ச்சியைத் தரும் மரம் இந்தியாவிற்கே உரியதாகத் தெரிகிறது. ஆயினும் பர்மாவிலும் பயிரிடப்படுகிறது.

சீதத்தினால் உண்டாகும் விட சுரங்களைத் தடுக்கும் தன்மை இம்மரத்திற்கு உண்டென்கிற நம்பிக்கையால் இது பெரும்பாலும் மிதமான நாடுகளில் எல்லைப் புறங்களிலும், வாழும் இடங்களுக்கு அருகிலும், காளி முதலிய கோவில்களிலும், சாலைகளின் இரு புறங்களிலும் வைத்துப் பயிராக்கப்படுகிறது.

இதில் கருவேம்பு, சர்க்கரை வேம்பு, மலை வேம்பு என்ற இனங்கள் காணப்படுகின்றது.

இதி ன் இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், வித்து, நெய், பிண்ணாக்கு, மரப்பட்டை, துட்டை, கள், பிசின் முதலிய உறுப்புகள் பயன்படுகின்றது.

இது கைப்புச் சுவையுடையது, வெப்பத் தன்மையுடையது.

புழுக்கொல்லி, செய்கையுடையது. ஆகவேதான், "அம்மை நோயுள்ள வீட்டிலும், அம்மை நோயாளிகளுக்கும், அம்மை நோயால் இறந்தவர்களுக்கும் வேம்பு பெரிதும் பல வழிகளில் பயன்படுகின்றன.

இது வயிற்றுப் புழு, பெருநோய், நச்சுச் சுரம், அம்மைப் புண், சொறி, சிரங்கு இவைகளைப் போக்கும்.

வேம்பு கைப்புப் பொருளையுறும், பித்தப் பையில் நிறைந்த பித்த நீரை வெளியாக்கி காமாலை நோயைப் போக்கும்

புத்தியைத் தெளிவிக்கும் கற்ப மருந்தில் ஒன்று. வீரியத்தை உண்டாக்கும்.

காமாலை, மாலைக்கண், புறவெட்டு நோய்கள் போகும்

கழிச்சல், வெள்ளை, கட்டிகள் இவைகட்கும் பயன்படும் வேப்பிலையை அரைத்துக்கட்ட கட்டிகள் சீக்கிரத்தில் பழுக்கும்.

இதன் இலை, பூ, வேர், பட்டை முதலிய உறுப்புக்கள் பயன்படுகிறது.

இது வெப்பகற்றி, கோழையகற்றி, புழுவகற்றி முதலிய செய்கைகளையுடையது.

இது முப்பிணியையும், வளி நோயையும் போக்கும்.

நொச்சியிலையைக் குடிநீரிட்டுக் கொடுக்க வளிச் சுரம், குளிர் சுரம், முறைச் சுரம் போகும்.

இலையை அரைத்து மண்ணீரல் வீக்கத்திற்குப் பற்றிடலாம். இலைச்சாற்றால் எண்ணெய் செய்து தலைமுழுக கழுத்து நெறிகட்டு போகும்.

இதன் சாறு நீர்க்குண்டித் தைலத்தில் சேர்கிறது.

இலையை வதக்கி ஒற்றடமிட வீக்கம், கீல் வாயு போகும்

நொச்சி, பொடுதலை, துளசி முதலியவற்றை சேர்த்துக் குடிநீர் செய்து குழந்தைகளின் மாந்தத்துக்குக் கொடுக்கலாம்.

வெளிப் பருத்தி

இது உத்தரமணி, உத்தம மாகாணி, உத்தம கன்னிகை என்ற வேறு பெயர்களையுடையது.

இது ஒரு வகை கொடி இதில் பயன்படும் உறுப்பு இலை. இக் கொடியில் பால் உண்டு.

இது கைப்புச் சுவையுடையது.

தாதுப் பொருட்கள்

இந்துப்பு

லவண, உப்புகளில் இந்துப்புமொன்றாகும். இது சைந்தவம் சிந்து ரம், சிந்திரவுப்பு, மதி கர்மை மதியுப்பு என்ற வேறும் பெயர்களை உடையது.

இந்த உப்பு 2 முதல் 10 பவுண்டு நிறையுள்ள கட்டிகளாயும், மேற்பக்கம் அழுக்குப் படிந்த கபில நிறமாயும், உட்பக்கம் வெண்மை யாயும், வாயிலிடில் உப்பாயுமிருக்கும்

இது மண் பூதச் சரக்காகும்.

இதனைக் காடியில் மூன்று நாள் ஊறப்போட்டு சூரியவொளியில் உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

இதற்கு மலகாரி செய்கை உண்டு. மலகாரிச் செய்கையில் க்ரீம் ஆப் டார்டர்ரைக் காட்டிலும் இது மேலானதாகும். இதை ஒன்று அல்லது இரண்டு வராகனெடை கொடுக்க மலம் இளகும். நான்கு அல்லது ஐந்து வராகனெடை கொடுக்க நீர் நீராய் பேதியாகும். இதனைத் தனித்துக் கொடுப்பது மிகவும் அரிது. இது சிறப்பாய்க் காக்கரட்டான் விதைத் தூளுடன் கூட்டிக் கொடுக்கப்படுகிறது.

இந்துப்பைப் பயன்படுத்தி. இந்துப்புச் சூரணம் தேங்காய் க்ஷாரம் முதலிய செய்முறைகள் தயாரிக்கப்படுகிறது.

இரும்பு

இதன் வேறு பெயர்கள் கரும்பி, கருப்பி, கருப்பு, கருமணல், ஆதி, சத்து, கிட்டம்கருந்தாது, பொன் மணல் ஆகும்.

இது எல்லா மலைகளிலும் நிலங்களிலும் அநேகமாகக் கந்தகம் போன்ற சில பொருள்களுடன் கலப்புற்றுக் கிடைக்கின்றது. இது தாது தாவர, ஜீவப் பொருள்களில் சிறிதளவு கலந்தும் இருக்கின்றது.

இரும்பினால் பித்த பாண்டு, வெண்குட்டம், அதிசார நோய் சோகை, மந்தம், காமாலை, குன்மம், சக்கிரைநட்டம் போன்ற நோய்கள் நீங்கும் பயனுண்டாகுடம்.

இதனை இளைத்தவர் இரும்பை உண்ண வேண்டும் என்னும் பொருளை "எளிப்புடற் கிரும்பை யுண்ணின்" என்ற பழமொழியால் அறியலாம்.

அயப்பொடிக்கு நாவற்பழச் சாற்றை மூழ்கும் படி விட்டு சாறு சுண்டும் வரை வெயிலில் வைத்துக் கழுவ வேண்டும் இவ்வாறு ஆறுமுறை செய் சாத்தியாகும்.

இரும்பைக் கொண்டு அயபற்பம், அயச்செந்தூரம், அயக்காந்த செந்தூரம், அயமெழுகு, அயபிருங்கராஜ பாணிதம் அயசம்பீர கற்பம், அயபிருங்கராஜ கற்பம் அயநாக பற்பம், அயநாகம் முதலிய செய்முறைகளைச் செய்யலாம்.

நவாச் சாரம்

இதன் வேறு பெயர்கள் இடங்கை, சவ்விகை, குண்கை, பகு போன்றவைகளாகும்.

இது கற்குகைகளிற் கிடைக்கும் இஃது ஒட்டகம் முதலிய மிருகங்களின் சாணச் சாம்பலுடன், நிலக்கரியையும் உப்பையும் கூட்டிப் பதங்கித்து எடுக்கப்படுகிறது.

கடைகளில் கிடைக்கும் சரக்கு பார்வைக்குக் கட்டியாயும், வாசனை இன்றியும், நார்நாராயும் ஊசி செய்யக் கடினமாயும், நீரிலும் சாராயத்திலும் கரையக் கூடியதாயும் அழுக்குப் படிந்த வெண்மை அல்லது கபில நிறமுள்ளதாயும் வாயிலிடக் கசப்பு, புளிப்பு மூத்திர வெருட்டலுள்ளதாயும் இருக்கும் இது வைப்பு முறையில் தயாரிக்கப் படுகிறது.

இதனை கோமூத்திரத்தில் கரைத்து, வடிகட்டிச் சுண்ட எரித்து வெயிலில் உலர்த்தியெடுக்கச் சுத்தியாம். நவாச்சாரம் வயிற்றுவலி குடலில் குத்தல், பெருவயிறு கல்லடைப்பு, சருமத்தில் புலால் வாசம் திரிதோடம், கவாயு இவைகளை நீக்கும்.

இதன் அளவு 2½ குன்றி முதல் 7½ குன்றி வரையாகும் அதிக அளவில் கொடுக்கப் பெறுவாகும்.

இதைக்கொண்டு நவாச்சார ஆக்கிராணம், நவாச்சாரக் குழம்பு, நவாச்சார எண்ணெய், நவாச்சாரச் செந்தூரம், நவாச் சாரக் கட்டு முதலிய செய்முறைகள் செய்யலாம்.

நவாச்சாரம் செய நீருக்கு ஆதிப்பொருள் ஆகும்.

பஞ்சலவணம்

ஐந்து உப்புகளின் கூட்டிற்குப் பஞ்சலவணம் என்ற தொகைப் பெயர் உண்டு. இக்கூட்டில் சேரும் உப்புகள் கரி உப்பு, இந்துப்பு, வளையலுப்பு கல்லுப்பு, வெடியுப்பு ஆகும்.

பஞ்ச உப்பின் குணம்

இது நீராம்பல், நெஞ்சு, வலி, குன்மம், நாட்பட்ட கிரகணி இடப்பபாட்டு ஈரல் பெருக்கம், மந்தம் வாயு, கப வயிற்று நோய், சூலை போன்ற நோய்கள் போகும்.

பஞ்சலவணத்தைக் கொண்டு பஞ்சலவண பற்பம், பஞ்ச லவணச் சுண்ணம் முதலிய மருந்துகளைத் தயாரிக்கலாம்.

மேலும், பஞ்சலவணம், தயிர்ச் சுண்டிச் சூரணம் சூடிய சூடோரி லேகியம் போன்ற கூட்டு மருந்துகளிலும் பயன்படுகிறது. பஞ்சலவண பற்பத்தைக் கால் மண்டலம், அரை மண்டலம் என வியாதியின் பலத்துக்கேற்ப தின்ன வாதம், வாயு குத்தல், குடைதல், வலி கடுப்பு, குன்மம், அண்டவாயு, கிரகணி, குடல் புரட்டல், வயிற்றுப் பெருமல் செரியாமை, மந்தம் மகோதரம் போகும்.

பஞ்சலவணச் சுண்ணம் உருந்தளவு உண்ண வயிற்றுவலி, குன்மம், காய்ச்சல் கட்டி, சூலைக் கட்டு முதலிய நோய்கள் போகும்.

சீவ வகுப்பு

உடும்பு

இது ஊர்வன வகுப்பைச் சேர்ந்தது. பொதுவாக உடும்பு பிடித்தால் உறுதியாக பிடிக்கும் இதையே வழக்கில் கொள்கைப் பிடிப்புள்ளவர்களை உறுதியாக பிடிப்பவர்களின் பிடியின் வன்மையைக் குறிக்க "உடும்புப் பிடி" என்பர்.

இது விலங்கியலில் (Varanus monitor) என்று அழைக்கப்படுகிறது.

இதற்கு துவர்ப்பி, உடல் உரமாக்கி, காமம் பெருக்கி செய்கைகள் உள.

துவர்ப்பு இனிப்புச் சுவைகளையுடைய உடும்புறைச்சியால் காசநோய், மூலம், வெட்டை, தலைநோய், வீக்கம் மேகம், புண் குட்டம், கபம், சீத இரத்தக் கடுப்பு, குடல் வாதம், பேதி, தோல் வறட்சி போன்ற நோய்களைப் போக்கும் உடல்பலம் உண்டாகும்.

உடும்பைக் கொண்டு உடும்புச் சூரணம், உடும்பு லேகியம் உடும்பு நெய் போன்ற செய்முறைகளைத் தயாரிக்கலாம்.

உடும்புச் சூரணத்தைக் கொடுத்தால் கிராணி வகைகள், மூலவாயு, குதக வாயு போன்ற நோய்களைப் போக்கும். இதைக் கொடுக்க வேண்டிய அளவு இரண்டு விரல் கொண்டு அளவு இருவேளை, அரைமண்டலம் தரும்.

இதன் அனுமானம் தேன் - பத்தியம் - இச்ச பத்தியம் தரும்.

உடும்பின் நெய்யைப் பயன்படுத்த இரத்தப் பெருக்கு நீங்கும்.

கோழி

இது குக்குடம், குருகு, வாரணம் என்ற வேறு பெயர்களையும் கொண்டது.

இதற்கு வெப்பமுண்டாக்கி, காமம் பெருக்கி செய்கைகள் உண்டு.

குள்ள கோழிக்கறியை உண்டால் மந்தாக்கினி மூலம் போன்ற நோய்கள் போகும். சுக்கிலம், கொழுப்புள்ள வரணம், பித்தம் இவை விளையும். உடம்பு இளைக்கும்.

கோழிக்கறியை அருந்துபவர்களுக்குப் பித்த நாடி மிகுதியாகத் தோன்றும்

கோழிக் கொண்டை, கோழி எச்சம், கோழிக்கால், முட்டை, முட்டை ஓடு முதலியவை பயன்படும் வேறு உறுப்புகளாகும்.

கோழி எச்சத்தை வெற்றிலையில் வைத்துக் கொடுக்கத் தேள் விடம் நீங்கும்.

சோகி

இது கவடி, பலகறை, வராடி, என்ற வேறு பெயர்களைப் பெறும்.

இது கடல்படு திரவியம் ஐந்தனுள் ஒன்றாகும். இதன் உருவம் புளியன் விதை முதல் வாதுமைக் கொட்டைப் பருப்பளவு இருக்கும். மஞ்சள், சிவப்பு, ஆகிய மூன்று நிறங்களில் இது கிடைக்கும் வெண்ணிறப் பலகறையே

சிறந்தது.

இது கைப்புச் சுவை உடையது. இதற்கு தாது வெப்பகற்றி, கோழை யகற்றி, வெப்பகற்றி, முதலிய செய்கைகள் உண்டு.

இது அஜீரணம், காமாலை, கல்லீரல், மண்ணீரல், வீக்கம், ஒவ்வாமை, பலவகை நஞ்சுக்கள் முதலியவற்றை போக்கும்.

பலகறையை எலுமிச்சம் பழச்சாறு அல்லது அரிசிக் கஞ்சியில் ஊற வைத்து - எடுக்கச் சுத்தியாம்.

பலகறையைக் கொண்டு பலகறைப் பற்பம், பலகறைச் செந்தூரம் முதலிய கட்டு மருந்துகளைத் தயார் செய்யலாம்.

"சீலவெறி நஞ்சிற்கும் பலகரைப் பற்ப ஆட்சி" என்ற பாடலிலிருந்து எல்லா வகை வெறிக் கடி நஞ்சிற்கும் பலகறைப் பற்பம் எவ்வாறு ஆட்சி செய்கிறது என்பதை அறியலாம்.

நத்தை

இதற்கு "ஊமைச்சி" என்ற வேறு பெயரினாலும் வழங்கப் படுகின்றது. இது குளங்களில் அதிகமாயிருக்கின்றன. இவை நீரிலுள்ள மண்களை அருந்தி நீரைத் தெளிய வைக்கின்றது.

சிலர் நத்தையை உப்பிட்டு வேகவைத்து அருந்துகின்றனர்.

நத்தைக் கறிக்கு மூல முளையும், மலாசயப் புண்களும் நீங்கும் இதைத் தினமும் புசிக்கில் சுக்கிலப் பெருக்கம் உண்டாகும்.

நத்தைச் சதையைக்கொண்டு நத்தைச் சிப்பி பற்பம் செய்யலாம்.

இதனை ½ முதல் 1 புளியம் வித்தின் அளவு, நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க மூல இரத்த பேதி, சீத பேதி, மூலக்கடுப்பு நீங்கும்.

நத்தைச் சதையைக் கொண்டு லேகியம் செய்து கொடுக்க மூலம் நீங்கும்.

நத்தை தாலக்க் கருப்புச் செய்வதற்கு உபயோகமாகிறது.

இயல் மூன்று

நூல்

கடவுள் துணை

தேரையர் அருளிச் செய்த நோயின் சாரம் 133

கணபதி துதி

வெண்பா

1. ஆரியமாம் வாகடத்தி லுட்பொருளை யாராய்ந்து
சீரியதாஞ் செந்தமிழாற் செப்பவே - மாரியென
வெள்ள மதம்பொழியும் வேழ முகமுடைய
வள்ளலை வெஞ்சனத்து வா.

(அரத்தையை நாவிலிட இருமல்

ஆக்கிராணக்க பீனிசம் சளி தீரும்)

2. வாலெவையே சிலேட்டுமத்தாம் வந்த இருமல்களும்
போலெவையே நாவிலிடற் போருமே - பாலவையாய்
வாக்கான பீனிசமும் மகத்தாஞ் சலியும்போம்
ஆக்கிராணஞ் செய்யிரத் தை.

வாத சுரம் தீர கியாழம்

3. அரத்தை சதகுப்பை சுக்கான்றோச் சிச்சாத்தும்
அரைத்திழைப்பக் காச்சி யருந்த - வருத்தத்
தலைவலிகள் நீரேற்றந் தன்னுடனே வாதசுரம்
குலைகுலைந்து போகுமெனக் கூறு.

பித்த சுரம் தீர கியாழம்

4. கருவேற்ற பாவட்டை கொண்டசித் தாமுட்டி
விரோமம் வேலிப் பருத்திடவேர் - காதலித்த
நால் மாருக் கட்டி நலமாய்க் கியாழமுன
செய்மாத் தச்சுரம்போஞ் செப்பு

சிலேட்டும சுரம் தீர கஷாயம்

5. செப்புகின்ற திப்பிலியும் சேராடா தோடைக்கும்
ஒப்பரிய சித்தரத்தை யோமமுடன் - தப்பில்லாக்
கண்டங்கத் திரிதேனும் காய்ச்சிக் குடித்திடவே
தெண்டசிலேட் டுமச்சுரம்போம் செப்பு.

சத்தி எரிவர்தம் தீரப் புசக்

6. செப்பரிய போரலத்தை சிறந்த புலவோரைத்
தொப்பரிய காடி யுடனரைத்துத் - தப்பாமல்
மத்திட்டுத் தான் கடைந்து வந்ததனை புசிக்க
சத்திஎரி வாதமில்லை தான்.

உதரவாயு தீர மருந்து

7. தானென்றும் வெள்ளுள்ளி தப்பாது பிற்பொருந்து
வேனென்று மக்கலியில் வேகவைத்துத் - தீனென்றும்
இங்கு வுடனரைத்து வெற்றதீ ரிஞ்குடிக்க
வங்குதர வாயுவில்லை மா.

நீர்க்கட்டு தீர கஷாயம்

8. மாவேகேள் நீரடைக்கில் வாழும் பசியுடன்
தானேகத் திரி லை தலோடே - பானைதனில்
ஒக்க கஷாயமிட்டு ஆவினெய் காரமிட்டுன்
கக்கிக் கடனடையும் காண்.

கரைவாதம் தீர கஷாயம்

9. காணும் புகல்முருக்கை கழற்சிக் கொடிபருப்பு
புளியங்கொத் தாடவே போத்தகக்கு - வேறுமெம்ப
பன்னீர் கஷாயம் பருகீர் பருவயின்
கல்லைக்கரை வாதம்போம் விட்டு.

அசீரணமுஞ் சுரமுந் தீர கியாழம்

10. சுட்ட வொதியீர்க்கு மேவுமோ வெப்பீர்க்கும்
முட்டசுக்கு சீரகமும் மோதகமுந் - தட்டியிட்டுக்
காய்ந்தநீ ரைக்குடிக்கக் காணு மசீரணமாய்ப்
பாய்ந்த சுரமும்போம் பலர்.

பித்தம் தீர கியாழம்

11. பாரிசந்த நெல்லிமுள்ளி பாரதனத் கண்டமுஞ்
சீரிசைந்த சீரகமுஞ் சேர்த்தகக்கும் - வேரிசைந்த
சித்தரட்டி நெற்பொரியுஞ் சேர்த்தக் கியாழமுண்ண
பித்தமிட்டுப் போகுமெனப் பேசு.

குன்மவலி குடியத்தீர கியாழம்

12. பேசும் பிரண்டையுடன் பேரிசைந்த வெப்பீர்க்கும்
மூசம் புறகளிந்த மோதகமும் - வாசிபன்னும்
கொள்ளுங் கியாழமதிற் குன்ம வலிகுடி
விள்ள வருந்தேகு மீது.

விக்கம், பிளவை, அக்கினிமந்தந் தீர

முக்கிரட்டை வேர்

13. மிதவேனக் கல்லிலு வேரினைச்சல் லம்பொரதுக்கு
போதமெழுந் திரிப்புட மிட்டு - காதிபுன்ன
விக்கம் பிளவையுடனே மறமக்கின மந்தம்
பார்க்கப் பறந்துபோம் பல்.

விக்கலும் சத்தியுந் தீர பொடி

14. பன்னும் பருத்திவிரை பாரிலுள்ள நெற்பொரியும்
மின்னுமிள திப்பிலியும் மெய்யோடு - தன்னுடைய பொடி
சக்கரையும் தேனும் தரைக் குழைத்துண்ண
விக்கல் சத்திபோகும் விரும்பு.

பித்தம் தீர பொடி மருந்து

15. இரும்புகின்ற சீரகமு மேன்மையுள்ள நெல்லிமுள்ளி
பொரும்புகக் கேலம் பொடிச்சரியாய் - நிரம்படவே
சக்கரையுந் தேனும் தரைக் குழைத்துண்ண
தொக்குடனே போம்பித்தஞ் சொம்பு.

அஷ்ட குன்மந் தீர சூரணம்

16. சோம்புளு மங்கூரம் சத்திபொடி நாயுருவிச்
சாம்பல் மிளகு பொடிசமனாய்த் - தேம்படவே
எட்டி லொன்றுகாய மிட்டுண்க யோர்கழஞ்சு
அட்டகுன்மம் போமே யலைந்து.

அண்டவாதம் தீர பொடி

17. அவையுங் கருவளைய லார்க்கப் பொடிசெய்து
திவையு மிளகுபொடி நேர்சரியாய் - மலையும்
பெருங்காயக் கட்டியுண்ணப் பேரண்டவாதம்
வரும்பானை போல்விக்கம் வாடும்.

எரிக்குன்மந் தீரக் ஷாபழம்

18. வாடுகின்ற மித்தசக்கு வாரிக் கொழுமதில்
தேடுகின்ற காயத்தைப் பின்சேர்த்து - நாடுபுகழ்
செப்புக் கரத்திற் சேர்த்தி செலுத்தியுண்
வெப்பெரிகுன் மம்போம் விரைந்து.

அசீரணம் - சகலதோஷம் - சூலை - சுரம்

கிருமி தீர

19. அரைத்து மிளகரைத்து வெந்நீரி லக்கரைத்து
அருந்த வசீரணங்க ளாறும் - திருந்தச்
சகலதோஷஞ் சூலை சகலசுர முங்கிருமி
பெலவோடிப் போகுமாம் பேசு.

சுவாச கசேந்திரக் குழம்

20. பெருவீர் பேய்ச்சுரை பொரிசக்கு கட்டி
மாறுநீர் விட்டாவி வலக்குக் - குறுகுதல்
திப்பிலியும் வெங்காரம் தேன்விட்டு மெல்பொடியாய்
ஒப்புசுவா சக்காச மோகும்.

வாயுகரப்பான் விக்கத் தீரக்குடிநீர்

21. ஒருவின்ற சாரணையும் உப்பு மாறுதளும்
வாருஷின்ற சுக்கும் வகைகுடிநீர் - தேடி
மருகமரு கக்குடிக்க வாயுகரப் பல்வல்லமை
பறபறகெ விக்கலும் பார்.

மேகம் உட்காய்ச்சல், பிர[illegible]த் தீர

22. பாரோரே மேகம் வந்தால் பன்புபே யம்பழத்தில்
சேரோரே சர்க்கரையுஞ் சீரகமும் - நாரோரே
வுண்டாக்காத் போகாதோ வுட்காய்ச்சல் பிரமியமும்
கண்டாக்காத் போகாதோ கான்.

ஈளையிருமல் காசந்தீர - பட்டாவி நீர்

23. காளிரா டாதோடை கண்டங்கத் திரிபலை
சு வீர்பட் டாவிநீர்த் திப்பிலிசர் வி - பெருமிடிக்
கொக்குகொக்கெல் திருமல் கொருங்காச மீளையுற
போக்குப்போக் கெல்றோடிப் போம்.

இரத்த பித்தம் தீர குடிநீர்

24. போதீரே தோடையிலை போந்ததொரு முந்திரிகை
சேதீரே நற்குடிநீர் செய்திடுவாய் - மாதீரே
அக்காரம் கட்டி யிருந்தீரகுந்தயபில்
உக்காரா ரத்தபித்த மோகும்.

ஐயம் - 20 - நீரச் சுரம்

25. ஒடுகின்ற நாவிச பத்திராடிமோர் மிளகும்
தேடுகின்ற நாகம்பு திப்பிலியுங் - கடுகாய்
கலைநீ ரேலமதில் லங்கமதும் தாங்கட்டிப்
பாகமாய்ச் சூரணமும் பண்.

26. பண்ணிய புஷ்பகாரம் பாகம தாய்க்கட்டி
உண்ணக் கழஞ்சிதே யவ்விட்டே - நண்ணவே
நாளா ருபானத்தில் நாவிற் பருகிட
போனால் நாளையமே போம்.

இருமல் உப்புசம் தீர சுரம்

27. போமே கருநெல்லி பொத்தாமய நாக்கிலிங்க
தாமேதநற் கொடுக்கச் சடாமாஞ்சில் - ஆமே
திரிகடுகு பஞ்சப்பு அதேதக்குக் கண்டம்
திருவிட்டவே சூரணமாய்ச் செய்.

செய்மருந்த தின்னுமுறை பாவம்

28. செய்த மருந்தை செவத்த வெம்பிரேகள்
வைதமிழ்ச் சாறந்தே விட்டுண்ண - ஐயமறக்
குத்திருத்தித் திருமுன் கட்டுப்பீ சக்கரைசல்
தத்தித்தத் திரோகந் தான்.

29. தாவே படம்புரைர தப்பான லோர் கழுக்க
மாவே மருந்ரால் வாங்கிபுண்ண - தாவேசொல்
லுருா மறுமிறந்த சனை வெஙகடியும்
விழுமாற சொக்கேஷ்கேள் வேண்டு.

ஈளை, பஞ்சகாசம் விக்கல் தீர வெண்ணை

30. வெங்கும் பெருங்காயம் வேலி மிலைச்சாறும்
ஆங்குசெய்த ஆமணக்கெ நெய்கூட்டி – பாண்டமதில்
யிட்டே வடித்துண்ண ஈளைபஞ்ச காசவிக்கம்
விட்டேகப் போமே வெருண்டு.

பஞ்ச சுவாச காசந் தீரப் பொடி

31. வெருண்டமிள கோர்மூ[illegible] வரையறுத்தி வெட்டு
திரண்ட பொடிகழஞ்சு தேனிற்கொள் – முருங்கிதனில்
பட்டேன்பட் டேனென்னும் பஞ்சசுவா சக்காசங்
கெட்டேன்கெட் டேனென்றுங் கேள்.

சிலேட்டுமத்தால் வந்த நோய் தீர வெண்ணை

32. கேருங்கை பாத்தகரைச் சாறுங் கரிகருக்காய்
மிருதல் வெண்ணெயுடன் வெந்திருக்கி – நாளுமெட்டுத்
தின்னத் தினங்கழஞ்சு சிலேட்டுமத்தால் வந்தபிணி
சொன்னபோ தேபோகுந் சூது.

ஈளை, இருமல், சுவாசகாசந் தீரக் கிருதம்

33. ஓதளையின் பழரசமுஞ் சுத்தாவி நெய்பால்
தீதறு சீரகந் திரிகடுகு – நாதேதேகேள்
கரகரவென் றேயெழும்புங் காச சுவாசமீளை
பரபரவென் றேயேகும் பார்.

சுவாசந் தீரச் சிங்கித் தயிலம்

34. பாகுநா ரத்தைப் பழச்சாற்றில் முப்பலையுந்
தேருநப் பூவமரு சேர்த்தரைக்கு – மாயநேரோர்
தேத்தாவ் பழமரைத்துச் சிக்கி மிருக்க
வார்த்தாத் சுரசுவாச மாறும்.

ஆடாதோடைக் கிருதம்

35. மாதந்தோ டைச்சாறும் வந்தாளி நெய்பாலும்
தேறதிப் பிப்பாலைத் திப்பிலியும் - கூறக்
கொடிவேலி தன்னுடனே கட்டிநவச் சாரம்
வடிவேக வேகவே வை.

36. வேகவைத்த நெய்யை விரும்பி யிருநேரம்
பாகம்வைக்கும் வாதபித்தம் பாலையம் - தேகமதில்
வந்த விடபுமசுரம் அத்திசுரம் தாகசுரம்
பிந்தாமற் போகும் பார்த்து.

குளிர்சுரம், தாபசுரம் தீர வேர்

37. பார்த்துயிர வெள்ளறுகு பின்முதயார் கூந்தல்
லாந்துமதன் வேரை யரைத்துப் - பார்த்துண்ண
சீறுசுர முன்குளிருந் தீண்டாத தாபச்சுரம்
கிறுடனே போமதனைக் கேட்டு.

அசீரணந் தீர மருந்து

38. கேட்டவெல்லைக் காக்கணம்வேர் கேழுந் நன்மிளகு
கட்டியிர வெள்ளறுத் கொள்குடை - நாட்டைவிட்டுப்
போமேய சீரணமும் புகுமே சமுத்திரத்தில்
நாமேயு ரைக்கக்கேள் நன்று.

மந்தம் தீர கியாழம்

39. நன்னாரி வேர்கொம்பு நற்சா றடைவேம்பும்
ஒன்றாய்க் கியாழமிட் டுண்டிடில் - ஒன்றேநாள்
ஒருமே மந்தம் ஒழியுமே நாட்டைவிட்டு
வாருமே கேட்டு மனம்.

மூத்திர நசவும் தேர்வும்

40. மலமேகம் யாத்தகரைச் சாறு மஞ்சளுத்தும்
கலமாய் நசவடைக் காணாது - அமமாக
உப்பு கரைத்தவெள்ளி குட்கொண்டு வாத்துசெய்ய
தப்பாதடைக் கல்சயிக் கும்.

பிரமைதாகம் விக்கல் இருமல் தோடந் தீர

41. சயிக்கு முதம்பதனைத் தப்பாமத் காய்ச்சி
பழுக்கவே மோர் விடுத்தி - இழுக்க
பருமைவிட்டுத் தானோடும் பேசுந்தா கம்விக்கல்
இருமல்தோ டத்திருமெல் லாம்.

சுரத்தி, சூவாசம், வாத, பித்த, சிலேட்டுமந் தீர

42. எல்லாச் சுரந்திடும் சூவாச வாதபித்தம்
பொல்லாச் சிலேட்டுமமும் போய்விடுமே - வில்லாரும்
நிழலுவத் தானே நிறைபவ் வயமாதி
வெழுதுவத் தானே மிளம்பு. -

வாதகரப்பன் குணம்

43. இயம்புந் துவரிகாய்ச்ச லேங்கும்வீக் கத்திரட்சி
தயங்கு கழுத்தோரம் தாலிகருப்பாம் - பயம்படவே
வந்த வரைக்கனத்தில் வாதகரப் பன்வன்மை
செத்தா மறைமுகத்தால் செப்பு.

செங்கரப்பான் குணம்

44. செப்புந் தலையெரிப்பு சேரும்காய்ச் சல்திவை
வெப்புளச்ச மந்தாந்த விறாகந் - தப்பாமல்
வாத்திவரும் நீர்வக்கும் வருமலந் சிக்கலும்
சேர்த்துமந்த செங்கரப்பன் திண்ணம்.

இதுவுமது

45. திண்மைசேர் செங்கரப்பன் செய்யுமகை நெஞ்சுதும்மல்
பன்னுமிவா யுள்ளிரந்திப் பண்ணுமும் - நன்னுதலை
மன்படைவலிக் கும்புடைக்கும் வார்தாதுச் சீபோகும்
செவ்வடைவி யாயிதனைக் கேள்.

தோடக் கரப்பன் குணம்

46. கேளாய் குளிர்காய்ச்சல் சீழ்வருமே கண்குழைக்
மீளா விடம்போல விரைந்துவரும் - நாளாக
புதம்போல் வீங்கிவற்றிப் புண்போலெக் குத்துமர்க்கும்
ஒதுந்தோ டக்கரப்ப முத்து.

அங்கரப்பன் குணம்

47. உத்த வாங்கரப்பன் ஒதக்கே ளொன்டொடியீர்
மத்தளங்கம் போலிபுற்றும் வந்திரும்பும் - சற்றென்ன
ஆறாமற் புண்களைக்கும் ஆக கழுக்கும்
மாறாத விக்குணத்தின் வாறு.

கரப்பன் தீரச் சூரணம்

48. வாதுகொடு வெண்குறிஞ் சாலக்க வாத்தினை
கருகரு வெம்புருட சப்பரலை - சீது
சிலவார்தல் வெம்புச்செய் கந்தாரி மிளகும்
இவைவேகொள் பலகரப்ப வேகும்.

கரப்பன் தீர உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய்

49. ஒருங் கருநொச்சி பேறுரிச்சில் சாளாக்கி
யாரும் கரந்தைசில்லி யாமணக்கில் - பாகமாய்
வடியீர் வசம்புள்ள வால்கருகும் கட்டிக்
குடிப்பீர் சிற்கரப்பன் கூற.

பல கரப்பன் தீர எண்ணெய்

50. கருசெங்கத் தாரிபட்டை கரியுகு சிவ்வரகலை
வீர சிறுகுறிஞ்சான் வேர்கட்டித் - தேறமுந்
தெள்ளெண்ணெய் விட்டுக்காய்ச்சி வித்தும்பல கரப்பனெலக்
தள்ளுவிடு மெல்லாத் தினம்.

விக்கந் தீரக் குடிநீர்

51. நினைந்தானி சங்குவேர சிறுநெருஞ்சில் தூ ஏ
மனைந்தாலம் நீர்முள்ளி மாமாலை - கனைந்துவரி
வெங்காரம் மென்பொடியாய் மேவுகுடி நீரிடிக்
கன்காணா விக்கம்போங் காண்.

விக்கந் தீர உள்ளுக்கு மெழுக்கு மருந்து

52. காரம்வெட் சாரம் கனைத்துவரித்து மென்பொடியாய்
ஈரவுள்ளி மிஞ்சிச்சா றதனிலிடில் - பாரமுள்ள
விக்கம்வந் தித்த நீக்க முன்டிமேலும் புசநிகழ்ந்து
வாய்க்கவே சாய்க்கும் மலம்.

மலசலம் கட்டி வீம்பு வீக்கம் கரப்பான் தீர

53. மலநீ ரடைத்துவிம்பு வாயுகரப் பன்வீக்கல்
பெலமா மாதுளையைப் பிட்டிட்டு - குலையின்
கோமயத்திற் கட்டிக்குலவி யரிந்திடவே
சாமமதிற் போந்திண்ணந் தான்.

மலக்கட்டால் வீக்கம் தீர எண்ணெய்

54. தின்னல் சிறுநட்டை தேங்கா யிசங்குள்ளி
தன்னந் தனித்தனியே சாறுமுக்காய் - பெண்ணேகேள்
ஆமணக்கு எண்ணெய் நேரானவே பொரு காய்ச்சியுண்ண
சாமமதில் வீக்கமலஞ் சாய்க்கும்.

கிரந்தி, புண், சூலை, வயிற்றுவலி, வாத குட்டந்தீர

பட்டை சூரணம்

55. சாய்க்கும் படிகொளாய் தாங்கிராந்தி புண்சூலை
வாய்க்கும் வயிற்றுவலி வாதகுட்டம் - நீக்கமருந்து
உன்னுபு வுலகத்தி லையாமல் மாண்டார்க்குப்
பன்னுபட்டைச் சூரணமும் பார்த்து.

56. பார்த்துக் கடைமருந்து பஞ்சலவணம் விளக்கத்
சார்த்துகளுஞ் சீரகமுந் தாளோமம் - ஓர்த்தபடி
இட்டுபட்டைச் சூரணமு மிரண்டுபங் கிற்கலந்து
தட்டிக் கொடுத்துவைத் தால்.

57. தின்றுந்தேன் நெய்மருந்து சேர்த்தபடி முக்கழஞ்சு
பன்றுதான் காலைதனிற் பாங்குடனே - துன்னுங்கேள்
பத்தியந்தான் செங்கீரைத் தண்டு பலாதவரை
உத்தியநெத் திகைறா வுண்.

மலக்கட்டு வெப்பு வாயு தீர சிவதைவேர்

சூரணம்

58. உன்னறில வங்கம் ஓதபலை முக்கடுகு
தின்னேலம் நாகப்பூ சேர்த்தமுத்தம் - பன்னுபொடி
பாவடனே நத்சிவதை பாவடனே சுத்திபொடி
நாவடனே முன்பொடிசேர் நன்று.

59. நன்றுபொடி முக்கழஞ்சு நாவந்தேன் சர்க்கரையில்
தின்றுவரும் போதே சிதறிவிடும் - என்றுந்தான்
மீளா மலக்கட்டு மிக்குற்ற வெப்புவாயு
சீனாக நோக்கும் கிரந்தி.

60. கிரந்திகட்டுச் சூலை நவக்கேர்க்க நவச்சாரம்
பொருந்துமிந்த போற்றரைக்கும் போத - மருந்துபச்சை
நாவிடப் பல்லிர நற்கொடுக்கும் வாவ
முனைநிம்பச் சாற்றிட விரும்.

வாதம் தீர சூரணம்

61. மிரு மிலைக்கள்ளி வேர்ப்பட்டை வெயிலுலர்த்தி
சூ ளாக வெடித்துத் தப்பபொடி - கேளரண்டு
காசெடை வெல்லமுத்தக் காலையிற் றேனுடன்
தேகத்தில் வாதம்போந் தேற.

மகோதரம் தீர சாறு

62. தேரம்பேயிப் பீர்க்கங்காய் கொடிறுத் தப்பிழிந்த
சாறு பாலுடனே தாழக்கில் - கறவிற
நற்பெருக்கா யங்களூ நற்கழஞ்சி நாள்முழுதும்
சொற்பெரும கோதரம்போம் சொல்.

கிராணி தீர கருங்கோழி வெண்ணெய்

63. சொரியும் கருங்கோழித் தோல்போக்கி யுள்ளதையில்
நிக்கிலாம முக்கடுகு நெற்காயம் - நல்லாய்கேள்
பஞ்சலவ ணந்தயிரிற் பன்னுவெண்ணெய் நாள்குடிக்க
அஞ்சமர சக்கிராணி யாறும்.

கிராணி தீர உடும்பு வெண்ணெய்

64. நத முடும்புசதை பல்பால முக்கடு
கறுங் கொடுவேலி கர்வசம்பும் - விறலிய
சீரகமும் முள்ளியொடு சேர்த்தரைத்த மொருவெண்ணெய்
கரணமாய் கிராணிதை மாம்.

வாயுகிராணி தீர நத்தைசதை வெண்ணெய்

65. குணமாய்நத் தைச்சதையுங் கருமுக் கடுகோமம்
கனமான திரிபலைச்சார் சீரகமும் - மணமாகும்
காயம் கடுகிந்த காரெண்ணெ யிற்காய்ச்சில்
வாயுகிரா ணிப்போகும் வண்ணம்.

கிராணி தீர வெண்ணெய்

66. வண்ணக்கா யங்கடுகு வாளித்த நாற்பலமும்
தின்னுந் தயிர்தீரிச் செய்குடிநீர் - நன்னயத்த்
சுக்குடனே மூன்றுபலம் தோற்புங்குச் சாரடையுந்
தக்கவட்டத் திருப்பவேர் தாள்.

67. வேரும் கிராம்பும் .... ரியும்
சேரமோ தங்கச்சொல்லி திரிபலையுஞ் - சாகுங்
கருவேல் பிலைக்கடுக்காய் காசுயும் வெச்சாரமென்று
....யிற் கிராணிபோ கும்.

வாயுக் கிராணி தீர வெண்ணெய்

68. அகல நவாச்சாத்தி லான தயிர்தீர்...
... முக்கடுகுந்தும் பொருளுடையம் - இகழும்
வடிவுடைய சாதிக்காய் வருமென்னெ கொள்ளப்
பொடி... கிராணி போந்து.

கிராணி தீர வெண்ணெய்

69. போந்தும் பிரண்டைக்குப் பொடியுமது திப்பிலியும்
வெளச்சாரம் இஞ்சு சீரகமும் - வீற்றிருந்த
விடையந் தயிரென்னெ வேகவைத்துக் கொள்ள
பொடியாம் கிராணி போம்.

வாதகுன்மந் தீரப் பேய்த்தும்மட்டிக்காய் எண்ணெய்

70. கொடுபேய்த்தும் மட்டிக்காய் வேக ...
இடுவாய் திரிகடுகும் இந்துப் பொடிகூட
சிற்றாமணக் கெண்ணெய் சேர்த்து விடில்வாய்வு
... விலக்குழியும் புன்.

பக்ஷிதோஷந், தேரைத் தோஷம் காமாலை தீர

71. முன்னுமிட் டாக்சாற்றில் பேய்ச்சுரைநெய் சேர்த்து
பன்னும் சுக்கரைத்துப் பாற்கூட்டி - சொன்னபடி
பாகவிட்டுத் தின்றுவிடில் பட்சி தோஷம்
ஒடுமது காமாலை யே.

பாண்டு பித்தக் கிராணி தசமூலந் தீர

72. காமாலை போக்குக்காய் வாழத்தில் நெய்விட்டு
போமே கடுநெல்லிப் பேர்தரைத்து - வெம்பதனைத்
பக்குவம்பார்த் தேவடித்துண் பாண்டுபித்தம் கிராணியதும்
திக்கெல்லைப்போ மெந் திசை.

விக்கந் தீர எண்ணெய்

73. திசையா முலைப்பாலித் சேர்த்திடென் ணெய்பாதி
இசைப்பிச்ச திரவியம்பா ரிருவேளை - அசையா
கப்பு மஞ்மஞ்சள் கடுகுக்காய் காய்ச்சியிடில்
ஒப்புடனே விக்கம்விடு மோது.

நீர்கழிச்சல் தீர மருந்து

74. ஒதம்வெல் குன்றிவேரை தோதேபோக் குடும்பருப்பு
...புளி வேரதோல் மத்தித்து - மேதியெனும்
வெண்ணெயி லோர்கழஞ்சி வெள்ளம்விடு நீர்கழிச்சல்
நின்றுவிடுந் தேன்மொழியாய் தேர்.

பெரும்பாடு தீர நெய்

75. நேராக நாவற்றோல் நீண்ட வொதித்தோலும்
பேராக வெகுடிநீர் பின்போட்டுச் சீறாக
ஆவின்பால் நெய்மதுரம் அரைத்துமே பாசமிட்டுண்
தேவிபெரும் பாடதுசெல் லும்.

வெப்புருதி தீர நெய்

76. செல்லாத வெப்புருதி சேருந் திரிபலையும்
வல்லாசக் காய்ச்சி வடித்துண்ண - நல்லமெனி
முன்புசொன்ன பூவரைத்து முத்தநத நெய்பாலில்
அன்புடனே காய்ச்ச மருந்து.

கர்ப்ப வெப்புருதி தீர

77. அருந்தும் பொழுதுகர்ப்ப வெப்புருதி யாறத்
திருந்தநத நெய்நாழி சேர்த்துவாய் - திருக்குகள்ளிப்
பாலழுக்குக் கட்டி ... சேர் கட்டி
செல்லுமவாய் காய்ச்சிடு சேர்த்து.

வாதந்தீர எண்ணெய்

78. சேர்த்து வந்த ... மருந்துரைக்கில்
ஒத்துமுலைக் கள்ளி பெருக்கின் சாறும் - வித்திதனில்
வருண்டா மணக்கெண்ணெய் ... பச்சிட்டருந்த
அருண்டு விருமென்றே யறி.

மூலந்தீர லேகம்

79. ஆடும் பிரண்டையின் ... சுத்தாகும்
சேறும் புளிகறவை சேர்வேல - தூளுபொடி
அக்கிரா காரம்போற்று மெண்ணெய் ...
திடமான மூலம்போந் சேர்.

காதெழுச்சி தீர தயிலம்

80. சேரெருக்கின் சாறோடு சேர்த்தி டென்னை
கார்வசம்புங் குன்றிமுத்தங் கோஉட்டமுடன் - நேராக
இந்தப்பு திப்பிலி மொத்தமே காதிலிட உள்
... எழுச்சி யுரை.

சன்னிதீர உள்ளுக்கும் மேலுக்கும் தயிலம்

81. உரையும் வசம்புள்ளி யுத்தகுள் ... நாகம்
பரப்பில் சீர்கண்டக் கரைய - அரைத்து

அதிசாரந் தீர மருந்து

82. ஏ தமதி சாரந் தலைய மருந்துரைக்கில்
ஆறும் ... குட்டி - கூறும்
ஆல்பாலிற் கொள்ள வகையும் பதினெட்டுந்
தேன்பாகு மொழியீர்செய் யீர்.

கல்லடைப்பு தீரச்சாறு

83. ஈருள்ளிச் சாறுழக்கோ டேத்தகா ரங்கழஞ்சு
சார்க்கு டத்திலைச்சந் தாக்கழஞ்சு - வார
ஒன்றாய் வாளி யுடனருந்தக் கல்லடைப்பும்
சென்றோடும் நீரடைப்புந் தீர.

நீரடைப்பு தீர

84. தேருகஞ்சா பத்திரியுஞ் சேர்த்துகை சோம்புத்தப்
போருகட்டுக் தேசிப்பழம் புஞ்சாறு - கூடவிட்டு
... டன்னையால் தும்பியது நாளருந்த
வேளைமிற்போம் நீரடைப்பு விட்டு.

நீரடைப்பு கல்லடைப்பு - [illegible]

85. விட்டு நெருஞ்சில்வேர் வெள்ளரியின் தன்முகை
விட்டு கருதான்றி கீழ்க்காய் - வெரிட்ட
... வேரோடு புகழுஞ் சிறுகீரை
வாளைவென்ற கண்ணாய்நீர் வார்த்து.

86. வார்த்தநீர் பெட்டொன்றாய் வற்ற ....த்து
போர்த்தபசு வெண்ணெயுமே போட்டருந்தப் - பார்த்து
நிகைத்தோடு நீரடைப்புஞ் சேருகின்ற கல்லடைப்பும்
பதைத்தோடுஞ் சொன்னேன் பார்த்து.

பெரும்பாடு தீர மருந்து

87. பார்த்துமுக் காவேளை வேர்ப்பட்டை தனை...
கரைந்துபச்சை நெல்லரிசிக் கழுநீரிற் றிருந்த
அரைத்ததனை முக்கழஞ்சு அந்திசந்தி கொள்ள
உரைத்த ...விட் டோடும்.

ஒருக்கியம் தீரப் பொடி

88. ஒருக்கியம் கொண்டு உழல்கின்ற மங்கையரே
தெருப்பை மேனிச் செருப்படையும் - நாருதனிற்
கையாந் தகரைக் கருகிப் பொடிசெய்து
மெய்யாத்தே னோடுண் ணரும்பு.

இரத்த மூலக், கிருமி தீர எண்ணெய்

89. விரும்பி இரத்தமூலம் கிருமி கிராணி
வருத்தினாற் கொள்ள மருந்து - திருந்தக்
கொட்டைக் கரந்தை கொடியறுத் சீரகமும்
இட்டெண்ணெய் காய்ச்சிடிலே ஒழும்.

வரகுணிருக்கல் தீர லேபம்

90. ஒரும் வரட்சி யிரும விளைதலக்கு
பாருநல தாளிபனை யில்லெல்லம் - வாருடனே
பச்சரிசி நெய்யும் பதம்பண்ண லேபத்தை
நிச்சயமாய்த் தின்றிட நீரும்.

அந்தி சுரம் தீர மருந்து

91. தீரவின்ற அந்திசுரம் நிச்சயமாய்த் தான்மாற
பாதிரிசெல் லகரைப் பழச்சாறு - சோறவாக்
கத்தாழை பூங்கடுக்காய் கருவேம்பட் டைபொடி
தத்ததிலே யிட்டருந்த தாக்கும்.

வன்குன்மந் தீர வெண்ணெய்

92. ஆரிய பசும்பாலை லாவதிருக்கு கன்னி
யூரிய பாத்சேர காய்ச்சியொன்றாய் - வருதயிரில்
மத்திட்டுக் தான்கடைந்த வந்தவெண்ணெய் கொண்டிட
உற்றவலி குன்மமோ டும்.

பிள்ளை பெத்த வயத்தில் சோகை தங்கிய

தீர குடிநீர்

93. ஒருபிள்ளைப் பிறந்த வுதயிறு தாய்புத்தக்
காட்டுகின்ற சோகையது கண்டேத்தாற் - போகவெங்கு
வெங்கா யம்புளுகு வேலிபருத் தியிலைகொள்
மூன்றுதால் குடிநீர் கொள்.

94. கொள்ளே திரிபலையுக் கட்டுகரிப் பாவமஞ்சள்
வில்லேயோ மப்படியு மதிதனை - மெல்லவே
தா ...ன தையருந்த தாங்குங்கா மாலைபித்தம்
வானவெல்ற கண்ணாய் மருந்து.

கர்ப்ப விப்புருதி தீர மருந்து

95. விருந்தகசு வெல்வேர்த்தோல் மாவேலி நல்லாம்
இரும்புகரும் காக்கணத்தில் வேர்த்தோல் - தி...
முன்றுமா தக்காடி முன்னி ரதிலரைத்தி
தோல்துகாய் விப்புருதி சோம்பும்.

குற்றிருமல் தீரக் குதம்

96. சோம்புநிலை வாகையில்வேர் துய்ப திரகமும்
ஆமாவி வெய்யி லரைத்ததனை - தேம்பாலத்
தேனிற் குழைத்தருத்தத் தீருமே குற்றிருமல்
வானிற்போய் விருமாம்வல் லம்.

நீர்கடுப்புத் தீர மருந்து

97. வன்னமுத்தக் காசும் வ...த்தா வரைவிரையுந்
திண்ணமுற்ற தேற்றாவின் சேர்விரையும் - திண்ணு
கவிபுளி யின்கொட்டைத் தோல்விளநீர் சேர்த்தரைத்துப்
பனியில்வைத் துண்ணீர்கடுப் பாறும்.

பெரும்பாடு தீர தேற்றாவிரை லேகியம்

98. பாறும் பெரும்பாடு பாரமாய்த் தானெடுத்தால்
ஆறும்தேத் தான்விரையை அரைத்தெடுத்துக் - கூறும்
பதக்கு ...   லேகியம்செய்
திதக்கமாய்த் தானருந்தே றும்.

பேய்நாய்கடி தீர மருந்து

99. தேறும் தெக்கல்வே ரிலை இலைப்புழுப்பும்
ஆகும் புன்னைக்காய் நல்பருப்பும் - வாகா
யரைத்த மருந்ததனை யவித் பிசறியுண்ண
வருத்தபேய் நாய்க்கடியை மாற்றும்.

பெரும்பாடு தீர நெய்

100. மாதுளைநெய் பால்நீர் வள்ளிமாவே யதன்சாறும்
போற்றுதக் கிவோதன்னித் புன்டதோல் - நாற்றிசையில்
வந்தமுகக் கையில்வேர் மாவேதன் வாரயின்வேர்
. . .   . . .   ஆறங்காம்.

101. ஆம்புமச் சர்க்கரைய தாருக் கூறங்கொருதா
ஜம்புமி யித்பனையி ளத்தொங்காம் - ஆமபோத
. . . யயிலரைத் தேகாய்ச்சி நேரே யருந்திவிடச்
செய்யபெரும் பாருவிட்டுச் செல்லும்.

நீரடைப்பு தீர மருந்து

102. செல்லுமே நீரடைப்பு தீரப் பெருநெருஞ்சான்
கல்லத்திப் பட்டை கருடனே . . .
கருகு நாயுருவி சேர்கொள்ளுஞ் வேரும்
உரிநீரை விட்டிட் டுடனே.

103. உடனேதான் காய்ச்சியத ஞட்சோக கட்டிட்டுத்
திடனாய் வடித்தநிற் சேர்க்கக்கேள் - மடநல்லாய்
காரம் போ. . .க் குறுதி யருந்திடவே
கரகல் லடைப்புவிட்டுக் கரும்.

கல்லடைப்பு தீர மருந்து

104. கருங்கம ஈச்சாறுக் குருகுஞ் சீரகமும்
நீருபஞ்ச தாரையுமே கூட்டிப் - போடவே
கல்லடைப்பு மாயுங் கடிய . . . சமதை
நல்லினவெந் நீர் கைத்த.

நீரடைப்பு தீர குடிநீர்

105. அருந்தசை புனையின்மே னாவ . . . வெல்லாம்
இருந்திமே பானத்திற் சேர்த்துப் - பாந்தொத்த
நாழிநீ ரொன்றாய் நான்நாளில் நீரடைப்பு
. . .ழுமே போகுமதைப் பார்.

மூலப் பிரமேயந் தீர மருந்து

106. பாருமே மூலம் படர்ந்த பிரமேயத்திற்
பெருமே திரிபலையுக் சித்தரத்தை - சாருமே
ஆதளையி னுத்த கிழங்காகு மக்கிழங்கு
நீதமுடன் கட்டிடுநீ தான்.

வரட்சொறடம்புறைக் தீர குடிநீர்

107. தானே வரட்சொறுத் சந்துடம்பு வந்து . . .
. . . மொருபடிநீர் சேர்த்தடுப்பில் - மானே
யுழக்காகக் காய்ச்சியதி லுற்றவெல்லம் தேசப்
பழத்தளவு விட்டருந்தப் பாயும்.

108. பாயு மதன்மிளிப்பு பன்பிளா விதைமருந்
தோயாத சுக்குமிள கோமமுடன் - காயாத
வெள்ளறுகு தூதவளை மிளகுக் காய்காயம்
உள்ளிலை வார்வெம்போ டு.

109. ஒருவளை நாகமும் ஒக்கவே தான்கட்டி
நீடு நிழலதனில் நீயுலர்த்திக் - கூடவே
சூரணமாய்ச் செய்ததனைச் சூட்ட வெருகடியாய்க்
காரணத்தி னுள்ளபடி காண்.

நீர்க்கடுப்பு தீர மருந்து

110\. காவெருக்குப் பாத்திரியைக் காலில் பெருவிரற்கள்
பதுமநகக் கல்விரல்டித் போதருத்தி - மூளைப்
புலிக்கொட்டைத் திலுவிடித் போகுமே நீர்க்கடுப்பு
அலிசேர் குழல்மாதே யன்பு.

111\. அல்புதுள சிச்சாறும் ஆவதோர் சர்க்கரையும்
இல்புதே சிப்பழச்சா றிதெல்லாம் தேன்பாக
உண்வே பித்த மயலோடு மெலவுரைத்த
வண்மது வெண்டுசெப்பு மாம்.

குன்மந்தீர மருந்து

112\. செப்புபெருந் தும்பையதித் சேருக் கொழுந்துசுக்கோ
டொப்புவெள்ள வெங்கா யமுதோகாமருடனி - தப்பா
வசம்புடனே கட்டி வருமெருமை மோரிற்
பசம்பவே பாய்ச்சுகுன்மம் பாயும்

வாயுத் தம்பனநோய் தீர

113\. பாயுங் கழற்சிப் பருப்புடன்சார் வேளைவேர்
ஒயூ புளூசுக்கோ டித்திப்பு - தாய
பெருங்காயம் வெள்ளுள்ளி யிவ்வசம்பு கட்டி
சாயமாய் தவபாண்டந் தன்னில்

114\. தன்னி லரைத்ததனைத் தான்வெள்ளாட் டின்பாலில்
மன்வேவெட் டொன்றாக வேகவைத்துச் - சொன்னேன்
இதையருந்த வாயு விருத்தியதோர் தம்பனநோய்
பதைபதைத்தே யோடிவிடும் பார்.

வாத சுரோணிதந் தீர மருந்து

115. பாரிங்கு வெள்ளெருக்குப் பாரத்த சுண்ணாம்பும்
ஓர்முருங்கைப் பட்டையுமே யொன்றாகப் - பேர்பெரிய
மருந்தினை யுண்டிட வந்த சுரோணிதமும்
இருந்தாமல் ஓடுமிதைச் செய்.

கல்லடைப்பு தீர குடிநீர்

116. செய்ய பிரண்டையின்வேர் செருசிறு சாரணைவேர்
கொய்யும் சிறாம்புகார் கோலாறு - ஐயாமற்
சிக்கபொன்னாங் காணிவேர் தேனே குடிநீரிற்
றங்குகின்ற கல்விழுந் தான்.

குலை, சொறி, சிரங்கு தீர எண்ணெய்

117. தாவேதல் வெண்ணெயுடன் சாதிலிங்கம் வெள்ளறுகு
தேனே சமனாகச் சேர்த்தயிம்பு - மாவே
யறிவுடனே காய்ச்சி யருந்தவே குலை
சொறிசிரங்கு போமெனவே சொல்.

அரையாப்பு தீர எண்ணெய்

118. சொல்லும் கொடிவேலித் அப்பவேர் சர்க்கரையும்
நல்ல வசம்புடனே நற்காயம் - வெல்லமுள்ளி
யின்னுந் தருக வேன்குதல் வெண்ணெயுடன்
கொள்ளரைப் போகுமிதைக் கூறு.

இருமல் கட்டோடே தீரக் குடிநீர்

119. சுக்கு சவம்பு கொளிஞ்சிநொச்சி வேரோடு
மாதுளுக்கா வெணசித்தா முட்டிவேர் - ஓதும்
பொருதலைச் சாக்கோரை பொக்குசக்கிள் வேரும்
கடிய தோர் வேர்ப்பலதும் காண்.

120. காழும் கடுக்காய் கரியதோர் திப்பிலியும்
புழும் பிணாய்த்தொனசி போதவே - தோழும்
வேலிப் பருத்தித்தார் வேண்டுமே நல்லிளநும்
பால்மொழியே யாறுரைத்தேன் பங்கு.

121. பங்கு எழுதலையும் பஞ்சுபதி னெண்மருந்தும்
தங்குநீர் நாலிலொன்றாய்த் தான்காய்ச்சி - பொங்கமாய்
கொண்டிடத் தாளுமற் கட்டோடே யேருமென்
வண்டவிமா தேயுரைத்தேன் வாது.

இரத்த பிரமேகந் தீர மருந்து

122. வாது முருங்கையிற்பு வன்மையுள்ள கற்றாழைச்
சோறுமா வெள்ளையுஞ் சூழ்ந்தரைத்துக் - கூடவே
உள்ள விரத்தமதா யோடும் பிரமேகம்
விள்ளிலே பாயுமுடல் விட்டு.

எரிகுன்மந் தீர மருந்து

123. விட்டேவல் லாட்டிலப்பா ...விளைதேன் காயின்பால்
இட்டேதான் திப்பிலியு மிந்துப்புந் - தட்டியே
பாகாகக் காய்ச்சிப் பதமாக் குடிக்குந்தப்
போகுமே குன்மம் புகல்.

124. புகல்கின்ற நற்செவ்வம் புரிய திரிகடுகு
இகல்... லைக்க மதனோடே - பகரும்
கருஞ்சீர சிற்றரத்தை கல்லுப்பு மஞ்சள்
அருந்தவப் பிசுலஞ் சேர்.

125. சேகுஞ் சிவநாச்சிச் சேர்ந்தபட்டைச் சாறுடனே
நீரவெள்ளாட் டுப்பாலுஞ் சேர்த்தரைத்து - நேரால
நல்லெண்ணெ யிற்காய்ச்சி நன்றாய் முழுகவர
சொல்பிசை நீர்ப்பாய்ச்சோ டும்.

வெடசுரம் சல்லி தீர எண்ணெய்

126. ஒருநத் தைச்சூரி யுடனே ரடைவெரும்
நாரும்வே லப்பகுத்தி நல்வேரும் - கூடவே
தூ தவளை வேரும் துளக்குளாய் பாகன்வேர்
ஈதெல்லாம் பட்டையே தந்.

127. நொவேம்பின் பட்டை பேத்த கருக் காய்புரு
நாதம்வெள் ளுள்ளியுட னாட்டியே - காதம்
வசம்புடனே திப்பிலியும் வந்தகுப் பைமேனி
சங்காத் துத்திவேர் காணும்.

128. காணுமருந் தெல்லாம் கூவெமதி லெவரைத்துப்
புழுமம்நல் லெண்ணெயிற் புன்டொரித்து - வேணுமே
யுள்ளருந்தி மேல்பூச ஒடும் வெ நசுரமும்
கள்ளமுள்ள சல்லியதும் காண்.

நீர்மாமுசம் நீர்ச் செறிப்புக் கல்லடைப்பும் தீர நெய்

129. கண்டேகோ முக்காரம் கல்சோகி ...
விட்டாலின் நெய்கட்டி வெயிலிட்டுக் - கொண்டேநாள்
உள்ளே செலுத்திட வோருந -...மும்
கல்லவே நீர்ச்செறிப்புக் கல்லும்.

மூத்திரப் பெருக்கு தீர மருந்து

130. தேற்றா விரைகடுக்காய் ...பூமா வாவரைவிரை
ஒத்த விளாம்பிசினோ டிந்நாள்கும் - நேர்த்தியாய்
பங்குக்குக் கால்பலமாய்ப் பகலிப்பா லிப்பருக
பொங்கிவரு நீரழிவு போம்.

சகலசுரம் சன்னிமேகம் தீர குடிநீர்

131. வல்ல சுரமதுபோ ...மொரு தோஷம்போம்
சொல்லுமெழு தோஷம்போம் சோகைபோம் - நல்லாய்கேள்
நாலவெல்லம் சுக்கு...நது நிலக்குமிழ் வேர்
காலமே காய்ச்சியுண்ணக் காண்.

பல்வலித் தீர கொப்பளிக்கும் கஷாயம்

132. மருக்காரை சுக்கு மருதந்தோல் வெள்வேல்
எருக்கா வரைபிரம்போ டேழும் - நருக்கிட்டு
நாழி... காய்ச்சி நாற்பதநாள் கொப்பளிக்கப்
பாலன்பல் லாகுமவன் பல்.

கல்லடைப்பு தீர மருந்து

133. சுக்குச் சிறுபீளை காவெருஞ்சி மாவிலிங்கை
விக்கும்பே ராமுட்டி வேரதனை - வொக்கவே
கட்டி ...க் கொள்ளவே கல்லடைப்பு
காட்டிக் கழன்றோடும் காண்.

* * * * * * * * * *

இயல் நான்கு

* * * * * * * * * *

செய்தி

நூல் செய்திகள்

'தேரையர் நோயின் சாரம்' என்னும் இந்நூலுள் வகை நோய்களுக்கான மருந்துகள் மிக எளிய முறையில் கூறப் பெற்றுள்ளன. இந்நோய்களுள் சில, பல உட்பிரிவுகளை உடையவை. சில நோய் தோன்றியதற்குரிய காரணத்தால் பெயர் பெறுகின்றன. நோய்களின் குணத்தாலும், செயலாலும் பெயர் பெறுவனவும் உண்டு. எவையாயினும் தம்முள் பல பிரிவுகளைப் பெறுகின்றன. சான்றாக, இருமல் என்னும் நோய், சளி நிறைந்திருந்தால் ஈளை இருமல் என்று பெயர் பெறுகிறது. சளியே சிறிதும் இல்லாத இருமலாயின் வறட்சி இருமல் எனப் பெறுகிறது. இவ்வாறே குத்திருமல், விக்கஷி இருமல் என்ற பெயர்களும் அமைகின்றன. இது போன்றே கரப்பன், காசம், குன்மம், சுரம் போன்றவை பல உட்பிரிவுகளைப் பெறுகின்றன.

தன்மையையும் காரணமும் அறிந்து ஏற்ற மருந்தால் குணமடையச் செய்யும் மருத்துவ முறைகளினால் ஒவ்வொரு நோய்க்கும் பலவகை மருந்துகள் அமைகின்றன. இந்த நூலுள் அவ்வாறு கூறப் பெறும் மருந்துகள் கடைச்சரக்குகள், மூலிகைகள், வேர்கள் ஆகிய எளிய பொருள்களால் ஆனவை. மருந்துகள் தயாரிப்பு முறையில் எண்ணெய் கலவை, லேகியம், கிருதம், குடிநீர், சாறு, கன்னம், சூரணம் தயிலம், நசியம், நெய் பட்டாவிநீர், புகை மருந்து, பொடி மருந்து லேபனம், வெண்ணெய் என்னும் வகைகள் கூறப்பெறுகின்றன.

நோய்களின் உட்பிரிவுகளும் அவற்றிற்காம் மருந்துகளும் பல பாடல்களில், பல விடத்தும் மாறிமாறி அமைகின்றன. எனவே அவற்றை நிரல்படுத்தி நூல் தரும் செய்திகளாக இங்கு உரைநடையில் தரப்பெறுகின்றன.

அசீரணம் பா. 10, 19, 38

1. ஓமம் ஈர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, சுக்கு, சீரகம் மோதகம் என்னும் திப்பிலி ஆகியவற்றை நன்றாகத் தட்டித் (இடித்து) தண்ணீரில் போட்டுக் காய்ச்சவும். நன்றாகக் கொதித்தவுடன் இறக்கி வடித்துக் குடிநீராகக் குடிக்கக் கொடுக்கலாம்.

2. புளகை அரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்கலாம்.

3. வெள்ளைக் காக்கணம் வேர், நறுமிளகு ஆகியவற்றை இளஞ்சூடான வெந்நீரால் அரைத்துக் கொடுக்கலாம். இவற்றால் அசீரணம் குணமாகும்.

அடைப்பு

இந்நோய் கல் அடைப்பு, நீர் அடைப்பு என்னும் இரண்டு வகைப்படுகிறது. நீர்க்கட்டு என்பதும் இதில் ஒருவகையாகும். இந்நோய்க்குக் கியாழம், குடிநீர், சாறு என்னும் மூவகையில் தயாரித்துக் கொடுக்கும் மருந்து வகைகள் உள்ளன.

கல்லடைப்பு பா. 83, 85, 86, 102, 103, 104, 116, 129, 133

சிறுநீர் இறங்கக் கொண்டிருக்கும்போதே திடீரென நீரடைத்தல், குறிமுனை நோதல், நீர்ப்புழை எரிதல், இடுப்பின் புறம்புறத்தும் முதுகுத் தண்டின் பக்கத்தும் நோதல், சிறுநீரில் மணலையொத்த கற்கள் நிறைந்திருத்தல் ஆகிய இயல்புடைய நோயாம்.

1. நெருஞ்சிச் சாறு ஒரு உழக்கு, காரம், சேவலின் எச்சம் ஆகிய இரண்டும் வகைக்கு ஒரு கழஞ்சு எடை இவற்றை நன்றாகக் கலக்கிக் கொடுக்கக் கல்லடைப்பு குணமாகும்.

நெருஞ்சிவேர், வெண்கரையின் தண்டு, சுக்கு, கடுகுரோகணி, தான்றிக்காய் கீழர்நெல்லிவேர், சிறுகீரை ஆகியவற்றை நறுக்கி நீரிலிட்டுக் காய்ச்சவும். வற்றிய நீர் எட்டில் ஒரு பாகம் ஆகச் சுருங்கும் வரை கொதிக்க விடவும். சுருங்கிய நீரை வடித்துக் கொண்டு அதில் சிறிது பசுவின் வெண்ணெயைச் சேர்த்துக் கொடுக்கக் கல்லடைப்புக் குணமாகும்.

3. பெருகுறிஞ்சான், கல்லத்தி ஆகியவற்றின் பட்டை, கடுகுரோகணி நாயுருவி வேர், கொன்றைவேர் ஆகியவற்றை அரைபடி (உரி) நீர் வற்றி காய்ச்சவும். அதில் பலகறையைச் சுட்டுப் போடவும் அந்நீரை வடித்துக் கொடுக்கக் கல்லடைப்பு தீரும்.

4. கற்றாழைச்சாறு, கருஞ்சீரகம், பசுவின் பஞ்ச கௌவியம் ஆகியவற்றை சேர்த்து வெந்நீரில் அருந்தினால் கல்லடைப்பு நோய் போகும்.

5. பிரண்டை வேர், சாரடைவேர் இரும்பு, கார்கோலரசி மருதாற்பட்டை, பொன்னாங்காணிவேர் முதலிய சரக்குகளைக் குடிநீரிட்டு அத்துடன் தேன் சேர்த்து அருந்தினால் நீரில் தங்கும் கல்விழும்.

6. கோழிக்காரம் என்னும் கடைச்சரக்கோடு பலகறையைப் பொடித்து சேர்த்து, பசுவின் நெய்யில் குழைத்து, வெயிலில் வைத்து உட் கொள்ள கல்லடைப்பு குணமாகும்.

7. சிறுகண்பீளை, நெருஞ்சில், மாவிலிங்கம், பெருமட்டி வேர் முதலிய மூலிகைகளைச் சம அளவில் சேர்த்துப் பொடி செய்து உட்கொண்டால் கல்லடைப்பு நோய் நீங்கும்.

<u>நீரடைப்பு</u> (பா. 84, 102, 105)

இதை நீர்க் கட்டிக்காய் தாபித நீரடைப்பு

<u>இயல்</u>

சிறுநீர் சுருங்கி அளவில் குறைந்து இழிதல் நீர்ப்பையும் நீர்ப்புழையும் எரிதல் வயிறு விம்மி நோதலாகிய இயல்புடைய நோயாம்.

1. கஞ்சா இலைசாற்றில் சுத்தித்த கருசையும், சுட்ட பல கறையையும் சேர்த்து அத்துடன் எலுமிச்சம் பழச்சாறு, பூச்சாறு ஆகியவற்றையும் சேர்த்துக் கலந்து இக்கலவையை அருந்த நீரடைப்பு நீங்கும்.
2. பெருகுறிஞ்சான், கல்லத்திப் பட்டை, கடுகு, நாயுருவி, கொன்றி வேர் முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்துத் தர நீரடைப்பு நீங்கும்.
3. சிறுகண் பீளையின் வேரை குடிநீர் விதிப்படி 1 நாழி காய்ச்சி. அருந்தினால் நாலாம் நாளில் நீரடைப்பு நோய் தீரும்.

நீரடைப்பு, கல்லடைப்பு (பா. 85, 86, 102, 105)

1. நெருஞ்சி வேர், வெண் சுரையின் தண்டு (சுரைக்கொடி) சுக்கு, கருகுரோகிணி, தான்றிக்காய், கீழாநெல்லி வேர், சிறுகீரை ஆகியவற்றை நசுக்கி நீரிலிட்டுக் காய்ச்சவும். ஊற்றிய நீர் எட்டில் ஒரு பாகமாக சுருங்கும் வரை கொதிக்க விடவும். சுருங்கிய நீரை வடித்துக் கொண்டு அதில் சிறிது பசுவின் வெண்ணெயைச் சேர்த்துக் கொடுக்கக் கல்லடைப்புக் குணமாகும்.

2. பெருகுறிஞ்சான், கல்லத்திப்பட்டை, கடுகு, நாயுருவி, கொளிஞ்சி, வேர் முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்துத் தர நீரடைப்பு நீங்கும்.

3. சிறுகண் பீளையின் வேரை குடிநீர் விதிப்படி 1 நாழி காய்ச்சி அருந்தினால் நாலாம் நாளில் நீரடைப்பு நோய் நீங்கும்

நீர்க்கட்டு (பா. 8)

வாழும்பசிரியை, கத்திரியுடன் சேர்த்து, பாவையிலிட்டு குடிநீர் செய்து, அத்துடன் வெங்காரம் சேர்த்துப் பருக நீர்க்கட்டு விலக. நீர் கடல் போல் பெருகும்.

அதிசாரம் (பா. 82)

இதில் உண்ட உணவு செரித்தும், செரியாததுமாய் கழியும் கீழ்க்குடல் வெதும்பியிருப்பின் அங்கு தங்க முடியாமையால் உடனே.

கழித்துவிடும். உணவில் சாரத்தை உடலுக்கு அளிக்காமல் வெளிக் கொண்டு வருவதால் அதிசாரம் எனப் பெயர் வந்தது.

அரையாப்பு (பா. 118)

கொடிவேலி வேர், சர்க்கரை, வசம்பு, பெருங்காயம் உள்ளி, இருசு போன்ற சரக்குகளை நல்லெண்ணெயுடன் காய்ச்சி வெளிப் பிரயோகமாக பயன்படுத்தினால் அரையாப்பு தீரும்.

இருமல் பா. 2, 27, 33, 119, 120, 121

இயல்

ஒட்டை வெண்கலத்தின் மீது தட்டுவதனாலுண்டாகும். ஒலியை எழுப்புதல் எனப்படும் அல்லது தொண்டை வறண்டு போவதாலெழும் ஒலியைப் போன்று கனீர் கனீரெனப் பிறக்கும்.

இவ்வொலி கபம், பித்தம் முதலியவை தொண்டை, மார்பில் சேருவதால் புண்ணாகி, அப்புண்ணிலிருந்து கசியும் கோழை, நிணநீர் சீழ், சளி முதலியவற்றை வெளியாக்க உண்டாகும் இயற்கை எழுச்சியாகும்.

1. அரத்தையை வாயில் அடக்கிச் சுவைக்க இருமல் தீரும். இதைபொடியாக்கி மூக்கிலிட பீனிசமும், சளியும் தீரும்.

2. கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், சிங்கி (மிருதார் சிங்கி கோஉ்டம் சடாமாஞ்சில், திரிகடுகு, இந்துப்பு, அரதேக்கு முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து சூரணம் செய்துண்ண தொண்டை புண்ணாகுமாறு இருமச் செய்யும் இருமலும் உப்புசமும் தீரும்.

3. தூதுவளையின் பச்சைச்சாறு, பசுவின் நெய், பால் சீரகம், திரிகடுகு முதலியவற்றை சேர்த்து கிருதமாக (நெய்யாக) செய்துண்ண சுவாசகாசம், ஈளை, இருமல் தீரும்.

4. கொளிஞ்சி, நொச்சி வேருடன், மூக்காவேளை, சிற்றா முட்டி வேர், பொடுதலை, கஞ்சாங்கோரை, சங்கம் வேர் முதலிய மருந்து வேர்களை வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கடுக்காய், திப்பிலி, பருத்தி, மிளகு முதலிய மருந்துப் பொருட்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்

வழுதலையை மேலேயுள்ள சரக்குகளுடன் சேர்த்து காய்ச்சி அருந்தினால் இருமல் கட்டோடே தீரும்.

ஈளையிருமல் (பா. 23, 27, 29)

இருமல் நோயும் (Cough), தற்பொழுது காச நோய் என்று கூறப்படும் நோயும் 'ஈளை' என்ற வேறு பெயர்களால் சித்த மருத்துவத்தில் குறிப்பிடுகிறது.

1. ஆடாதோடை, கண்டங்கத்திரி, துளசி முதலிய மூலிகைகளைச் சேர்த்துப் பட்டாவி வைக்க வேண்டும் ஆவி வைக்கப் பயன்படும் நீரில் திப்பிலி ஊறவிட வேண்டும். இதை உலர்த்திப் பொடி செய்து தக்க அனுமானத்துடன் கொடுத்தால் கொடிய காசநோய் ஓடிப் போகும்.

குற்றிருமல் (பா. 96)

சோம்பு, நிலவாகையின் வேர், திரிகடுகு, முதலிய நடைச்சரக்குகளைப் பகலில் நெய்யில் அரைத்து, பின் அதை தேனில் குழைத்தருந்த குற்றிருமல் வாஸிற்கே போய்விடும்.

வறட்சியிருமல் (பா. 90)

நறுதாளி, பனைவெல்லம், பச்சரிசி, நெய் முதலியவற்றை சேர்த்து லேகியம் செய்து உண்ண வறட்சியிருமல் தீரும்.

விச்சுழியிருமல் (பா. 41)

இரும்பை நன்கு காய்ச்சி பின் அதை மோரில் அமுத்தி அருந்-தினால் பிரமை போய்விடும், தாகம், விச்சுழி இருமல், தோஷம் தீரும்.

ஈளை (பா. 30, 33)

நோயின் இயலைப் பற்றிய விளக்கத்தை ஈளையிருமல் என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்

1. பெருங்காயம், வேலிப்பருத்தி (வேலிப்பருத்தி) சாறு, நாட்பட்ட விளக்கெண்ணை முதலிய அனைத்தையும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் வைத்திருந்து உண்ண ஈளை, பஞ்சகாசம், விக்கல் போன்ற நோய்கள் நோயாளியை விட்டு பயந்தோடிப் போகும்.

2. தூதுவளையினுடைய பழச்சாறு, பசுவின் நெய், பால், சீரகம், திரிகடுகு முதலியவற்றை சேர்த்து கிருதம் (நெய்) செய்து உண்ண சுவாசகாசம், ஈளை, மிருமல் தீரும்.

உடம்பு உலரல் (பா. 107)

ஒரு படி நீரை அடுப்பில் வைத்து உழக்காக காய்ச்சி அதில் வெண்ணெயை எலுமிச்சம் பழத்தளவு சே ர்த்துண்ண வறட்சியாலுடம்பு உலர்தல் தீரும்.

உப்புசம் (பா. 27)

கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், சிங்கி (மிருதார் சிங்கி) கோஷ்டம், சடாமஞ்சில், திரிகடுகு, இந்துப்பு, சிறுதேக்கு முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து சூரணமாய் செய்துண்ண உப்புசம் தீரும்.

கடுக்காய் நெல்லிவற்றல், தான்றிக்காய், சிங்கி (மிருதார் சிங்கி) கோஷ்டம், சடாமாஞ்சில் திரிகடுகு, இந்துப்பு, சிறு தேக்கு முதலிய பொருட்களைச் சேர்த்து சூரணம் செய்துண்ண தொண்டை புண்ணாகுமாறு இருமச் செய்யும் இருமலும் உப்புசமும் தீரும்.

எழுவாவம் (பா. 42)

எல்லா வகை கிரந்தியும், வாத, பித்த, சிலேட்டுமமும், போகுமென்று வில்லைப் போன்ற நிழலுருவ முடையவளே, தாமரை அரும்பினைப் போன்ற எழிலுருவமுடையவளே சொல்வாயாக.

கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், சுக்கு, (மிருதார் சிங்கி) கோஷ்டம், சடாமாஞ்சில், திரிகடுகு, இந்துப்பு, சிறு தேக்கு முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து சூரணம் செய்துக் கொள்ள வேண்டும்.

இதை ஒரு நாளைக்கு ஒரு கழஞ்சு வீதம் நல்ல நீரில் உட்கொள்ள எழு ஞாயிறு, ஈளை, எலிக்கடி விஷம் போன்ற நோய்கள் நீங்கும்.

ஐயம் (பா. 25, 26, 35, 36)

கபம், சிலேத்துமம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

இயல்

இது, உடலில் ஐயம் பெருகி மூக்கு நீர் பாய்தல், தொண்டையில் கோழை கட்டல், குரல் கம்மல், இருமல், வயிறு இரைந்து கடுகடுத்து வெண்மையாகவும், சீதங்கலந்தும் போதியாதலாகிய இயல்புடைய நோயாம்.

1. தாளிசபத்திரி, மிளகு, நாகம் (துத்தநாகம்), திப்பிலி முதலிய கடைச்சரக்குகளைச் சேர்த்து அத்துடன் சுகை நீறு, சுத்தித்த வங்கம் முதலிய சரக்குகளையும் சேர்த்து பக்குவமாய் சூரணம் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்த பின் இத்துடன் தேன் சேர்க்க வேண்டும். இதை நாவுவிதத அநுமானங்களில் உண்ண ஒரு நாழிகையில் ஐய நோய் தீரும்.

2. ஆடாதோடைச்சாறு, பசுவின் நெய், பால், அரிசித் திப்பிலி, யானைத் திப்பிலி, கொடிவேலி முதலியவற்றுடன் நவாச்சாரம் கூட்டி வேகவைத்து நெய் பதத்தில் இறக்க வேண்டும்.

இவ்வாறு தயார் செய்த நெய்யை ஒரு நாளைக்கு இரு வேளை உண்டால் வாத, பித்த ஐய நோய்கள், விஷ சுரம், அத்தி சுரம், தாகசுரம் முதலிய நோய்கள் போகும்.

<u>கரப்பான்</u> (பா. 48, 49, 53)

1. கொடிவேலி, சிறுகுறிஞ்சான், கருவேம்பு, குடசப்பாலை, சிவனார் வேம்பு செங்கத்தாரி, மிளகு இவைகளைச் சூரணமாக்கி உட்கொள்ள கரப்பான் தீரும்.

2. கருநொச்சி, அழிஞ்சில், கொட்டைக் கரந்தை, சில்லி முதலியவற்றை ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி அத்துடன் வசம்பு, புங்கு, நேர்வாளம், பொடி செய்த திரிகடுகையும் சேர்த்து குடித்து, மேலுக்கும் பூசினால் கரப்பான் நோய் தீரும்.

3. மலம், நீர் முதலியவை கட்டி வாயு சேர்ந்து, வயிறாதி கரப்பான் புண் வீங்கிக் கானில் அரிதரியைப் பிட்டு செய்து பசுவின் கோமியத்துடன் கூட்டி குடித்தால் ஒரு சாமத்தில் மேலே கூறிய குறிகுணங்கள் உறுதியாக நீங்கும்.

<u>பல கரப்பான்</u> (பா. 50)

செங்கத்தாரி, பட்டை, மிளகு, சில்லியிலை, சிறு குறிஞ்சான் வேர் முதலியவற்றை சேர்த்து விளக்கெண்ணெய் விட்டு காய்ச்சி அருந்தினால் எட்டு நாளில் பலவகை கரப்பான்களும் தீரும்.

அரிகரப்பான் (பா. 47)

குறிகுணங்கள்

இந்நோயில் லிங்கப் புற்று, யோனிப் புற்று முதலிய நோய்கள் உண்டாகும். புண் ஆறாமல் மிகுந்த தொல்லைத் தரும். கருச்சிதைவு உண்டாகும்.

செங்கரப்பான் (பா. 44)

குறிகுணங்கள்

குளிர்க் காய்ச்சல், புண்களில் சீழ், நாளாக வீக்கம் அவற்றில் புண் போல் வலி போன்ற குறிகுணங்கள் காணப்படும்.

தோஷ கரப்பான் (பா. 46).

தலையெதலையெரிச்சல், அத்துடன் காய்ச்சல், அரிப்பு, எரிச்சல், வலி முதலிய குறிகுணங்களுடன் வாந்தி உண்டாகும். உறுதியாக மலச்சிக்கலும் சேர்ந்து காணப்படும்.

2. செங்கரப்பானில் நெஞ்செரிச்சல் தும்மல் உண்டாகும். வாயு, கிரந்தி (புண்) உண்டாகும். மண்டைவலி, வீக்கம் போன்ற குறிகுணங்களும் காணப்படும் என்று மையிடும் கொண்டை வரிகளை உடையவளே கேட்பாயாக.

வாத கரப்பான் (பா. 43)

குறிகுணங்கள்

திமிர்க் காய்ச்சலும், வீக்கமும், மூட்டுக்களில் வலியும், பயமுறுத்தும் அவை காணப்படுவது வாத கரப்பானின் குறிகுணம் என்று செந்தாமரை முகமுடையவனே நீ செவ்வாயாக.

வாயு கரப்பான் (பா. 20, 21)

1. சாரணை, உப்பு, அரிதகி, சுக்கு சேர்த்து குடிநீரிட்டுக் குடிக்க வாயு கரப்பானின் வன்மை குறையும்.

காசம் (பா. 23)

சித்த மருத்துவத்தில் இருமல் நோயின் வேறு பெயராக 'காசம்' என்ற சொல் காணப்படுகிறது.

இதன் இயல் பற்றிய விளக்கதை 'இருமல்' என்ற தலைப்பில் தூடாதோடை, கண்டங்கத்திரி, துளசி சேர்த்து புட்டாவி வைக்க வேண்டும். ஆவி வைக்கப் பயன்படும் நீரில் திப்பிலித் தூளைப் போட வேண்டும். இதை உலர்த்திப் பொடி செய்து, தக்க அனுபானத்துடன் கொடுத்தால் சொக்கு, கொக்கென்று இரும வைக்கும் கொடிய காசநோய் ஓடிப் போகும்.

பஞ்ச காசம் (பா. 30, 31)

பெருங்காயம், வேலிப்பருத்தி, (வேலிப் பருத்தி) சாறு, நாட்பட்ட

விளக்கெண்ணை, சேர்த்து ஒரு பாத்திரத்தில் வைத்து உண்ண ஈளை, பஞ்ச காசம், விக்கல் போன்ற நோய்கள் நோயாளியை விட்டுப் பயந்தோடிப் போகும்.

சுவாச காசம் (பா. 20,33, 34)

சித்த மருத்துவத்தில் 'இரைப்பு நோய்' அல்லது "இழைப்பு நோய்" சுவாச காசம் என்ற வேறு பெயரினைப் பெற்றுள்ளது.

இயல்

இந்நோய் யாதொரு காரணமுமின்றி மார்பை வலித்து இறுக்குவது போன்ற வேதனையைத் தந்துமூச்சை வெளியிடவும் உள்ளே இழுக்கவும் முடியாமற்றுரைச் செய்யும். அன்றியும் வெளியாகும்.
மூச்சு மிகுந்த சிரமத்துடன் வெளியாவதுடன் குழல், யாழ், வீணை முதலிய.

1. பேய்க்கரை, பெரிசங்கு சேர்த்து ஆவியில் வேகவிட்டு, அதில் திப்பிலி, வெங்காரம் சேர்த்து, அக்கலவையைத் தகுந்த அளவில் தேன் சேர்த்து நன்றாக குழைத்து உண்ண சுவாசக் காசம் போகும்.

2. தூதுவளையினுடைய பழச்சாறு, பசுவின் நெய், பால் சீரகம், திரிகடுகு முதலியவற்றை சேர்த்து நெய் (கிருதம்) பாகத்தில் காய்ச்சியுண்ண சுவாசகாசம், ஈளை இருமல் தீரும்.

3. நாரத்தைப் பழச்சாற்றில் திரிபலை, திரிகடுகு சேர்த்து அத்துடன் தேத்தான் பழத்தையும் சேர்த்து அரைத்து அதில் மிருதார் சிங்கியைச் சேர்த்துக் கொடுத்தால் சுவாசந் தீரும்.

வாத்தியங்களின் ஒலியைப் போல் ஒலிக்கும். மேலும், மார்பிலுள்ள சளியை இருமி வெளியாக்க முயன்றாலும் அக்கோழை எளிதில் வெளியாவதில்லை.

காதெழுச்சி (பா. 80)

எருக்கின் சாறு, எண்ணெயுடன் வசம்பு, குன்றி, முத்தாக்காசு கோஷ்டம் முதலிய கடைச்சரக்குகளை எடுத்துக் கொண்டு இவற்றின் மொத்த எடைக்கு நேர் சமனாக இந்துப்பு திப்பிலி முதலிய கடைச் சரக்குகளை எடுத்துக் கொண்டு அனைத்தையும் சேர்த்து எண்ணெய் காய்ச்சி காதிலிட காதில் வரும் எழுச்சி போகுமா.

கிரந்தி (பா. 42, 55, 56, 57)

கிரந்தி புண், சூலை, வயிற்றுவலி, வாதகுஷ்டம் முதலிய நோய்கள் மாண்டர்க்கு நீங்க வேண்டுமென்றால் பட்டைச் சூரணம் செய்வாயாக.

பஞ்சலவணம், கருஞ்சீரகம், ஓமம் முதலியவற்றை ஒரே அளவாயிட்டு பொடித்து அத்துடன் பட்டைச் சூரணம் இரண்டு பங்கு கலந்து தின்பதற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டும்.

தேன், நெய், வேலேயுள்ள மருந்து இவை மூன்றும் சேர்த்து முக்குழஞ்சு எடுத்துக் கொண்டு காலையில் உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய பொருட்கள்

கீரைத்தண்டு, பலா, துவரை, உலர்ந்த நெத்திலி, சுறாமீன் இதுவே பத்தியமாகும். ... ப்பு

கிரந்தி கட்டு (பா. 60)

நவச்சாரம், இந்துப்பு போட்டு அரைக்கும்போது பச்சைநாபி அடப்பம் வேரை, கோஷ்டம், நேர்வாளம் முதலிய சரக்குகளைச் சேர்த்து வேப்பஞ் சாறிட்டு அரைக்க கிரந்திக் கட்டு, சூலை முதலிய நோய் தீரும்.

கிருமி உண்டாகும் விதம் (பா. 12, 19)

வயிற்றில் கொக்கிப்புழு, நாடாப்புழு போன்ற பலவகை கிருமிகள் உலவுப் பழக்கத்தாலும், காலில் செருப்பின்றி நடத்தல் போன்ற பழக்கங்களாலும் உண்டாகும். இவை அதிக அளவில் பெருகும் பொழுது வாய்வழியாகவும் வரும். மூக்கு வழியாக வர நேர்ந்தால் மரணம் அசம்பவிக்கும்.

1. புரண்டை, வேப்பீர்க்கு, புவரசு வித்து, திப்பிலி, கொள் முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து குடிநீரிட்டுப் பருக குல்மவலி போகும். கிருமி விழும்.

2. பூளைகை அரைத்து வெந்நீரில் கரைத்து அருந்த அசீரணங்கள் போகும். இத்துடன் சகல தோஷங்களும் சுரம், கிருமி போன்றவைகளும் ஓடிப் போகும்.

வாயுக் கிராணி (பா. 68, 65, 70)

இந்நோயில் நடு வயிறு உப்பல், வயிற்றில் காற்று கூடி இரைந்து நோவுண்டாதல், விலா, கழுத்து, தொடைச் சந்து, மார்பு இவற்றில் நோவுண்டாதல், அடிக்கடி பேதியாதல் முதலிய குறிகுணங்கள் காணப்படும்.

1. துளைச்சாறு, தயிர், திரிகடுகு, இந்துப்பு, அதிவிடையம், சாதிக்காய் போன்ற கடைச்சரக்குகளைச் சேர்த்து நெய்யைத் தயாரித்துக் கொடுக்க கிராணி போகும்.

2. நத்தை சதை, திரிகடுகு, ஓமம், திரிபலைச்சாறு, சீரகம்,

பெருங்காயம், கடுகு முதலியவற்றைக் காரெள்ளெயில் காய்ச்சி அருந்தினால் வாயுக்கிராணி தீரும்.

3. பேய்த்தும் மட்டிக் காயை வேகவைத்து அதில் திரிகடுகு, இந்தப்பு பொடி செய்து கூட்டி அத்துடன் விளக்கெண்ணெய் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க வாயு நீங்கும். மலங்கழியும்.

இரத்த மூலக் கிராணி (பா. 89)

கொட்டைக் கரந்தை, சீரகம், போன்ற மருந்துப் பொருட்களைச் சேர்த்து. எண்ணெய் செய்து கொடுக்க இரத்த மூலக் கிராணி நோய் தீரும்.

குன்மம் (பா. 112)

வேறு பெயர்கள் குல்மம், வயிற்றுள் புரளல், வயிற்றுள் புரளுடன் நோதல் என்பனவாகும்.

இயல்

செரியாமை, வயிற்றில் எரிச்சல், வாந்தி, உடல் வன்மை குறைதல் தேகம் மெலிதல், மனம் குன்றல் ஆகிய குணங்களையுடைய நோயாம. இது எட்டு வகைப்படும்.

பெருந்தும்பையின் கொழுந்து, சுக்கு, வெள்ளை வெங்காயம், பூண்டுடன் வசம்பையும் பொடித்து சேர்த்து அத்துடன் மோரையும் சேர்த்து உண்டால் குன்ம நோய் தீரும்.

குன்ம வலி (பா. 12)

குன்மத்தைப் பற்றிய விளக்கத்தை 'குன்மம்' என்ற தலைப்பின் கீழ் பார்க்கவும்

பிரண்டை, வேப்பிர்க்கு, பூவரச விதை, திப்பிலி, கொள் முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்துக் குடிநீரிட்டுப் பருக குன்ம வலிபோகும்.

அட்ட குன்மம் (பா. 16)

குன்மம் எட்டு வகைப்படும் அவையாவன 1. வாயு குன்மம் 2. வாத குன்மம், 3. பித்த குன்மம், 4. எரி குன்மம் 5. வலி குன்மம், 6. சத்தி குன்மம். 7, சன்னி குன்மம் 8. ஐய குன்மம்.

சோம்பு, சீரக மண்டூரம், முதலியப் பொருட்களைச் சுத்தித்துப் பொடி செய்து அத்துடந்நாயுருவிச் சாம்பல், மிளகுப் பொடி முதலியவற்றை சம அளவு எடுத்து சேர்த்து. மொத்த அளவிற்கு எட்டிலொரு பங்கு பெருங்காயம் பொரித்து சேர்த்து மொத்தப் பொடிகளையும் நன்கு கலந்துக் கொள்ள வேண்டும்.

இதில் ஒரு வேளைக்கு ஒரு கழஞ்சு அளவு உண்ண அட்ட குன்மம் போகும்.

வலி குன்மம் (பா. 92)

இது எட்டு வகை குன்மங்களிலொன்றாகும்.

குறிகுணங்கள்

உண்ட உணவு செரியாமை, வயிற்றில் காற்றுக் கூடி வயிறு ஊதல்,

விலாப்பக்கம் முள் சொருகியது போல் குத்தல், முதுகுத் தண்டும் இருப்பும் வலித்தல், உடல் முழுமையும் கடுத்தல் போன்ற குறிகுணங்கள் காணப்படும்.

பசும் பாலில் திருகுக் கள்ளியின் பாலை சேர்த்து காய்ச்சி, பின் அந்தப் பாலை தயிராக்கி அதை மத்து போட்டுக் கடைந்து வரும் வெண்ணெயை உண்ண வலி குன்மம் நோய் நீங்கும்.

ஒடு குன்மம் (பா. 88)

குப்பை மேனி, சிறு செருப்படை, கையாந்தகரை அனைத்தையும் பொடி செய்து தேனில் கலந்துண்ண ஒடு குன்மம் தீரும்.

வாத குன்மம் (பா. 70)

இது எட்டு வகை குன்மங்களிலொன்றாகும்.

குறிகுணங்கள்

வயிற்றுள் நோவு, தலைவலி, உடல்வலி, உடல் கருத்தம், மலம் கட்டுப்படுதல் முதலிய குறிகுணங்கள் காணப்படும்.

பேய்த்தும்மட்டிக் காயை வேக வைத்து அதில் திரிகடுகு, இந்துப்பு போன்ற மருந்துப் பொருட்களைப் பொடி செய்து கட்டி அத்துடன் விளக்கெண்ணெய் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க வாயு நீங்கும் மலங்கழியும்.

சத்தி (பா. 6, 14)

வாந்தி நோயின் வேறு பெயர் சத்தி' என்பதாகும்.

உண்ட உணவு, குடித்த நீர் இவை சொர்த்தேனும், செரியாமை லேனும் விரைவாக மேல் நோக்கி வருவது வாந்தியாகும்.

1. பெரிய இலந்தை, புளியாரை போன்ற மூலிகைகளைக் காடியில் கரைந்து, மத்திட்டுக் கடைய வேண்டும். அப்பொழுது நுரை போன்று மேலே வரும். அதை நெற்றியில் பூச வாந்திபோகும்.

2. பருத்தி விதை, நெற்பொரி, சிறு திப்பிலி, அரிசி திப்பிலி ஏலம் முதலிய கடைச்சரக்குகளை நன்கு பொடி செய்து சர்க்கரை, தேன் சேர்த்து நன்றாக குழைத்துண்ண விக்கல், வாந்தி முதலிய நோய்கள் போகும்.

சன்னி (பா. 81, 126, 127, 128, 131)

இது முப்பிணி நோய், முக்குற்ற நோய் எனவும் பெயர் பெறும்

இயல்

ஏதேனு மோர் நோயால் பிடிக்கப்பட்டிருக்கும் நோயினருக்கு வளி, அழல், ஐயம் மூன்று நாடிகளும் ஏகோபித்து தத்தம் அளவில் மிகுந்த தெழுந்தால் பல வித குறிகுணங்களையும், துன்பங்களையும் விளைவிக்கும் போது இதனைச் சன்னி நோய் என்பர். பெரும்பாலும் இது சுர நோயைத் தொடர்ந்து வரும்.

வசம்பு, உள்ளி, நாகம் முதலிய மருந்துப் பொருட்களைச் சேர்த்து அத்துடன் வேப்பெண்ணெய் கலந்து எண்ணெய் காய்ச்சி அதை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச சன்னி நோய் போகும்.

2. நத்தைச் சூரி, சாரணைவேர், வெலிப்பருத்தி வேர் தூதுவளை வேர், விளா வேர், பாகல் வேர் இவை அனைத்தையும் பட்டையுடன் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்துடன் வேப்பம்பட்டை, கடுக்காய், மிளகு வெள்ளுள்ளி வசம்பு திப்பிலி, குப்பை மேனி, துத்தி வேர் இவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலே காணப்பட்ட அனைத்துப் பொருட்களையும் கல்வத்தில் அரைத்து அத்துடன் நல்லெண்ணெய் சேர்த்து அதில் புண்டு சேர்த்து எரித்து அதை உள் பிரயோகமாகவும் வெளிப் பிரயோகமாகவும் பயன்படுத்தினால், சன்னி, விடசுரம் முதலிய நோய்கள் நீங்கும்.

3. தீராத கொடிய சுரம் (சன்னி, தோடம், சோகை போக வெல்லம் சுக்கு, நிலக்குமிழ் வேர் முதலிய சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சியுண்ண வேண்டும்.

சிலேத்தும நோய் (பா. 32, 42)

இதை ஐய நோயென்றும் சொல்வார்கள்.

இதைப் பற்றி விளக்கத்தை 'ஐயம்' என்ற தலைப்பின் கீழ் பார்க்கவும்.

1. கையாந்தகரை சாற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்து, அதில் கடுக்காயைப் பொடித்து சேர்த்து வேக வைத்து இறக்கி தினம் அதில் ஒரு கழஞ்சு வீதம் எட்டு நாள் தின்ன சிலேட்டுமத்தால் வந்த பிணிகள் இக் கடுக்காயின் பெயர் சொன்னப் பொழுதே ஓடிப் போகும்.

2. எல்லா வகை கிரந்தியும், வாத, பித்த, சிலேட்டுமமும் போகுமே. வில்லைப் போன்ற நிழவுருவமுடையவளே, தாமரை அரும்பினைப் போன்ற எழிலுருவமுடையவளே சொல்வாயாக.

சுரம் (பா. 19)

சர் + அம் -- சுரம்

சுர் - சுடுதல்

அம் - உடையது

சுரம் - சுடுதலை உடையது எனப்படும்

சுரநிலம் போலச் சுடுநோய்ச் சுரமென்
றுரைப்பர் செரிகலத் துண்டா மனலம்
நரம்பின் வழியே நன்னிறு டம்பில்
பெருகும் வெப்பம் பிழைசெய் நோயே.

இதன் பொருள்

"சுரம்" என்னும் சொல் பாலை நிலத்தைக் குறிக்கும் பாலை நிலம் வெப்பத்தைத் தனக்குச் சிறப்பாகக் கொண்டிருப்பது போல "குச்சியனல்" (உயிரனல்) தன்னிலை விட்டு மாறிப் புறநிலைப் புறங்களில் பரவுமாயின் ((அதாவது புற உடலிற் பரவுமாயின்) அதனை "சுரம்" காய்ச்சல், "வெம்மை", வெப்பு', "காந்தல்", 'காங்கை', 'சூடு', தழல், அனல், பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய் "பம்ம நோய்" எனப் பல பரியாயப் பெயர்களால் அழைக்கப்படும் இதை.

"வெம்மை, வெப்பு வெழுக்குங் காய்ச்சல்
தும்மாக் காங்கை சூடுதழல் அனல்
சும்மைப் பிறப்பிறப்பில் தொடர் நோய்
பம்ம நோய் காந்தல் பல பெயர் சுரத்கே"

என்றப் பாடலால் அறியலாம்.

இயல்

உடலின் இயற்கைச் சூடு தன்னளவுக்கு மிக்சி எழுந்த உடல்

முழவதுமோ அல்லது சில பாகங்களிலோ அதிக வெப்பமாயிருதல் கண் எரிவு, வாய்க்குமட்டல், வாந்தி, தலைப்பாரம் அல்லது தலைவலி உடம்புவலி முதலிய பலகுறிகுணங்களைத் தோற்றுவிக்கும் நோயாகும். இது தனித்து (தனி நோயாக) வருவது மன்றி மற்ற நோய்களுக்குத் துணை நோயாகவும் வரும் சுரம் 64 வகையாக சித்த மருத்துவத்தில் கூறப்படும் அவை இரு பெரும் பிரிவுகளில் அடங்கும். அவை தன் வழிச் சுரங்கள், பிற வழிச் சுரங்கள் தன் வழிச் சுரங்கள் 52 எண்ணிக்கையும் பிற வழிச் சுரங்கள் 12 எண்ணிக்கையாகவும் உள்ளது. தன்வழிச்/சுரங்கள் 52ல் உட்காய்ச்சல் என்னும் சுரமும் வருகின்றது. இந்நூலில் அதற்கு மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

விளகை அரைத்து, வெந்நீரில் கரைத்து அருந்த அசீரணங்கள் போகும். இத்துடன் சகல தோஉஷங்களும் சுரம், கிருமி போன்றவைகளும் ஓடிப் போகும்.

<u>உட்காய்ச்சல்</u> (பா. 22)

தன் வழிச் சுரங்கள் 52ல் இதுவுமொன்று

<u>இயல்</u>

இது உடலின் உட்புறமாகக் காயும் இயல்புடையது. உடல் வன்மை குறைந்தவர்களுக்கு சுரம் வெளியே தெரியாமல் உடலின் உள்ளேயே காயும்.

<u>குறிகுணங்கள்</u> சோகம் மனத்தளர்வு, கை, கால் ஓய்ச்சல், உணவு வாய்குமட்டல், உடல் வெளுத்தல், தலை நோதல், எப்போதும் சுரம் உள்ளுக்குள் காய்வது போலிருத்தல், வெள்ளோக்காளம், உடல் மெலிதலாகிய குறிகுணங்களை உண்டாகும்.

மேக நோய்க்கும், உட்காய்ச்சல், பிரமேயம் போன்ற நோய்களுக்கும் பேயன்பழத்தில் சர்க்கரையும் சீரகமும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

<u>அஸ்திசுரம்</u> (பா. 35, 36, 91)

இது எலும்பைப் பற்றி உண்டாகும் சுரமாகும்.

<u>குறிகுணங்கள்</u>

மிகுந்த நீர்வேட்கை, மிகுந்த சுரம், உடல் இளைத்து வெளுத்துப் போதல், செரியாமை, கழிச்சல், அடிவயிறு நோதல், நரம்புகள், கீல்கள் நோதல், உடலின் உறுப்புகள் சுருங்கி உடல் நிறம் வேறுபடுதல், கண் மஞ்சளித்தல், தலையை அசைக்க முடியாமை; அசைக்கின் உடல் முழுவதும் பொரிதும் நோதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

1. ஆடாதோடைச்சாறு, பசுவின் நெய், பால், அரிசித் திப்பிலி, யானைத் திப்பிலி, கொடி வேலி முதலிய சரக்குகளுடன் நவாச்சாரம் கூட்டி வேக விட வேண்டும்.

இவ்வாறு வேக வைத்த நெய்யை ஒரு நாளைக்கு இரு வேளை உண்டால் போகும்.

2. செவ்வகரைப் பழச்சாறு, சோற்றுக் கற்றாழையில் கடுக்காய், கருவேம்பட்டை பொடித்ததைச் சேர்த்து அருந்த வேண்டும்.

<u>பித்த சுரம்</u> (பா 4)

இது தன் வழிச் சுரங்களில் ஒன்றாகும்.

குறிகுணங்கள்

அதிகமான சுரம், அதிகமாக மூச்சு வாங்கல், கண்களை மிரட்டிப் பார்த்தல், சிந்தை அழலல், மயிர் கூடச்செறிதல், கண்ணும் மூக்கும் சிவத்தல், உடல் செந்நிறமடைதல், வாய் கைத்தல், அதிதாகம், வாய் புதற்றல், ஒக்காளம், கழிச்சல், இடைவிடாமற் சுரங்காய்தல் போன்ற குறிகுணங்கள் காணப்படும்.

பாவட்டை, சிற்றாமுட்டி, வெளிப் பருத்தி வேர், நான்கு மூளை போன்ற மருந்துப் பொருட்களைச் சேர்த்துக் குடிநீரிட்டு அருந்த வேண் டும்.

சிலேட்டும சுரம் (பா. 5)

இதுவும் தன் வழிச் சுரங்களில் ஒன்றாகும்.

குறிகுணங்கள்

மிகு சுரம், முகம், நா, நகம் இவை வெளுத்தல், இருமல், இளைப்பு, மார்பு நோதல், வாயுளித்தல், காதிரைச்சல், போன்ற குறிகுணங்களுடன் முப்பிணி (சன்னி) குறிகுணங்களையும் உண்டாக்கிக் கொல்லும்.

திப்பிலி, ஆடாதோடை, சுக்கு, சித்தரத்தை, ஓமம், கண்டங் கத்திரி முதலியவற்றை சேர்த்துக் குடிநீரிட்டு அதில் தேன் சேர்த்து அருந்த வேண்டும்.

வாத சுரம் (பா. 3)

இதுவும் தன் வழிச் சுரங்களில் ஒன்று.

குறிகுணங்கள்

உடல் கருநிறமடைதல், மிகுதியான சுரம் காய்தல், சந்துகளில் குத்தல், தலை கனத்தல், தலைவலி, உப்பிசம், மந்தம், மலம் வறளல்,

முகம் நீர் கொள்ளல், இருமல், நெஞ்சில் நோவு, ஆகிய குறிகுணங்களில் சில அல்லது பல காணப்படும். பத்து தினங்களில் வலிச்சுரம் குணமாகா விடில் இச்சுரத்துடன் பல்வேறு நோய்கள் தொடருமென தேரன் மருத்துப் பாரத்தில் கூறப்பட்டுள்ளது.

மருந்து

அரத்தை, சதகுப்பை, சுக்கு முதலிய கடைச் சரக்குகளை நொச்சிச் சாற்றில் அரைத்து நன்கு காய்ச்சி அருந்த வேண்டும்.

தல சுரம் (பா. 37)

முதி யார் கடந்தலை எடுத்து அதன் வேரை அரைத்து இள வெந்நீரில் உண்ண வேண்டும்.

குளிர்சுரம் (பா. 37)

இது தன் வழிச் சுரங்கள் வகையைச் சேர்ந்தது.

இது நளிர் சுரம் எனவும் கூறப்படும்.

குறிகுணங்கள்

மயிர் சிலிர்த்தல், குளிர் நடுக்கல், தலைவலி, கண்ணில் நீர் வடிதல், பித்த வாந்தி, மயக்கம், முதலிய குறிகுணங்களைக் காட்டி சுரம் விட்டு விடும் அப்பால் ஒரு நாள் விட்டு ஒரு நாள், அல்லது மூன்று நாளக்கொரு முறை, நான்கு நாளைக்கொரு முறை, ஒன்பது நாளைக்கு ஒரு முறை எனவும் வருவதுண்டு.

மருந்து

முதியார் கடந்தலை எடுத்து அதன் வேரை அரைத்து இளவெந் நீரில் கொடுக்க வேண்டும்.

தாக சுரம் (பா. 35)

இதுவும் தன் வழிச் சுரங்களிலொன்று. இது வேறை சுரம் எனவும் பெயர் பெறும்.

இயல்

இதில் பெருந்தீ போல மிகுந்த அனலுடன் சுரங்காயும் அதிகமான நீர் வேர்ட்கை, வயிறு, கை, காலெரிச்சல், நாவறலை, பல் கடித்தல், வாய் பிதற்றல், படுக்கையில் புரளல் அல்லது எழுந்து ஓடல் பெரும்செறிதல் முதலிய குறிகுணங்கள் காணப்படும்.

மருந்து

ஆடாதோடைச் சாறு, பசுவின் நெய், பால், அரிசித்திப்பிலி யானைத் திப்பிலி, கொடிவேலி முதலிய மருந்துப் பொருட்களுடன் நவாச்சாரம் கூட்டி வேகவிடவேண்டும்.

இவ்வாறு வேக வைத்த நெய்யை ஒரு நாளைக்கு இருவேளை உண்ண வேண்டும்.

சகல சுரம் (பா. 131)

வெல்லம் சுக்கு, நிலக்குமிழ் வேர் முதலிய சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி உண்ண வேண்டும்.

ஊடுசுரம் (பா. 126, 127, 128)

இது புறவழிச் சுரங்கள் 12ல் ஒன்றாகும்.

வேறு பெயர்கள்

நஞ்சுச் சுரம், நச்சு சுரம்

இயல்

இது நஞ்சுத் தன்மையுடைய வண்டுகள், பூச்சி, புழுக்கள் கடிப்பதாலுண்டாகும் சுரமாகும்.

குறிகுணங்கள்

கடித்த இடத்தில் வீக்கம் காணப்படல், அரிப்பு, எரிச்சல் உடல் முழுமையும் அல்லது முகத்திலேனும் நீர் கோர்த்து உப்புதல் சுரங்காய்தல் விக்கல், செரியாமை, பச்சை நிற வாந்தி, மயக்கம் மூர்ச்சையாகிய குறிகுணங்கள் காணப்படும்.

மருந்து.

நத்தைச் சூரி, சாரடை வேர், வேலிப்பருத்திவேர், தூதுவளை வேர் விளா, பாகல் வேர், இவைகளின் பட்டைகள் முதலியவற்றுடன் கடுக்காய், மிளகு, வெள்ளுள்ளி வசம்பு, திப்பிலி, குப்பைமேனி துத்தி வேர் இவைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மருந்துப் பொருட்களைக் கல்வத்தில் இட்டு அரைத்து அத்துடன் நல்லெண்ணெய், பூண்டு சேர்த்து எரித்து அதை உள், வெளிப் பிரயோகத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

சூலை (பா. 19, 55, 56, 60, 117)

வேறு பெயர்கள்

முடக்கு நோய், குத்தல் நோய், குடல் வலி, குடல் முறுக்கு

நோய் எனவும் பெயர் பெறும்.

இயல்

சூலம் போன்ற கருவியால் குத்தல்காலுண்டாகும் வலியையொத்த நோய் இரைப்பை, குடல் பக்கம் (விலா), மூட்டுகள் இவைகளிலும் குத்தலுண்டாக்கும் நோயாகும்.

இந்நோயுண்டாகும் இடத்தைப் பொருத்தும், குற்றங்களைப் பொருத்தும் பெயர்கள் அமையும் உதாரணமாக விலாப்பக்கங்களில் இந்நோய் வரின் 'பக்க சூலை' எனவும், வயிற்றிலுண்டாயின் 'ஆமசூலை' எனவும், குற்றயளவாக வருபவைகளை வளி, அழல், ஐயம் என்ற அந்தந்த தோடங்களின் பெயரால் சூலை என்றும் அழைக்கப்படும். சிலகளில் மேக நோயால் வரும் சூலை மேகசூலை' எனப்படும்.

மருத்துவம்

1. முளைகை அரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்க வேண்டும்.

2. பஞ்சலவணம், கருஞ்சீரகம், ஓமம் முதலியவற்றை ஒரே அளவாயிட்டு அத்துடன் பட்டைச் சூரணம் இரண்டு பங்கு கலந்து அன்பதற்கேற்ற வாறு பொடித்துக் கொடுக்க வேண்டும்.

அளவு

தேன், நெய், மேலேயுள்ள மருந்து இவை மூன்றும் சேர்த்து முக்கழஞ்சு எடுத்துக் கொண்டு காலையில் உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய பொருள்கள்

கீரைத்தண்டு, பலா, துவரை, உலர்த்திய நெத்திலி, சுறாமீன் இதுவே பத்தியமாகும்.

தசமூலம் (பா. 72)

கடுக்காய் ஆமாழத்தில் நெய் விட்டு கருநெல்லியை அரைத்து

சேர்த்துப் பக்குவம் பார்த்து வடித்துண்ண வேண்டும்.

தாகம் (பா. 72)

இரும்பைக் காய்ச்சி மோரில் அமுத்தி எடுத்துப் பின்பு அந்த மோரை அருந்த வேண்டும்.

தோஉஷம் (பா. 41)

இயலும் நோய் வரும் வழியும்

தோடம் என்றால் தொடுதல் எனப்பொருள்படும். இவை கையாற் றொடல், கண்ணாற்றொடல், வாயாற்றொடல் என மூன்று வகைப்படும் நவீன மருத்துவத்திலும் தொட்டால் நோய் உண்டாகிறது என்ற கருத்து உள்ளது.

தோடம் பட்சி, பறவை, புள், எட்சி, எச்சில், பெண், ஆண் தேரை போன்றவைகளால் ஏற்படுகிறது.

இரும்பைக் காய்ச்சி மோருக்குள் அமுத்தி எடுத்து அந்த மோரைப் பருக வேண்டும்.

சகல தோஉஷம் (பா. 19)

மிளகை அரைத்து வெந்நீரில் கரைத்து அருந்த வேண்டும்.

தோடத்தின் வகைகள் இருபத்தைந்தாகும்.

துன் மாமிசம் (பா. 129)

கோழிக்காரம் என்னும் கடைச் சரக்கோடு பலகறையைச் சுட்டுப்

பொடித்துச் சேர்த்து அத்துடன் பசுவின் நெய் சேர்த்துக் குழைத்து வெய்யிலில் வைத்து உட் கொள்ள வேண்டும்.

தேரை தோஷம் (பா. 71)

குறிகுணங்கள்

சதை வற்றி உடம்பு உலரும். நெஞ்சு கூடாகும். கண்சுரத்துக் காணும். கால், கைகள் முடங்கிப் போகும். வயிறு பக்கவாட்டில் புடைக்கும். மலந்தீதல், வாயுலர்தல், நீர்வேட்கை, தொப்புள் மலரல் போன்றவைகளுடன் குரலும் மாறும், குழந்தையினது முகம் வாடிவிடும் காது சரியாக கேட்காது. பால் குடிக்காது: மேல்மூச்சு வாங்கும் கை, கால்கள் வறண்டு போகும். கால் கைகளைக் கட்டிப் போட்டது போன்று உடல் சோர்ந்து காணும். எவ்வளவு பால் குடித்தாலும் உடம்பு தேறாது.

பட்சி தோஷம் (பா. 71)

நோய்கண்ட பறவைகளின் காற்று குழந்தைகளின் மேல் அதிகாலையிலோ முன் மாலையிலோ படுமேயானால் தோஷம் உண்டாகும்.

குறிகுணங்கள்

சில குழந்தைகளுக்கு வயிறு மட்டும் உப்பும். சில குழந்தைகளுக்கு வயிறு உப்பிபுடன் தண்ணீர் போல கழிச்சலாகும். அதனுடன் வாந்தியுமாகும். இவ்விரண்டும் சேர்ந்து நடைபெறுவதால் கண்குழி விழுந்து காணப்படும். கண்ணில் அதிகமாக பீளைகட்டும். கழுத்து நீண்டு முகம் சுருங்கிக் காணப்படும். தலை கனமாகும். அதனால் தலையைத் தூக்க முடியாது. பால் சரியாக

உண்ணாது. நீர் பருகாது. சில சமயங்களில் அதிக காய்ச்சலும், சில சமயங்களில் குறைவான காய்ச்சலும் இருக்கும். சில சமயம் பேய் பிடித்தவர் போல குழந்தைப் பதறி அலறும். பெருங்குரலில் அழும்.

நீர்க்கடுப்பு (பா. 97, 110)

வேறு பெயர்

நீரடங்கல்

இயல்

நாழிகைக் கணக்காய்ச் சிறுநீர் பெய்யாமலேயிருப்பினும் நீர்ப்பை நிறையாதிருத்தல், நீர்ப்புழை வழியே கசலர கையுடினும் சிறு சொட்டு நீரும் வெளியாகாதிருத்தல் என்னும் இயல்புடைய நோய்.

நோய் வரும் வழி

இந்நோய் இருவழியாக வரக்கூடும்.

1. நீர்க்குண்டிக் காயில் (பிருக்கம்) (Kidney) உண்டாம்; கறிகள் நீர்க்குண்டிக் காயில் புழையை அடைத்தல், அதன் காரணமாக நீர்க்குண்டிக் காயில் சுரக்கும் நீர் வெளிவராமல் தடைப்பட்டு நீர்ப்பையில் நீர்ப்போய்ச் சேராதிருத்தலாம் அல்லது பிறவியிலேயே நீர்க் குண்டிக்காயில் புழை அடைபட்டிருத்தல் அல்லது நீர்க்குண்டிக்காயில் புழையில் கட்டி கழலைகள் இவைகள் உண்டாதல்; இவ்வாறு ஏற்படும் தடைகளால் சிறுநீர், நீர்ப்பையில் வந்து சேராமையும் வெளியாகாமையும் இந்நோய் ? பிறப்பது ஒரு வகையாம்.

2. மற்றொரு காரணம் யாதெனில், நீர்க்குண்டிக்காய் அழல் குற்றத்காலும் அல்லது ஐயப்பெருக்காலும் அல்லது அழலையக் கலாப்பாலும் தாபிதமடைந்து ஒற்கை நீரைப் பிரித்து வெளியாக்கும் தொழிலை நிறுத்தல் அல்லது நீர்க்குண்டிக் காயின் நீர்ப்புழைகளில் குருதி கட்டி அதன் காரணமாக நீரானது நீர்பைக்கு வரத் தடைப்படல் அல்லது நீர்ப்புழைகள் அடிபட்டு நசுங்குதல், அல்லது நஞ்சு உட்கொள்ளல், மிகுந்த பேதி, வாந்தி, வியர்வை முதலிய கடுமையான நோய்களாலும் சிறுநீர் உற்பத்தியாகாது இந்நோய் ஏற்படுவது மற்றொரு காரணமாகும்.

அன்றியும் நீரழிவு நோயின் கடையிலும் இந்நோய் வரும்.

குறிகுணங்கள்

ஒரு பக்கத்து நீர்க்குண்டிக்காயின் புழைகள் (ureters) கேடடையின் அதிகத் தீங்குளில்லை எனலாம். ஆனால் இரண்டு பக்கத்து நீர்க்குண்டிக்காயின் புழைகள் அடைபடின் மிகுந்த தீங்குகளை விளைவிக்கும் அவைகளாவன.

1. சிறுநீர் முற்றிலும் கட்டுப்பட்டுச் சிறிதும் இறங்காமை, மயக்கம் தலைச்சுற்றல் இவற்றையுண்டாக்கி வெகு சீக்கிரத்தில் படுக்கையில் கிடத்தும். அரட்டல், புரட்டல், கை, கால்கள் சில்லிடல், நாவறட்சி, கொறுக்குவலி (Tetanus), கண்மணி சுருங்கல் என்னும் குணங்களைக் காட்டிக் கொல்வதுமுண்டு.

2. ஒரு பக்கத்து நீர்க்குண்டிக்காயில் புழை அடைபட்டிருப்பின் முற்கூறியது போல தடையதிகமில்லாதிருப்பினும் தாபிதத்தால் நீர்ச் சுரப்புக் கட்டுப்பட்டு நீரானது சிறு அளவில் கடினப்பட்டு வெளியாகும். செந்நிறத்தோடு நீரிறங்கும். உடலில் பிசுபிசுத்த வியர்வையுண்டாகும். மூச்சுத் தடுமாறல், மயக்கம், உடல் சோர்பு முதலிய குறிகுணங்களையு முண்டாக்கும்

முத்தக்காசு, தேற்றான் வித்து, புளியங்கொட்டைத் தோல் முதலிய சரக்குகளை இளநீரில் அரைத்து பின் அதை பனியில் வைத்து உண்ண வேண்டும்.

